விலை: ரூபா 20 பக்கங்கள் 28

இதயன்

வானிலை
கூ.வெ. 30 °C
கு.வெ. 29 °C
தெளிவான வானிலை

சுடர் 30 கதிர் 240 வள்ளுவர் ஆண்டு 2046 ஆடி 8, வெள்ளிக்கிழமை 24.07.2015

கட்சிகளின் செயலர்களுக்கு மாத்திரம் பாதுகாப்பு

கொழும்பு, ஜூலை 24
நாளை நடைபெறவுள்ள தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகளின் செயலாளர்கள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் தலைவர்களுக்கு மாத்திரம் பொலிஸ் பாதுகாப்பு வழங்குவதற்குத் தேர்தல்கள் ஆணை

பக்கம் 24

இளைஞர் மீது கொடூரமான கத்திக் குத்து

வவுனியா, ஜூலை 24
வவுனியா ஏ-9 வீதியில் பஸ் தரிப்பிடத்துக்கு முன்னால் நின்ற இளைஞர் ஒருவர் ஓட்டோ ஒன்றில் வந்த இனந்தெரியாத நபர்களின் மோசமான கத்திக் குத்துக்கு இலக்காகிப் படுகாயமடைந்தார். அவர் உடனடியாக

பக்கம் 21

மஹிந்த 25,000, ரணில் 31,000 அரச ஊழியர் சம்பளம்

கொழும்பு, ஜூலை 24
இரு பிரதான தேசியக் கட்சிகளும், அரச ஊழியர்களுக்கான அடிப்படைச் சம்பளத்தை அதிகரித்து வழங்குவதாக, வாக்குறுதிகளை ஏட்டிக்குப் போட்டியாக அள்ளி வீசி வருகின்றன. அரச ஊழியர்களுக்கு அடிப்படைச் சம்பளமாக 25 ஆயிரம் ரூபா வழங்கப்படும் என்று

பக்கம் 21

வடக்கு மாகாண சபை அமர்வு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 24
நாடாளுமன்றத் தேர்தல் காரணமாக, வடக்கு மாகாண சபையின் அமர்வு தேர்தல் முடியும் வரையில் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. அத்துடன் தேர்தல் காரணமாக நேற்றைய அமர்வில், சர்ச்சைக்குரிய வினாக்கள் மற்றும் பிரேரணைகள் என்பனவும் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட

பக்கம் 24

ஐ.நா. சிபார்சுகளையும் உள்வாங்கி உள்ளக விசாரணைப் பொறிமுறை

போர்க்குற்றம் பற்றி ஐ.தே.மு. தேர்தல் விஞ்ஞாபனத்தில் பரிந்துரை

கொழும்பு, ஜூலை 24
இறுதிக்கட்டப் போரின்போது இடம் பெற்றவை எனக் கூறப்படும் போர்க் குற்றங்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் அறிக்கையின்படி உள்ளக விசார ணைப் பொறிமுறை வகுக்கப்படும் என ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் உறுதியளித்துள்ளது.

இது சம்பந்தமாக ஐ.நாவுடனும் அதன் அங்கத்துவ நாடுகளுடனும் பேச்சு நடத்தப்படும் என்றும் அதில் கூறப் பட்டுள்ளது. அத்துடன், இலங்கையின் அனைத்து சமய, இனக் குழுக்களுடனும் கலந்துரையாடப்பட்டு உள்நாட்டு சட்டதிட்டங்களுக்கமைய தீர்வு காணப்படும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.
ஜூலை மாதத்திலிருந்து உள்ளக

பக்கம் 24

வாக்குச் சிதறும் நிலை குறித்து ஆயர் கவலை

தமிழ்க் கூட்டமைப்புடனான சந்திப்பில் நேற்று தமிழர் ஒற்றுமையை நிலைநாட்டவும் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஜூலை 24
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் புதிது புதிதாகக் கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் களமிறங்கியுள்ளதால், தமிழ் மக்களின் வாக்குகள் சிதைக்கப்படுமோ என்று கவலையாக இருக்கின்றது. தமிழ் மக்களின் ஒற்றுமை நிலைநாட்டப்படவேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஸ்திரத்தன்மையை தொடர்ந்தும் பேணுவதற்கு, கடுமையாகப் பணியாற்ற வேண்டும்.
இவ்வாறு யாழ்.மறை மாவட்ட ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை, கூட்டமைப்பினருடனான சந்திப்பில் தெரிவித்துள்ளார்.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாவை.சேனாதிராசா எம்.ஏ. சுமந்திரன் மற்றும் வடக்கு மாகாண சபை உறுப்பினர் இ.ஆனோல்ட் ஆகியோர், யாழ்.மறைமாவட்ட ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையை நேற்று மாலை சந்தித்துப் பேசினர்.

பக்கம் 24

டக்ளஸின் ஆள்கள்தான் பிள்ளைகளை பிடித்தவர்கள் என்று சாட்சி சொல்வேன்

முன்னாள் அமைச்சருக்கு முன்பாகவே நேற்றுக் குமுறினார் தாய்

யாழ்ப்பாணம், ஜூலை 24
முன்னர் எமது பிள்ளைகளை கைது செய்யப்பட்டபோது, காணாமற்போனபோது, டக்ளஸ் தேவானந்தா அமைச்சராக அரசுடன் சேர்ந்து நின்றவர். டக்ளஸின் ஆள்கள்தான் பிள்ளைகளைப் பிடித்ததென்று இப்பவும் சாட்சி சொல்லுவேன். டக்ளஸின் ஆள்கள்தான் பிடித்தவர்கள் என்று வேறு பலரும் சொல்லியிருந்தார்கள். பெற்ற தாய்க்குத்தான் தெரியும் பெற்ற பிள்ளையின் அருமை. சும்மா எங்கட பிள்ளையளைப் பிடித்துக் கொண்டுபோய் சுட்டுக் கொல்வதற்கு அவர்களுக்கு என்ன அதிகாரமிருக்கு? சொல்லுங்கள்?
இவ்வாறு கதறி அழுதார் காணாமற்போனோரின் பெற்றோர் பாதுகாவலர் சங்கத் தலைவி. நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் முன்னாள் போராளிகள் மற்றும் அரசியல் கைதிகளின் பெற்றோர்களுடனான சந்திப்பு நேற்று நடைபெற்றது. சுமார் 50 பேர் அதில் கலந்து கொண்டிருந்தனர். முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும்

பக்கம் 24

தேசிய பாதுகாப்புக்கு புலிகளால் அச்சுறுத்தல்

கூச்சலிடுகிறது மஹிந்த தரப்பு

கொழும்பு, ஜூலை 24
தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் உள்ளாகும் வகையில் தமிழீழ விடுதலைப் புலிகள் மீண்டும் தலைதூக்கியுள்ளனர் என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப் பெரும தெரிவித்தார்.
எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்த

பக்கம் 24

பிளைஓகாத எம்.பிக்களை தெரிவு செய்யுங்கள் மக்களே!

யாழ்ப்பாணத்தில் ஜே.வி.பி. தலைவர் நேற்று அழைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 24
விலை போகாத நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்வதன், நிலையான அரசை அமைப்பதற்கு இந்தத் தேர்தலில் மக்களின் பங்களிப்பு மிக அவசியம்.
இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திசா நாயக்க நேற்று யாழ்ப்பாணத்தில் வலியுறுத்தினார்.
மக்கள் விடுதலை முன்

பக்கம் 21

ராஜபக்ஷாக்களைக் காக்க புலிகளுக்கு மஹிந்த பணம்

திறைசேரியிலிருந்து 800 மில்லியன் சம்பிக்க ரணவக்க குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 24
புலிகளிடமிருந்து தமது குடும்ப பத்தைப் பாதுகாத்துக்கொள்வதற்காக திறைசேரியிலிருந்து 800 மில்லியன் ரூபாவை மஹிந்த ராஜபக்ஷ புலிகளுக்கு வழங்கினார் எனத் தகவல் வெளியிட்டுள்ளார் ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான சம்பிக்க ரணவக்க.
நந்திக்கடலில் தோற்கடிக்கப்பட்டதன் பின்னர் புலி

பக்கம் 21

மஹிந்தவுக்கு உயிராபத்து ஏற்படின் ரணிலே பொறுப்பு

இப்படி சொல்கிறார் விமல்



கொழும்பு, ஜூலை 24
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் உயிருக்கு ஏதாவது அசம் பாவிதங்கள் ஏற்படுமாயின், அதற்குப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவே பொறுப்புக்கூற வேண்டும் எனத் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ குறிப்பிட்டுள்ளார்.
அத்துடன், அரசுடைமைகள் அனைத்தையும் வெளிநாட்டவர்களுக்கு விற்பனை செய்வதற்கு ஜக்கிய தேசியக் கட்சி முடிவெடுத்துவிட்டது எனவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

பக்கம் 24

கதிர்வீச்சு சிகிச்சை தற்காலிகமாக நிறுத்தம்

தெல்லிப்பழை புற்றுநோய் சிகிச்சை பிரிவில் மறு அறிவித்தல் வரை சிகிச்சைகள் இடம் பெற மாட்டது என பிரதி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், வைத்திய கலாநிதி சி .சிவராணி அறிவித்துள்ளார் .

சிகிச்சை நிலையத்திலுள்ள கதிரியக்க மூலத்தை திருத்துவதற்கான பணிகள் இடம்பெறுவதால் சிகிச்சை இடைநிறுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (ற)

தாபரிப்பு பணம் செலுத்தாததால் 1 வருட சிறை

மனைவிக்கு தாபரிப்பு பணத்தை தொடர்ச்சியாக செலுத்தாமல் வந்த கணவனுக்கு யாழ் நீதிவான் நீதி மன்றத்தால் ஒருவருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்றில் பெண்ணொருவரால் அவரது கண வருக்கு எதிராக தாபரிப்பு வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டது. கணவர் தன்னை ஒழுங்காக பரா மரிப்பதில்லை என்றும் தன்னோடு சேர்ந்து வாழ மறுப்பதாகவும் தெரி வித்தே குறித்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இவ்வழக்கில் நீதிமன்றினால் தாபரிப்பு தொகையாக பத்தாயிரம் ரூபா செலுத்துமாறு உத்தரவிடப்பட்டிருந்தது.

ஆயினும் குறித்த கணவன் தொடர்ச் சியாக பணத்தை ஒழுங்கான முறை யில் செலுத்தாமல் இருந்ததுடன் அடிக்கடி நீதிமன்றத்திற்கு சமுகம் கொடுக்காமலும் இருந்து வந்துள் ளார். மனைவிக்கு அவர் தாபரிப்பு தொகையாக ஒரு இலட்சம் ரூபா வுக்கு மேற்பட்ட தொகை செலுத் தப்படவேண்டியிருந்தது. நேற்று இவ்வழக்கு அழைக்கப்பட்ட போதும் கணவனால் பணம் செலுத்தப்பட வில்லை. இதனையடுத்து நீதிமன் றத்தால் இவருக்கு ஒருவருட சாதாரண சிறைத்தண்டனை விதிக் கப்பட்டது. (ற-103)

வடக்கை சேர்ந்த அரசியல் கைதிகளது குடும்பங்களுக்கு ரூபா 50 ஆயிரம்

பதிவு மேற்கொள்ளாதிருப்போரை உடன் பதியுமாறு வடக்கு அமைச்சர் டெனிஸ்வரன் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 24

வடக்கு மாகாணத்திலுள்ள அரசி யல் கைதிகளின் குடும்பத்தினருக் குத் தலா 50 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்படவுள்ளது. அதற்காக ஏற்கனவே மூன்று தடவைகள் பதி வதற்கான கால நீடிப்பு வழங்கியும் இதுவரை பதிவு செய்யாமல் இருக் கும் அரசியல் கைதிகளின் குடும் பங்கள் விரைவாகத் தமது பதிவு களை மேற்கொள்ள வேண்டும் என்று வடமாகாண கிராம அபி விருத்தி அமைச்சர் பா.டெனிஸ் வரன் கேட்டுக் கொண்டுள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள கிராம அபிவிருத்தி திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட அரசியல் கைதிகளின் குடும்பங்களைச் சந்தித்து அவர் களது வாழ்வாதாரம் தொடர்பாக வும் அவர்கள் எதிர்நோக்கும் பிரச் சினைகள் தொடர்பிலும் விசேட கலந்துரையாடல் இடம்பெற்றது. ஏற்கனவே அறிவிக்கப்பட்டதன்படி யாழ். நாவலர் வீதியில் உள்ள வடமாகாண கிராம அபிவிருத்தி அமைச்சரின் அலுவலகத்தில் நேற்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணி யளவில் சந்திப்பு இடம்பெற்றது.

அங்கு கருத்துத் தெரிவித்த அமைச் சர் டெனிஸ்வரன்,

கைதிகளின் குடும்பங்களின் வாழ் வாதாரத்தை நாம் நல்ல நிலைக்கு கொண்டு வருவோம். உங்கள் பகுதி மாதர் அல்லது கிராம அபிவி ருத்தி சங்கங்கள் மூலமாகவோ அல்லது கிராம அபிவிருத்தி திணைக் களம் ஊடாகவோ அல் லது எனது அமைச்சின் செயலாளர் அலுவல கம் ஊடாகவோ உங்கள் பதிவுகளை மேற்கோள்ள முடியும்.

அதன் மூலமாக இத்திட்டத்தினை பெற்றுக்கொள்ளுங்கள். இத்திட்டத் தின் கீழ்வருகின்ற புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகள் மற் றும் பிள்ளைகளை இழந்தவர்களின் பதிவு செய்யப்பட்ட குடும்பங்களுக் கான செயற்றிட்டம் விரைவில் நடை முறைப்படுத்தப்படவுள்ளது – என்றார்.

சந்திப்பில் வட மாகாண அமைச் சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், கிராம அபிவிருத்தி திணைக்களத் தின் மாகாண பணிப்பாளர் சி.பெலி சியன் ஆகியோரும் கலந்துகொண் டனர். (ற-4)

மக்கள் விடுதலை முன்னணியின் தேர்தல் பரப்புரைக் கூட்டம் நேற்று மாலை கிளிநொச்சியில் இடம்பெற் றது. இக் கூட்டத்தில் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அனுரகுமார திஸாநாயக்க, கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர். இராமலிங்கம் சந்திரசேகரன், கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர், மாவட்ட வேட்பாளர்கள், ஆதரவாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.(ற-21)

தேடல் 06 நாடகமும் அரங்கியலும் பகிர்வு நாளை

செயற்றிறன் அரங்க இயக்கம் வாராந்தம் நடத்தி வருகின்ற நிகழ் சியில் 'கற்றல் கற்பித்தல் செயற் பாட்டில் அரங்கு' எனும் தலைப்பி லான உரை நிகழ்வு நாளை சனிக் கிழமை பி.ப. 3.30 மணிக்கு நல் லூரில் அமைந்துள்ள நாவலர் கலா சார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. இந்த உரையை யாழ். பல்கலைக் கழக நாடகமும் அரங்கியல்துறை விரிவுரையாளர் ம.சத்தியன் நிகழ்த் தவுள்ளார். (ற-ரி)

போதை பொருள் விழிப்புணர்வு கருத்தரங்கு

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை யின், சமூக விஞ்ஞான மன்றம் நடத் தும் போதை பொருள் விழிப் புணர்வு கருத்தரங்கு இன்று காலை மணிக்கு ரதிலஷ்மி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. வீ.கருணலிங் கம் தலைமையில் நடைபெறும் இக்கருத்தரங்கில் வளவாளராக வைத்தியர் எஸ்.சிவதாஸ் கலந்து கருத்துரைக்கவுள்ளார்.

கருத்தரங்கு பாலியல் துஷ்பிர யோகங்களிலிருந்தும், போதை பொருளில் இருந்தும் , எம் சிறார் களை காப்பதில் ஆசிரியர் கைக் கொள்ள வேண்டிய அணுகுமுறை கள் என்ற தலைப்பில் நடத்தப்பட வுள்ளது. (ற)

கருத்தரங்கு

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் வருடந்தோறும் நடத்தப்படும் இந்து தர்மாசிரியர் களுக்கான கருத்தரங்கில் கொழும்பு, கம்பஹா, புதுளை, நுவரெலியா மாவட்டத்திற்கான கருத்தரங்கு நடை பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. நாளை சனிக்கிழமை மற்றும் ஞாயிற் றுக்கிழமை கொழும்பு இராம கிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடைபெறும் இந்தக் கருத்தரங்கில் இந்து அறநெறிப் பரீட்சைக்குத் தோற் றவுள்ள இந்து அறநெறி ஆசிரியர்கள் கலந்துகொள்ள முடியும்.(ற-10)

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியில் நிலவும் சுகாதார சீர்கேடுகளை விரைவாகச் சீர்ப்படுத்துமாறு மாணவர்கள் நேற்றுப் போராட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 24

தமது கோரிக்கைகளை விரைவில் பூர்த்தி செய்து கற்றல் செயற்பாடு களை ஆரம்பிக்க வேண்டும் என்று கோரி யாழ்.தொழிநுட்பக் கல்லூரி யின் சகல பிரிவு மாணவர்களும் கல்லூரி வளாகத்தில் நேற்றுக் கவன வீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட் டனர்.

தமது கோரிக்கைகள் நிறைவேற் றப்படும் வரை தாம் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபடப்போவதாக வும் மாணவர்கள் தெரிவித்தனர். மாணவர்களின் போராட்டத்தை அடுத்து அங்கு சென்ற யாழ். மாவட்ட செயலக மேலதிக அரச அதிபர் பா.செந்தில் நந்தனன் மற் றும் மாவட்ட உதவிச் செயலர் சா.சுதர்சன் ஆகியோர் பிரச்சினை கள் தொடர்பில் மாணவர்களுடன் கலந்துரையாடினர்.

வகுப்பறைகள் பல வருடங்களாகச் சுத்தம் செய்யப்படாமல் உள்ளன. புறாக்களின் எச்சம், இறந்த உடல் கள் வகுப்பறையின் மேற்புற லெவல் சீற்றில் குவிந்து கிடப்பதால் – அவை நாற்றமெடுக்கின்றன. வகுப் பறையில் கற்றலில் ஈடுபட முடியா துள்ளது. புறாக்களின் வெற்று உடல்களிலிருந்து புழுக்கள், உண் ணிகள் போன்றன வகுப்பறைக் குள் கொட்டுகின்றன – என்று மாண வர்கள் தமது பிரச்சினைகளைத் தெரிவித்தனர்.

மலசலகூடங்களில் தண்ணீர்ப் பிரச்சினை, குடிநீர்ப் பிரச்சினை, தண்ணீர்தாங்கி துப்புரவின்மை, கிணறு துப்புரவின்மை உள்ளிட்ட பல சுகாதாரப் பிரச்சினைகள் சீர் செய்யப்படவில்லை என்றும் அவர் கள் சுட்டிக்காட்டினர்.

வகுப்பறைகளின் மேல் குவிந்துள்ள புறா எச்சங்கள் நேற்றுத் தொடக் கம் அகற்றப்படுகின்றன. எனினும் ஒரு சிலர் மாத்திரமே அதனை அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ள னர். அதனால் அனைத்து வகுப் பறைகளிலும் அவற்றை அகற்றி முடிய பல நாள்கள் எடுக்கும் என் றும் மாணவர்கள் தெரிவித்தனர்.

ஒரு வகுப்பறையில் மாத்திரம் நேற்று துப்புரவுப் பணியில் மேற் கொள்ளப்பட்டது. அதன்போது ஏராளமான எச்சங்கள் அங்கு இருந்தமை தெரியவந்தது. யாழ். மாவட்டச் செயலக அதிகாரிகளும் அவற்றைப் பார்வையிட்டனர். தவிர மோசமான நிலையில் காணப் படும் மலசலகூடங்களையும் அவர் கள் பார்வையிட்டனர்.

குறித்த பிரச்சினைகள் தொடர்பில் கேட்டறிந்த அதிகாரிகள் குறித்த பிரச்சினைகள் தொடர்பில் தொழி நுட்பக் கல்லூரியின் கொழும்பு நிலையத்துக்கும், தேர்தல்கள் ஆணை யாளருக்கும், மற்றும் சம் பந்தப் பட்ட கல்வி அமைச்சுக்கும் அறி விப் பதாகத் தெரிவித்துள்ளனர். பிரச்சினைகள் பற்றிய ஆதாரங் கள், ஆவணங்களுடன் இன்று அரச அதிபரைச் சந்தித்துக் கலந்துரை யாட வருமாறும் அதிகாரிகளால் மாண்வர்களுக்குக் கூறப்பட்டுள் ளது.

குறித்த கல்லூரியில் தற்போதுள்ள பணிப்பாளர் யோகராஜனே கடந்த 33 வருங்களாகப் பணிப்பாளராக இருந்து வருகிறார் என்றும் ஆனால் கல்லூரியை வளம்படுத்துவதற் கான எந்தவித நடவடிக்கைகளி லும் அவர் 33 வருடங்களும் ஈடுப்ட் டதாக இல்லை என்றும் விரிவுரை யாளர்கள் குற்றம் சுமத்துகின் றனர். கல்லூரிக்கு வருடாந்தம் பல லட்சக் கணக்கான ரூபா நிதி கொழும்பிலிருந்து அனுப்பப்பட்டு வருகிறது. ஆனால் பணிப்பாளர் யோகரா ஜன் எந்த அபிவிருத்தி நடவடிக்கை களையும் செய்திருக்கவில்லையா தலால் ஒதுக்கப்படும் பல லட்சங்க ளும் பல வருடங்களாக மீளத் திரும்பிச் செல்லும் நிலையே காணப் படுகிறது என்றும் அவர்கள் தெரி வித்தனர்.

வகுப்பறை வேலைகள் நிறைவு றாததால் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்கு மாற்று ஏற் பாடுகள் எதுவும் செய்து கொடுக் கப்படவில்லை. அதனால் கல் லூரிக்கு வந்த மாணவர்கள் கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடாதுள்ள னர். இது தொடர்பில் பணிப்பாள ரிடம் கேட்டபோது 2 வாரங்களும் மைதானத்தில் விளையாடுமாறு கூறியதாக மாணவர்கள் கூறுகின் றனர். கற்றல் செயற்பாட்டுக்குரிய உரிய ஒழுங்குகளை மேற்கொள் ளுமாறும் மாணவர்கள் கோரிக்கை விடுத்தனர். (ற-

புங்குடுதீவு வைத்தியசாலை வரை பஸ் சேவை

இலங்கை போக்குவரத்து சபையின் பஸ் சேவை புங்குடுதீவு வைத்தியசாலை வரையில் நீடிக்கப்பட்டுள்ளது என்று யாழ். சாலையின் முகாமையாளர் தெரிவித்துள்ளார். இதுவரையும் குறிகாட்டுவான் வரை இயங்கிய பஸ் சேவையை பிர தேச மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க புங்குடுதீவு வைத்திய சாலை வரை நீடிப்புச் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ரி)

பனை அபிவிருத்தி கண்காட்சி நேற்று ஆரம்பம்

வடமாகாண பனை அபிவிருத்தி சார்பாகத்தைக் கொண்டாடும் விதமாக பனை அபிவிருத்தி சபையும், பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கங்களும் இணைந்து ஏற்பாடு செய்த பனை அபிவிருத்திக் கண்காட்சி நிகழ்வின் ஆரம்ப நிகழ்வு நேற்று நடைபெற்றது.

கண்காட்சியை மாலை3.30 மணியளவில் வடமாகாண பதில்முதலமைச்சர் மற்றும் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுதுறை அமைச்சர் தகுருகுலராஜா ஆரம்பித்து வைத்தார்.

நிகழ்வில் வடமாகாணத்தின் ஐந்து மாவட்டத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தும் விதமாக கண்காட்சி கூடங்கள் அமைக்கப்பட்டு, பனைசார் உற்பத்தி பொருள்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

நிகழ்வின் சிறப்பம்சமாக நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கு பனங்காய் பணியாரம், பனங்காய் பொரி உருண்டை மற்றும் ஆடிக்கூழ் என்பன வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வுகள் கலாநிதி க.கனகராசாவின் நினைவு தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. கலாநிதி க.கனகராசா வடக்கு, கிழக்கில் பனை மரங்களின் பரம்பலுக்கு பெரும் பங்காற்றியவராவார். (ற-ரி)

வவு. அரச அதிபர் மீதான குற்றச்சாட்டை விசாரணை செய்வதற்கு குழு அமைப்பு

உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஜோசப் மைக்கல் பெரேரா அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 24

வவுனியா மாவட்ட அரச அதிபர் மீதான, வடக்கு மாகாண சபையின் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணை மேற்கொள்வதற்கு குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஜோசப் மைக்கல் பெரேரா அறிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வில், அவைத் தலைவரின் அறிவிப்புக்களின் போது, அமைச்சர் ஜோசப் மைக்கல் பெரேராவால் அனுப்பப்பட்ட கடிதத்தை, அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம் சபைக்குத் தெரியப்படுத்தினார்.

வவுனியா மாவட்ட அரச அதிபர் பந்துல ஹரிச்சந்திர, வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களை கடந்த மார்ச் மாதம் அவமதிப்பு செய்ததாகத் தெரிவித்து, வடக்கு மாகாண சபையின் கடந்த மார்ச் மாதம், அரச அதிபரை இடமாற்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்து. குறித்த தீர்மானம் நடைமுறைக்கு வரவில்லை எனத் தெரிவித்து, கடந்த மாதம் சபை அமர்வுகளை முடக்கி போராட்டம் நடத்தப்பட்டிருந்தது.

இந்த நிலையில், வவுனியா மாவட்ட அரச அதிபரை இடமாற்றுவது தொடர்பான விடயத்தில் எவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதை அவைத் தலைவர் சி.வி.கேசிவஞானம் சபைக்குத் தெரியப்படுத்தினார். அமைச்சர் ஜோசப் மைக்கல் பெரேராவுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு பேசியதாகவும், இதன் போது அமைச்சர் உயர் அதிகாரி ஒரு வரை ஒழுக்காற்று நடவடிக்கை இன்றி இட மாற்றம் செய்ய முடியாது என்று பதிலளித்தாகவும் அவைத் தலைவர் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையால் முன்வைக் கப்பட்ட குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில், அரச அதிபர் தொடர்பில் விசாரணை நடத்த குழு ஒன்றை நியமித்துள்ளதாகவும் அமைச்சர் ஜோசப் மைக்கல் பெரேரா குறிப்பிட்டுள்ளார் என்றும் தெரிவித்தார்.(ற-5)

மாகாண சபை அமர்வில் சிவாஜி பங்கேற்றமையால் பெரும் அமளி

யாழ்ப்பாணம், ஜூலை 24

வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வில் ஆளுங்கட்சி உறுப்பினரும், தற்போதைய நாடாளுமன்றத் தேர்தலில் வேட்பாளராகப் போட்டியிடும் எம்.கே.சிவாஜிலிங்கம் பங்கேற்றதால் பெரும் சர்ச்சை ஏற்பட்டது.

நேற்றைய அமர்வில் ஆளுநரின் செயலாளரால் வடக்கு மாகாண சபைக்கு அனுப்பப்பட்ட வேண்டுகையை, சபையின் சம்மதத்துக்காக அவைத் தலைவர் சமர்ப்பித்தார். பழைய பூங்காவில் உள்ள ஆளுநரின் செயலகத்தை விரிவாக்குவதற்கு, ஆளுநர் அலுவலகத்திற்கு விடுவித்த நிதியை மாற்றீடு செய்து தரும்படி ஆளுநர் கேட்டுக் கொண்டதை, செயலாளர் கடிதம் மூலம் வேண்டுகோள் விடுத்திருப்பதை அவைத் தலைவர் தெரிவித்தார்.

இதன் போது, அமைச்சர் ஜங்கர நேசன், ஆளுநர் அலுவலகத்தை விரிவாக்கும் போது பழைய பூங்காவில் உள்ள எந்தவொரு மரமும் அழிக்கப்படக் கூடாது என்ற நிபந்தனையுடனேயே அனுமதி வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அதே கருத்தையே ஈ.பி.டி.பி. உறுப்பினர் தவராசாவும் வலியுறுத்தினார்.

இந்தச் சந்தர்ப்பத்தில், ஆளுங்கட்சி உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் பேசுவதற்காக எழுந்தார். உடனே எதிர்கட்சித் தலைவர் தவராசா, தேர்தலில் வேட்பாளராகப் போட்டியிடுகின்ற சிவாஜிலிங்கத்தைப் பேசுவதற்கு அனுமதிக்கக் கூடாது என்று குறிப்பிட்டார். இதன் போது அவைத் தலைவர், தேர்தலில் போட்டியிடுகின்ற ஏனைய மாகாண சபை உறுப்பினர்கள் விடுப்பு எடுத்து நிற்கும் போது, நீங்கள் விடுப்பு எடுக்காமல் விட்டது மரபுக்கு முரணானது என்று சுட்டிக்காட்டினார்.

இதன் போது சிவாஜிலிங்கம் தர்க்கத்தில் ஈடுபட ஆரம்பித்ததும், அவைத் தலைவர் ஒலி வாங்கியை நிறுத்தி விட்டார். எந்தக் காரணம் கொண்டும், மாகாணசபையை பரப்புரை மேடையாக்க அனுமதிக்க மாட்டேன் என்று தெரிவித்து விட்டார். பின்னர் சிவாஜிலிங்கம் ஆசனத்தில் அமர்ந்த பின்னரே ஒலிவாங்கி செயற்பாட்டுக்கு வந்தது. நேற்றைய அமர்வில், சிவாஜிலிங்கம் பங்கெடுத்த திருந்தாலும், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவருக்கு பேசுவதற்கு அனுமதி வழங்கப்படவில்லை. (ற-5)

பின்தங்கிய உள்ளூராட்சி சபைகள் துரித அபிவிருத்திக்குள்

யாழ்ப்பாணம், ஜூலை 24

வருடாந்தம் 30 மில்லியன் ரூபாவுக்கு குறைவான வருமானத்தைப் பெறும் 117 உள்ளூராட்சி சபைகள் இந்த வருடம் துரித அபிவிருத்திக்குள் உள்ளடக்கப்படவுள்ளன. அரச நிர்வாக உள்ளூராட்சி மற்றும் ஜன நாயக ஆட்சி அமைச்சு செயலாளர் இதனைத் தெரிவித்தார்.

6 மில்லியன் ரூபா வீதம் ஒவ்வொரு பின்தங்கிய உள்ளூராட்சி சபைகளுக்கு வழங்கப்படும். பொது மலர கூட பராமரிப்புவதால் கட்டமைப்புபராமரிப்பு,சிறுவர்பூங்கா,பொதுத்துப்புர ஏற்பாட்டு நடவடிக்கை, திண்மக்கழிவு முகாமைத்துவம், வாராந்த சந்தை, இயந்திர உபகரண பராமரிப்பு போன்ற 15க்கும் மேற்பட்ட தலைப்புக்களில் திட்டங்கள் முன்வைத்து சபைக ளின் வளர்ச்சியை முன்னெடுக்க முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ற-50)

மாணவரைக் கண்காணிப்பது எம் அனைவரினதும் பொறுப்பே

அதிபர்களுடனான சந்திப்பில் யாழ். பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 24

யாழ்ப்பாணத்தில் தற்போது போதைப் பொருள் பாவனை மற்றும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் அதிகரித்துள்ளன. அதனைக் கட்டுப்படுத்த வேண்டிய பொறுப்பு பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களுக்கும் பொலிஸாருக்கும் உண்டு. – இவ்வாறு யாழ்.பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி யு.கே. வூட்லர் தெரிவித்தார்.

யாழ்.வலயக் கல்வி அலுவலகத்தில் யாழ்.கல்வி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலைகளின் அதிபர்களுக்கும் யாழ்.தலைமைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி யு.கே.வூட்லருக்கும் இடையே சந்திப்பொன்று இடம்பெற்றது. யாழ்ப்பாணத்தில் தற்போது இடம்பெற்று வருகின்ற சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் அதிகரித்த போதைப்பொருள் பாவனையைத் தடுக்கும் வகையில் இந்தச் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அங்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பெற்றோர்களுக்கு அடுத்தபடியாக அதிபர்கள், ஆசிரியர்கள் உள்ளனர் எனவே பாடசாலை நேரங்கள் தேவையற்ற விடயங்களில் ஈடுபடும் மாணவர்கள் மீது மிகுந்த அக்கறை எடுத்து அவர்களை சரியான வழியில் அறிவுறுத்த அதிபர்களும் ஆசிரியர்களும் முன்வர வேண்டும்.

தற்போது அதிகரித்துள்ள துஷ்பிரயோகம் மற்றும் போதை பாவனைக்கு தொலைபேசிகள் மற்றும் இணைய வசதிகளே காரணம். எனவே இவை குறித்து மாணவர்களுக்கு தெளிவுபடுத்த வேண்டிய பொறுப்பு ஆசிரியர்களிடம் உண்டு. – என்றும் அவர் அங்கு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

அத்துடன் சிறிய வயதிலேயே பேஸ்புக் கணக்கை மாணவர்கள் வைத்திருக்கின்றார்கள். அதில் உள்ள நண்பர்களுக்கு தங்களுடைய புகைப்படங்களை அனுப்புவதன் மூலம் பல பிரச்சினைகள் ஏற்படுவதாக எமக்கு முறைப்பாடுகள் கிடைக்கப் பெறுகின்றன.

எனவே அவ்வாறான சந்தர்ப்பத்தில் மிரட்டல்கள், கப்பம் பெறல், துஷ்பிரயோகம் என்பன இடம்பெறுகின்றன. இவ்வாறான செயற்பாடுகளை மாணவர்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும். அத்துடன் மாணவியோ அல்லது மாணவனோ பாடசாலைக்கு வருகை தராதுவிட்டால் எதற்காக அன்றையதினம் வரவில்லை என்ற காரணத்தை அதிபர் உடனடியாக தெரிந்து கொள்ளவேண்டும். அதற்கு பெற்றோர்களுடன் அதிபர்கள் ஆசிரியர்கள் தொடர்புகளைக் கொண்டிருக்க வேண்டும்.

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் புத்தகப் பையை அடிக்கடி பார்த்து உறுதிப்படுத்த வேண்டும். ஏனெனில் வீட்டில் இருந்து பாடசாலைக்கு என சென்றுவிட்டு வெளியில் சென்று மாற்று உடைகளை அணிந்து கொண்டு பாடசாலைக்கு செல்லாது வேறு இடங்களுக்கு செல்கின்றனர். மீண்டும் பாடசாலை முடியும் நேரத்திற்கு பாடசாலை சீருடையை அணிந்து வீட்டிற்கு செல்கின்றனர். எனவே பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளில் நம்பிக்கை கொண்டிருந்தாலும் மிகவும் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும். அத்துடன் பாடசாலைக்கு அண்மையில் ஐஸ்கிறீம் விற்றல் மற்றும் பெட்டிக்கடைகளை அனுமதிக்க வேண்டாம். அவ்வாறு மீறுபவர்கள் தொடர்பில் பொலிஸாருக்கு அறிவியுங்கள்.

இதனைப் பொலிஸார் முன்னெடுக்க அதிபர்களும் ஆசிரியர்களும் ஒத்துழைப்பு அவசியம். எனவே எதிர்காலத்தில் மாணவர்களது பெற் றோர்களை சந்திப்பதற்கும் ஏற்பாடு செய்து தாருங்கள்.– என்றார். (ற–4)

விடுதிகள் மீது இனி திடீர் சோதனைகள்

சீர்கேடுகளைத் தடுப்பதற்காக யாழ்.பொலிஸார் நடவடிக்கை

சமூக கலாசார சீரழிவுகளைத் தடுக்கும் நோக்கில் யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் விடுதிகளில் முன்னறிவிப்பின்றி திடீர் சோதனைகள் மேற்கொள்ளப்படும் என்று யாழ்பொலிஸ் நிலைய தலைமைப் பொறுப்பதிகாரி யு.கே.வூட்லர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பதிவுசெய்யப்பட்ட விடுதிகளின் உரிமையாளர்களுடான சந்திப்பு ஒன்று நேற்று முன்தினம் பொதுநூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. அதிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

யாழ்ப்பாணத்தில் நடைபெறும் சட்டவிரோத செயற்பாடுகள் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகங்களுக்கு விடுதிகளும் ஒரு காரணமாக உள்ளன. 18 வயதுக்கு குறைந்த ஆண்கள் மற்றும் பெண்களும் விடுதிகளுக்கு செல்கின்றனர். இதனால் சமூகத் தில் பல பிரச்சினைகள் ஏற்பட வழிவகுக்கின்றது. இதற்கு உடந்தையாக விடுதிகளும் செயற்படுகின்றன.

எனவே அத்தகைய செயற்பாடுகளுக்குத் திடீர் சோதனைகள் நடத்தப்படும். எனவே அத்தகைய செயற்பாடுகளுக்கு விடுதி உரிமையாளர்கள் துணைபோக கூடாது. விடுதிகளுக்கு வருபவர்களை நன்கு விசாரித்த பின்னர் உண்மையில் விடுதிகளில் தங்க வேண்டிய தேவை ஏற்பட்டால் மட்டுமே அவ்வாறு வருபவர்களை அனுமதிக்க வேண்டும். பணத்துக்காக செயற்பட கூடாது. இதுபோல போதைப்பொருள் வியாபாரத்திற்கும் முற்றுப்புள்ளி வைப்பதாக விடுதிகள் செயற்பட வேண்டும். இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள் தொடர்பில் உடனடியாக பொலிஸாருக்கு அறியத்தர வேண்டும்.

அவ்வாறு செயற்படத் தவறின் பணம், தகுதி எதுவும் பாராது சட்டநடவடிக்கை எடுக்கப்படும். விடுதிகள் மீது இரவு பகல் எதுவும் பாராது திடீர் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். – என்றார்.

இந்தக் கலந்துரையாடலில் யாழிலுள்ள 35 விடுதிகளில் 24 விடுதிகளின் உரிமையாளர்கள் கலந்து கொண்டிருந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற–4)

பனைவளத்தின் முக்கியத்துவம் காலமாற்றத்தால் அருகிவிட்டது

வடமாகாண பிரதம செயலாளர் பத்திநாதன் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 24

நாமறிந்த காலத்திற்குள்ளே பல நூறு ஆயிரம் பனை மரங்கள் அழிக்கப்பட்டிருக்கின்றன. கடந்த கால போர் காரணமாக பலதரப்பினராலும் பாதுகாப்பு தேவை கருதி பல ஆயிரம் மரங்கள் அழிக்கப் பட்டுள்ளன. போர் முடிவடைந்த பிற்பாடு அபிவிருத்தியை நோக்காக கொண்டு வீடுகளை அமைப் பதற்காக பல்லாயிரக் கணக்கான பனை மரங்கள் வெட்டி சாய்க்கப் பட்டிருக்கின்றன. பனை மரங்கள் தொடர்பான கணக்கெடுப்பை பிர தேச செயலக ரீதியாக எடுக்க வேண்டிய தேவைப்பாடு இருக்கிறது. அழிக்கப்பட்டவரும் இந்த பனை வளத்தை நூறு வீதம் நிறுத்த முடியாது விட்டாலும் அழிக்கப்படும் வேகத்தை, விகிதாசாரத்தை குறைக்க வேண் டும்.– இவ்வாறு தெரிவித்தார் வட மாகாண பிரதம செயலாளர் பத்தி நாதன்.

வடமாகாண பனை அபிவிருத்தி வாரத்தை கொண்டாடும் வகை யில் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கங்களும் , பனை அபிவிருத்தி சபையும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள பனை அபி விருத்திக் கண்காட்சி நிகழ்வுகளின் சம்பிரதாயபூர்வமான ஆரம்ப நிகழ்வு நேற்று யாழ்ப்பாணம் முத் திரைச் சந்திப் பகுதியில் அமைந் துள்ள கிட்டு பூங்காவில் நடைபெற் றது. அதில் விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரி வித்ததாவது:–

பனை வளம் பல்வேறு பயன்களை தருகிறது என்று நாம் கூறுகின் றோம். அது 800 இற்கும் மேற்பட்ட பயன்களைத் தருகின்றது என்பது பனை வள ஆராய்ச்சி மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. பனை இருக்கும் போது அதிலிருந்து பல நூறு பயன்களையும் அதனை வெட்டி சாய்த்த பின்பும் அதன் பயன்களை அனுபவிக்கிறோம். ஆனால் கால மாற்றத்துக்கு உட் பட்டு இதனுடைய தேவை அருகியி ருக்கின்றது. பனை வளம் தமிழர்க ளுடைய குறிப்பாக வடபகுதி மக்களுடைய வாழ்வியலோடு இரண்டறக் கலந்திருப்பதை கடந்த 5 வருடங்களுக்கு முன்னர் இருந்த காலப்பகுதியை எடுத்துப் பார்க் கும் போது தெரிந்திருக்கும்.

பனை வளத்தை பாதுகாக்க வேண் டிய அதன் பயன்களை அனுபவிக்க வேண்டிய , அதிலே தங்கியிருக் கின்ற குடும்பங்களுடைய வாழ் வாதாரங்களை மேம்படுத்த வேண் டிய பொறுப்பு நமக்கிருக்கிறது. உலக மாற்றத்திற்கு ஏற்ப எங்க ளுடைய தேவைக்கேற்ற விதமாக பனை சார் உற்பத்தியின் தரத்தைக் கூட்டுகின்ற பொழுது எமக்கான சந்தை வாய்ப்புக் கிடைக்கும். வட மாகாணத்தில் பனை வளத்தை பெருக்கி அதன் உற்பத்தியை நவீன மயப்படுத்தி, சந்தை வாய்ப்புக் களை ஏற்படுத்தி அதிலே தங்கியி ருக்கின்ற குடும்பங்களின் வாழ் வாதாரத்தை உயர்த்துவதற்கும் எமது பழைய பாரம்பரியத்தை மீண்டும் மேலோங்கச் செய்ய ஒன்று பட வேண்டும்.– என்றார்.

இந்த நிகழ்வில் வடமாகாண பதில் முதலமைச்சரும் கல்வி பண்பாட்ட லுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சருமான த. குருகுலராஜா, வடமாகாண விவசாய மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் பொ. ஐங்கரநேசன் , வடமாகாண சபை யின் அவை தலைவர் சி.வி.கே. சிவஞானம், வடமாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் தவராசா ஆகியோர் கலந்துகொண்ட னர்.

(ப–ரி)

போதைப் பாவனைக்கு எதிராக விழிப்புணர்வு நடவடிக்கைகள்

மன்னார் மாவட்டத்தில் முன்னெடுப்பு



மன்னார்,ஜூலை 24

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா வால் பிரகடனப்படுத்தப்பட்ட போதைப் பொருள் ஒழிப்பு மாதத்தை முன் னிட்டு, மன்னார் மாவட்ட மதுவரித் திணைக்களத்தினரால் விழிப்புணர்வு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட் டுள்ளன.

மன்னார் மாவட்ட மதுவரித் திணைக் கள அத்தியட்சகர் எஸ். மதன்மோகன் வழிகாட்டலில், மது வரித் திணைக் கள கட்டுப்பாட்டு அதிகாரி தர்ம லிங்கம் நந்தகுமார் தலைமையில் நேற்று பேசாலை பிரதேசத்தில் இந்த விழிப்புணர்வு நடவடிக்கை கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மாணவர்கள் மத்தியில் போதைப் பொருள் பரவலைத் தடுத்தல், கிரா மத்தில் கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருள்கள் பரவல் போன்றவற் றைக் கட்டுப்படுத்துவதற்கு பொது மக்களின் ஒத்துழைப்பு இந்த விழிப் புணர்வின் போது கோரப்பட்டது. அத்துடன் போதைப்பொருள் பாவ னையால் ஏற்படும் சமூகச் சீரழிவு கள் மற்றும் நோய்கள் தொடர்பி லும் கருத்துக்கள் வழங்கப்பட்டன.

இதேவேளை மன்னார் தாராபுரம் பகு தியில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது இரண்டு கிராம் கஞ்சாப் பொதிகளை வைத் திருந்த நபர் ஒருவருக்கு எதிராக மன்னார் நீதிமன்றில் வழக்குத் தொட ரப்பட்டு 9 ஆயிரம் ரூபா தண்டப் பணம் அறவிடப்பட்டுள்ளது. போதைப் பொருள் வாரத்தில் மன்னார் மாவட் டத்தில் தொடர்ந்து விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வுள்ளதாக மதுவரித் திணைக்களத் தினர் தெரிவித்துள்ளனர். (ஐ)

க.பொ.த. உ/த மாணவருக்கு செயலமர்வு

வவுனியா, தர்மலிங்கம் வீதியில் உள்ள நவாலியூர் சோமசுந்தரப் புல வர் திருவுருவச் சிலை முன்னால் ஆடிப்பிறப்பு கொண்டாட்ட நிகழ்வு கடந்த திங்கட்கிழமை வெகுவிமரிசையாகக் கொண்டாடப்பட்டது. வவு னியா நகர வரியிறுப்பாளர் சங்கம், முச்சக்கர வண்டி உரிமையாளர் சங்கம் என்பவற்றின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில் நவாலியூர் சோமசுந்தரப் புலவருக்கு மாலை அணிவித்து வணக்கம் செலுத் தப்பட்டது. வவுனியா பிரதேச செயலகத்தால் நடத்தப்பட்ட ஆடிபிறப்பு தொடர்பான போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசில்க ளும் வழங்கப்பட்டன. (ப–21,421)

யாழ்ப்பாணம், ஜூலை 24

2015ஆம் ஆண்டு க.பொ.த. உயர் தரப் பரீட்சைக்கு தோற்றவிருக்கும் நெடுங்கேணி கோட்ட பாடசாலை மாணவர்களுக்கான செயலமர்வு கள் வவுனியா கனகராயன்குளம் மகா வித்தியாலயத்தில் இன்று வெள்ளிக்கிழமையும், எதிர்வரும் திங்கள், செவ்வாய், புதன் கிழமை களிலும் காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 3.30 மணி வரை நடைபெற உள்ளது என்று நெடுங்கேணி கல்வி அபிவிருத்திக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.(ப)

பொலிஸாரை வீடியோ எடுத்த இருவருக்கு விளக்கமறியல்

தென்மராட்சி, ஜூலை 24

பொலிஸார் கடமை செய்தவேளை அதைக் கையடக்கத் தொலை பேசி யில் காணொலியாகப் பதிவு செய்த இருவரை விளக்கமறியலில் வைக்கு மாறு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று உத்தரவிடப்பட்டது.

மிருசுவில் தவசிகுளம் பகுதியில் கசிப்பு விற்பனை செய்யப்படுவதாக கிடைத்த தகவலையடுத்து கொடி காமம் பொலிஸார் அங்கு சென்று விசாரணை மேற்கொண்ட போது அங்கு நின்ற இருவர் அதை கைய டக்கத் தொலைபேசியில் காணொ லியாகப் பதிவு செய்துள்ளனர்.

இதனை அவதானித்த பொலிஸார் இந்த இருவரையும் கைது செய் நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தினர். வழக்கை விசாரித்த நீதிமன்ற பதில் நீதிவான் இரு வரையும் விளக்கமறியலில் வைக் குமாறு உத்தவிட்டார். (ப–9)

இழுவைப் படகுகளால் பெறுமதி மிக்க வலைகள் நாசம்: அதிகாரிகள் அசமந்தம் என மன்னார் மீனவர்கள் கவலை

மன்னார், ஜூலை 24

உள்ளூர் மற்றும் இந்திய மீனவர்க ளின் ரோலர் படகுகளால் தமது பல லட்சம் ரூபா பெறுமதியான மீன்பிடி வலைகள் சேதப்படுத்தப் படுகின்றன என்று மன்னார் மாவட்ட மீனவர்கள் தெரிவித்துள் ளனர்.

கடந்த திங்கட்கிழமை முதல் நேற்று வியாழக்கிழமை வரையான நான்கு தினங்களுக்குள் பல லட் சம் ரூபா பெறுமதியான வலைத் தொகுதிகள் உள்ளூர் மற்றும் இந்திய மீனவர்களின் ரோலர் களால் சேதப்படுத்தப்பட்டுள்ளன என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

பேசாலை, பள்ளிமுனை, கோந்தப் பிட்டி ஆகிய கிராமங்களில் உள்ள மீனவர்களில் பலர் ரோலர் மீன் பிடியில் ஈடுபட்டு வருகின்றனர். அத்துடன் இந்திய மீனவர்களும் இலங்கை கடற்பரப்பினுள் அத்து மீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபடு கின்றனர். குறிப்பாக உள்ளூர் மற் றும் இந்திய மீனவர்களின் இழு

வைப் படகுகள் (ரோலர்) வாரத் தில் மூன்று தினங்கள் மீன்பிடியில் ஈடுபடுகின்றன.

இந்த நிலையில் பலகமுனைபாடு, தாழப்பாடு, மிரானாபாடு ஆகிய கடற்பகுதிகளில் மீனவர்களின் பல இலட்சம் ரூபா பெறுமதியான வலைகள் தொடர்ச்சியாகச் சேதப் படுத்தப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது. பனங்கட் டிக்கொட்டு,எருக்கலம்பிட்டி,விடத் தல் தீவு ஆகிய கிராம மீனவர்களே அதிகளவில் பாதிக்கப்படுகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

வீட்டில் உள்ள நகைகளை அடகு வைத்தும், வட்டிக்கு பணத்தை பெற்றும், வங்கிகளில் கடனைப் பெற்றும் பல லட்சம் ரூபா பெறு மதியான வலைகளை கொள் வனவு செய்து மீன் பிடிக்க கடலில் போட்டால் இழுவைப்படகுகள் இவ்வாறு சேதத்தை ஏற்படுத்து கின்றன. நாங்கள் என்ன செய்வது என்று தெரியாது உள்ளோம் என்று மீனவர்கள் கவலையுடன் குறிப் பிடுகின்றனர்.

இது தொடர்பாக மன்னார் மாவட்ட கடற்தொழில் திணைக்கள அதி காரிகளிடம் பலமுறை முறைப் பாடு செய்தும் அதிகாரிகள் எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள் ளாது அசமந்தமாகச் செயற்படுவ தாக மீனவர்கள் குற்றம் சாட்டியுள் ளனர்.

பாதிக்கப்பட்ட மீனவர்கள் குறித்து மன்னார் தேசிய மீனவ ஒத்துழைப்பு பேரவை அதிகாரி களிடமும் முறைப்பாடு செய்துள்ள தாகவும் தெரிவித்தனர்.

(ப–56)

மஹிந்த புலிகளுக்கு பணம் வழங்கினார்

நிரூபிக்க சாட்சியம் உண்டு என்கிறார் அமைச்சர் சம்பிக்க ரணவக்க



கொழும்பு, ஜூலை 24

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு பணம் வழங்கியதை நிரூபிப்பதற்கு சாட்சியங்கள் உண்டு என அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

2005ஆம் ஆண்டில் மஹிந்த ராஜபக்ஷ அரசு தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு பணம் வழங்கியமை குறித்த குற்றச்சாட்டுக்களுக்கு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த பகிரங்கமாக பதிலளிக்க வேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஹோமாகமவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பரப்புரைக் கூட்டமொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

மாவிலாறு போராட்டத்தின் போது ராஜபக்ஷ குடும்பத்தை கொலை செய்ய வேண்டாம் எனக் கோரி மஹிந்த பெருந்தொகைப் பணத்தை புலிகளுக்கு வழங்கினார். எனினும் போரில் ஆயிரக் கணக்கான படையினர் கொல்லப்பட்டனர்.

சுனாமி நிதியத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட 8 ஆயிரம் லட்ச ரூபா பணத்தை மஹிந்த ராஜபக்ஷ, எமில்காந்தன் என்பவரின் ஊடாக வழங்கினார். உண்மையில் தேசத்தின் மீது கரிசனை கொண்டிருந்தால் ஏன் அவ்வாறு பணம் கொடுக்க வேண்டும்? இந்தக் குற்றச்சாட்டு உண்மையில்லை என்றால் பொய்க் குற்றச்சாட்டு சுமத்தியதாக தமக்கு எதிராக வழக்குத் தொடர முடியும். உண்மை என்பதனை நிரூபிக்க ஆதாரங்கள் உண்டு.– என்றார். (ற)

ஐ.ம.சு. கூட்டமைப்பினரை நம்புமளவு முட்டாளில்லை

பிரகீத் எக்னெலிகொடவின் மகன் கூறுகின்றார்

கொழும்பு, ஜூலை 24

ஜக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசுக்கு தமது தந்தையைத் தேட வேண்டுமென்றே உண்மையான நோக்கம் இருக்கவில்லை என ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவின் மகன் சஞ்சய எக்னெலிகொட தெரிவித்துள்ளார்.

அண்மையில் தேர்தல் பரப்புரைக் கூட்டமொன்றில் கொழும்பு மாவட்டத்தில் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர் உதய கம்மன்பில வெளியிட்ட கருத்துக்கு பதிலளிக்கும் வகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் வெற்றியீட்டிய பின்னர் சண்டே லீடர் பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியர் லசந்த விக்ரமதுங்க மற்றும் லங்கா ஈ நியூஸ் ஊடகத்தின் ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலி கொட ஆகியோர் குறித்த விசாரணைகள் நடத்தப்படும் என உதய கம்மன்பில தெரிவித்திருந்தார். அதுகுறித்துத் தனது முகநூல் பக்கத்தில் பதிவிட்டிருந்த சஞ்சய எக்னெலிகொட தனது தந்தையின் பெயரைப் பயன்படுத்தி அரசியல் இலாபமீட்ட கம்மன்பில முயற்சிப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

2010ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 24ஆம் திகதி தமது தந்தை காணாமற் போனதாகவும், ஐந்து ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும் விசாரணை நடத்தப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொதுத் தேர்தல் காரணமாக தந்தையை சிலர் நினைவூட்டி வருவதாகக் கூறும் அவர், உதய கம்மன்பில போன்றவர்கள் விசாரணை நடத்துவார்கள் என நம்பும் அளவுக்கு தாம் முட்டாளல்ல என்றும் தெரிவித்துள்ளார். (ற)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேர்தல் அலுவலகம் கடந்த திங்கட்கிழமை வைபவரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது. குறித்த அலுவலகத்தை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், நீர் வழங்கல் வடிகாலமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் திறந்து வைத்தார். (ற–56)

மஹிந்தவின் சுயரூபம் அக்குரஸவில் அம்பலம்

பிரதி நீதியமைச்சர் சுஜீவ சேனசிங்க தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 24

நிராயுதபாணியாக நின்ற பொதுமகன் ஒருவரை தாக்கிய சம்பவத்தில் மஹிந்தவின் சுயரூபம் அம்பலப்படுத்தப்பட்டுள்ளது என்று பிரதி நீதியமைச்சர் சுஜீவ சேனசிங்க தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு படையினர் புடை சூழ தாக்குதல் நடத்திய இந்த சம்பவம் ஒழுங்கீனமானது மட்டுமன்றி நாட்டின் சட்டத்தையும் மீறும் செயல் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அறிக்கை வெளியிட்டுள்ள சுஜீவ சேனசிங்க, தனக்கு எதிரான கருத்துக்களை ஏற்றுக்கொள்ளாத முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வினது சுயரூபம் அது. நாட்டின் ஜனாதிபதி ஒரு வர் முழு நாடும், முழு மக்களும் தனது பொறுப்பாக கருதி நடக்க வேண்டும் என்று கூறிய மஹிந்த தாம் ஜனாதிபதியாக இருந்த காலத்தில் அவ்வாறு செயற்பட வில்லை என்றும் தெரிவித்தார்.

மாற்றுக் கருத்து தெரிவித்த ஊடக வியலாளர்களை, ஊடக நிறுவனங்களை தாக்கி, தீ வைத்து, எதிர் தரப்பு அரசியல்வாதிகளை ஒடுக்கிய மஹிந்த இன்று தனது கட்சி ஆதரவாளர்களை தாக்குகிறார் என்றும் சுஜீவ கூறியுள்ளார்.

எவ்வாறெனினும் இந்தச் சம்பவம் ஒன்றே மஹிந்தவின் வன்ம மன நிலை கொண்ட செயற்பாடுகளுக்கு உதாரணம் என்று கூறிய அவர் இதன் மூலம் மஹிந்த தனது சுயரூபத்தை அம்பலப்படுத்தியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (ற)

பகல் கனவு காண்கிறார் ரணில் விக்கிரமசிங்க

இப்படிக் கூறுகின்றார் பவித்திரா வன்னியாராச்சி

கொழும்பு, ஜூலை 24

பொருள்களின் விலைகள் குறைந்துள்ளன என்று கூறும் பிரதமர் ரணில் விக் கிரமசிங்க பகல் கனவு காண்கின் றாரா என முன்னாள் அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித் துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

ரணில் விக்கிரமசிங்க பொருள்களின் விலைகள் குறைந்துள்ளதாகத் தெரிவிக்கின்றார். இது அப்பட்டமான ஒரு பொய்யாகும். என்ன பொருளின் விலை குறைந்துள்ளது என நாம் கேட்கின்றோம். ரணில் பகல் கனவு காண்கின்றார்.

ஹம்பாந்தோட்டை விமான நிலையத்தில் நட்டமாம். இரண்டு விமான நிலையங்கள் தேவையில்லை என்றால் ஏன் ரணில் மொனராகலை சென்று விமான நிலையம் அமைக்க அடிக்கல் நட்டார். ரணில் மக்களை ஏமாற்ற முயற்சிக்கின்றார்.

மக்கள் இந்த ஏமாற்றுப் பேச்சுக்களை நம்ப மாட்டார்கள்.– என்றார்.

அண்மையில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டமொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (ற)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அம்பாறையில் இரு ஆசனங்கள்

வேட்பாளர் எம்.நடேசலிங்கம் தெரிவிப்பு

அம்பாறை, ஜூலை, 24

அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த தமிழ் மக்கள் 90 வீத வாக்குகளை தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு வழங்குவார்கள். இதன்மூலம் அம்பாறை மாவட்டத்தில் இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பெறமுடியும் என்று தெரிவித்துள்ளார் அம்பாறை மாவட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர் எம்.நடேசலிங்கம்.

காரைதீவில் தனது தேர்தல் பரப்புரை அலுவலகத்தைத் திறந்து வைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

அம்பாறை மாவட்டத்திலுள்ள தமிழ் மக்களுக்கு தமிழ் தேசிய கூட்டமைப்பைத் தவிர வேறு கட்சிகளைப் பெரிதும் தெரியாது. தமிழ் தேசிய முன்னணியினரைப் பார்த்து யார் இவர்கள் என்று கேட்கின்றனர். சைக்கிள் சின்னம் சுயேச்சைக் குழுவின் சின்னமல்லவா என்று மக்கள் கேட்கிறார்கள். அந்தளவுக்கு அந்தக் கட்சியை மக்களுக்குத் தெரியாமலுள்ளது. அதில் போட்டியிடுபவர்கள் அதன் சில்லுகளிலுள்ள கம்பிக்குச் சமமான வாக்குகளைப் பெறுவார்களா என்பதே சந்தேகமாக உள்ளது.

சிறுபிள்ளையாக இருக்கும்போது பிழை செய்வது வழமை ஆனால் ஒரு மனிதன் வளர்ந்து பக்குவமடையும்போது தான் செய்யும் பிழைகளை அறிந்து சீர் செய்வதுடன், இனத்துக்காகவும் மொழி, கலை கலாசாரத்துக்காகவும் தன்னை மாற்றிக் கொள்ள வேண்டும். கடந்த காலங்களில் நானும் மாற்றுக் கட்சிகளுக்கு ஆதரவாக இருந்தவன். மாற்றுக் கட்சிகளின் பிழைகள், துரோகம், பழிவாங்கும் தன்மை என்பன தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஒற்றுமையைப் பார்க்கும்போதே தெரிகிறது.– என்றார். (ற–10)

விரலை உடைக்கப் பார்த்தார் அதனால் பிடித்து தள்ளினேன்

அக்குரஸ்ஸ சம்பவம் குறித்து மஹிந்த



கொழும்பு, ஜூலை 24

எனது கைவிரலை உடைக்கப் பார்த்தார். கைவிரலை பாதுகாப் பதற்கே அவரை பிடித்து தள்ளினேன் என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அக்குரஸ்ஸவில் இடம்பெற்ற ஜக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொள்ளச் சென்ற முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அங்கு வந்திருந்த ஒருவர் மீது தாக்குதல் நடத்தியிருந்ததாக செய்திகள் வெளியாகி இருந்தன.

இந்தச் சம்பவம் தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள மஹிந்த ராஜபக்ஷ சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உண்மையான ஆதரவாளர் ஒருவர் என் மீது கொண்ட பாசத்தால் எனது கையைப் பிடித்து இழுத்தார். அவர் மதுபோதையில் இருந்திருப்பார் என நினைக்கின்றேன். இதன்போது எனது கைவிரல் உடையப் பார்த்தது. எனது கைவிரலை பாதுகாப்பதற்காக நான் அவரை எனது ஒரு கையால் பிடித்துத் தள்ளினேன். ஆனால் நான் அவரை தாக்கியதாகப் பொய்ப் பரப்புரை செய்கின்றனர்.– என்று கூறியுள்ளார். (ற)

இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

மேடம்: நண்பர்களின் உதவியால் மனம் நெகிழ் வீர்கள். அன்றாடப் பணிகளில், ஆர்வத்துடன் ஈடுபடுவீர் கள். தொழில், வியாபாரத்தில், இலாபம் அதிகரிக்கும். பெண்களுக்கு ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டாகும்.

இடபம்: குடும்பத்தினர் ஒத்துழைப்பர். அத்தியாவ சியச் செலவுக்கு கடன் வாங்குவீர்கள். தொழில், வியா பாரத்தில், உழைப்புக்கேற்ப இலாபம் கிடைக்கும். உற வினர் வருகையால் மகிழ்ச்சி கூடும்.

மிதுனம்: வாழ்வில் புதிய அனுபவம் பெறுவீர்கள். எதிரி தொல்லை மறையும். தொழில், வியாபாரத்தில், எதிர் கால வளர்ச்சி குறித்து திட்டமிடுவீர்கள். சுமாரான இலாபம் கிடைக்கும். நண்பர்களின் உதவி கிடைக்கப் பெறுவீர்கள்.

கடகம்: யாரிடமும் சொந்த விடயம் பற்றி பேசுவது கூடாது. தொழில், வியாபாரத்தில், நல்ல வளர்ச்சியும், ஆதாயமும் கிடைக்கும். உடல் நலனில் அக்கறை கொள் வீர்கள். வெளியூர் பயணம் செல்ல நேரிடும்.

சிங்கம்: புத்துணர்வுடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில், இலாபம் பன்மடங்கு உயரும். பணி யாளர்களுக்கு அதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சி நடத்தத் திட்டமிடுவீர்கள்.

கன்னி: மனதில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். பணிகளில் உற்சாகத்துடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில், வளர்ச்சி இலக்குத் திட்டமிட்டபடி நிறைவேறும். எதிர்பார்த்த நல்லசெய்திவீடுதேடிவரும். ஆடம்பரப்பொருள்வாங்குவீர்கள்.

துலாம்: எதிர்பாராத வகையில் வருமானம் அதிகரிக்கும். தொழில், வியாபாரரீதியாக, வெளியூர் பயணம் மேற்கொள் வீர்கள். உணவு விடயத்தில் கட்டுப்பாடு தேவை. மனைவி யின் செயற்பாடு மகிழ்ச்சியளிக்கும்.

விருச்சிகம்: நேர்மை எண்ணத்துடன் செயற்படு வீர்கள். தொழில், வியாபாரத்தில், சுமாரான ஆதாயம் கிடைக்கும். ஆடம்பரச் செலவைத் தவிர்ப்பது நல்லது. சீரான ஓய்வு உடல் நலனுக்கு உதவும்.

தனுசு: பொது விடயங்களில் அக்கறை அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில், அதிக இலாபம் கிடைக்கும். விழா, விருந்து எனச் சென்று மகிழ்வீர்கள். நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

மகரம்: பேச்சில் இனிமை நிறைந்திருக்கும். உறவினர் அன்பு பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில், நல்ல முன்னேற்றம் ஏற்படும். பணவரவு அதிகரிக்கும். பிள்ளைகள் விரும்பியதை வாங்கித் தருவீர்கள்.

கும்பம்: அன்றாடப் பணிகளில், ஆர்வத்துடன் ஈடுபடு வீர்கள். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் அதிகரிக்கும். உறவினர் வருகையால் செலவு உண்டாகும். மாணவர்கள் படிப்பில் ஆர்வத்துடன் ஈடுபடுவர்.

மீனம்: எதிரிகளை இனம் கண்டு விலகுவீர்கள். தொழில், வியாபாரத்தில் சுமாரான வருமானம் கிடைக்கும். சொத் துத் தொடர்பான முக்கிய ஆவணத்தைப் பிறர் பொறுப்பில் தரக் கூடாது. பிள்ளைகளின் நலனில் கவனம் செலுத்துவீர்கள்.

ஸ்கொட்லாந்தில் உள்ள ஹூட் டானன்னி எனும் உணவு விடுதியில் பணிபுரியும் ஆண்கள், கட்டாயமாக ஸ்கொட்லாந்தின் பாரம்பரிய உடை யான பாவாடையை அணிந்து கொள்ள வேண்டும் என கட்டாயப் படுத்தப்பட் டனர். ஆண்கள் பாவாடை அணிவது கேலிக்குரிய விடயமாகக் கருதப்படு கின்ற போதும் அந்த விடுதியில் நல்ல சம்பளம் வழங்கப் படுவதன் காரண மாக அங்கு பணி புரியும் ஆண்கள் பாவாடை அணிந்து பணிபுரிந்தனர். இந்த விடுதிக்கு வரும் பெண்கள் சிலர் மது அருந்திவிட்டு பாவாடை அணிந்திருக்கும் ஊழியர்களைக் கிண்டல் செய்து, அவர்களின் பாவா டையை இழுத்துள்ளார்கள். ஆரம் பத்தில் விளையாட்டு என்று நினைத்த ஊழியர்கள், அப்படிப்பட்ட விடயங் கள் தொடர்ந்து இடம்பெற்றதால் மனம் உடைந்து போனார்கள். இனிமேல் பாவாடைகளை அணிந்து வேலை செய்ய முடியாது என விடுதி மேலாளரிடம் ஊழியர் கள் தெரிவித்து விட்டனர். வாடிக்கையாளர்கள் எவ்வளவு முக்கியமோ, அதேபோன்று ஊழியர்களும் முக்கியம் என்று கூறிய மேலாளர், இனி எவரும் பாரம்பரிய பாவாடையை அணிய வேண்டாம் என்று கூறியுள்ளார்.

பேயால்

மதிப்பை இழந்த விமான நிலையம்

பாழடைந்த வீடுகள், பழைய அரண்மனைகள் போன்றவற்றில் பேய் நடமாட்டம் இருப்பதாகக் கூறப் படுவது உண்டு. இதேபோல் பரப்பப்பட்ட பேய் வதந்தி ஸ்பெயின் நாட்டில் ஒரு வியப்பை ஏற்படுத்தியுள்ளது. ஸ்பெயினில் கடந்த 2008 ஆம் ஆண்டு 100 கோடி யூரோ செலவில் விமான நிலையமொன்று கட்டப்பட் டது. இது கடந்த சில வருடங்களாகப் பயன் படுத்தப்படா மல் மூடப்பட்டிருந்தது.

இதையடுத்து அங்கு பேய் நடமாட்டம் இருப்ப தாக வதந்திகள் பரப்பப்பட்டது.

எனவே அந்த விமான நிலையத்தை ஏலத்தில் விற்க முடிவு செய்யப்பட்டது. அதில் வியப்பு என்னவென்றால், சுமார் 100 கோடி யூரோ செலவில் கட்டப்பட்ட அந்த விமான நிலை யம் வெறும் 6 ஆயிரத்து 900 யூரோக்களுக்கே ஏலம் போனமைதான்.

பாட்ஷா-2

உண்மையா ?

பாட்ஷா 2 தொடர்பான செய்தி உண்மையாக வேண்டும் என்று நானும் காத்திருக்கிறேன். இவ்வாறு இயக்குநர் சுரேஷ் கிருஷ்ணா தெரிவித்துள்ளார். ரஜினி படங்களின் வரி சையில், அனைத்துத்தரப்பு மக்களையும் கவர்ந்து மாபெரும் வரவேற்புப் பெற்ற படம் பாட்ஷா. 1995 ஆம் ஆண்டு வெளிவந்த இந்தப் படத்தை, எப்போது தொலைக் காட்சியில் திரையிட்டாலும், சமூக வலைத்தளங்களில் அந்தப் படம் குறித்து விவாதித்து வருவார்கள். இந்த நிலையில், தனது அடுத்த படத்தை தயாரிக்கும் நிறுவனமாக சத்யஜோதி பிலிம்ஸ் நிறுவனத்தை தெரிவு செய்திருக்கிறார் அஜித். ரஜினி பாட்ஷா –2 ஆம் பாகத்தில் நடிக்க மறுத்து விட்ட தாகவும், இதையடுத்து அஜீத்தை சுரேஷ்கிருஷ்ணா அணு கிக் கதை சொன்னதாகவும், அவருக்கு கதை பிடித்து விட்ட தாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. எனவே பாட்ஷா– 2 ஆம் பாகத்தில் அஜீத் நடிப்பார் எனக் கூறப் படுகிறது. அதற்கான அதிகாரப்பூர்வ அறி விப்பு விரைவில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது என்று செய்திகள் இணையத்தில் வெளியாகி இருக்கின்றன.

இந்தச் செய்தி குறித்து இயக்குநர் சுரேஷ் கிருஷ்ணா தெரிவிக்கையில்; பாட்ஷா தொடர்பான செய்திகள் ஒவ்வொரு முறை வரும்போதும் எனக்குச் சந்தோஷமாக இருக்கிறது. இந்த முறையும் வந்திருக்கிறது. ஆனால், அந்தச் செய்தியில் உண்மை யில்லை. அஜித் படத்தை யார் தான் இயக்க மாட்டேன் என்று சொல்லுவார்கள். இந்தச் செய்தி உண்மையாக வேண்டும் என்று நானும் காத்திருக்கிறேன் எனத் தெரிவித் துள்ளார்.

ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய சங்கங்களின் மதிப்பீட்டு முடிவு

வேலி, ஜூலை 24
யாழ்.மாவட்டத்தில் பிரதேச செயலக பிரிவுவாரியாக செயற்படும் அரச சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியச் சங்கங்கள் இடையே மேற்கொள்ளப்பட்ட 2014ஆம் ஆண்டுக்கான மதிப்பீடு தொடர்பான விவரம் வெளியிடப்பட்டுள்ளது.
மதிப்பீடு இரண்டு பிரிவுகளாக நடைபெற்றது. 151உறுப்பினர்களுக்கு மேற்பட்டசங்கங்கள் 'ஏ' பிரிவாகவும், 150 உறுப்பினர்களுக்கு குறைவான சங்கங்கள் 'பி' பிரிவாகவும் மதிப்பிடப்பட்டன.
'ஏ' பிரிவு
முதலாம் இடம் – வலி.கிழக்கு கோப்பாய்ப் பிரதேச பிரிவு 219 புள்ளிகள்
இரண்டாம் இடம் – நல்லூர் பிரதேச பிரிவு 106 புள்ளிகள்
மூன்றாம் இடம் – சங்கானை வலி.மேற்கு பிரதேச பிரிவு 90 புள்ளிகள்
'பி' பிரிவு
முதலாம் இடம் – காரைநகர் பிரதேச பிரிவு 103 புள்ளிகள்
இரண்டாம் இடம் – வேலணை பிரதேச பிரிவு 50 புள்ளிகள்
மூன்றாம் இடம் – நெடுந்தீவு பிரதேச பிரிவு 46 புள்ளிகள்
மதிப்பீடு தாய்ச் சங்கத்தின் வழிப்படுத்தலின் பேரில் யாழ். மாவட்டச் சங்கத்தால் நடத்தப்படுகின்றது.
ஆண்டுதோறும் மதிப்பீடுகள், சங்கங்களின் தொழிற்பாடு மற்றும் நிர்வாக உறுப்பினர்களுக்கு வழங்கும் சேவை, ஆவணங்களைப் பராமரித்தல், உறுப்பினர் களின் எண்ணிக்கை, வகைப்பாடு உள்ளிட்ட அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்றன. (ற–11)

பஸ் நிலையத்துக்கு செல்லாது வீதியில் இறக்கிவிடும் பஸ்கள்

கொடிகாமத்தில் பயணிகள் சிரமம்

தென்மராட்சி, ஜூலை 24
சாவகச்சேரி பிரதேச சபையால் கொடிகாமத்தில் பல லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட பஸ் நிலையத்தை ஏ– 9 வீதியில் செல்லும் தூர இடங்களுக்கான இ.போ.ச. மற்றும் தனியார் பஸ்கள் பயன்படுத்தாமல் ஏ–9 வீதியில் நிறுத்தி பயணிகளை ஏற்றி இறக்கிச் செல்வது குறித்து பயணிகள் கவலை தெரிவித்தனர். இந்தப் பஸ் நிலையத்தை கொடிகாமம்– யாழ்ப்பாணம் கொடிகாமம்– பருத்தித்துறை மார்க்கத்தில் செல்லும் இ.போ.ச.பஸ்களும் தனியார் சிற்றூர்திகளும் மட்டும் பயன்படுத்துகின்றன. தூர இடங்களுக்குச் செல்லும் பஸ்கள் கொடிகாமம் பஸ் நிலையத்திலிருந்து 100 மீற்றர் தூரத்தில் உள்ள ஏ–9 வீதியில் பயணிகளை இறக்கிவிட்டுச் செல்கின்றன. தூர இடங்களிலிருந்து பொருள்களுடன் வரும் வடமராட்சி பிரதேச பயணிகள் ஏ–9 வீதியில் இறக்கப்படுவதால் அங்கிருந்து தமது பொருள்களுடன் பஸ் நிலையத்திற்கு நடந்து செல்லவேண்டியுள்ளது என்றும் தெரிவித்தனர்.
கொடிகாமம்சந்தியிலிருந்து 100மீற்றர்தூரத்திலுள்ளபஸ்நிலையத்துக்குபஸ்களைகொண்டுசெல்ல இ.போ.ச. சாரதிகள் தயங்குவதால் பயணிகள் சிரமங்களை எதிர்நோக்கவேண்டியுள்ளதாகவும் தெரிவித்தனர். இது தொடர்பாக உரிய அதிகாரிகள் கவனத்தில் எடுத்து ஏ– 9வீதியில் செல்லும் அனைத்து இ.போ.ச. பஸ்களும் கொடிகாமம் பஸ் நிலையத்திற்கு சென்று திரும்ப நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர். (ற–9)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு



4

சுரேஷ் க.பிறேமச்சந்திரன்


X
4

அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்ற
ஆக்கிரமிப்புக்களை அகற்ற
இழந்த வாழ்வாதாரத்தை மீட்டெடுக்க
வீட்டுச் சின்னத்திற்கும் இலக்கம்
4 இற்கும் வாக்களியுங்கள்

நம்பிக்கை இழக்காதீர்கள், அக்கறை காட்ட நாங்கள் இருக்கின்றோம்...

வீதியில் இருக்கும் இளைஞர்களை அலுவலகங்களிற்கு அனுப்புவோம்.

நானும் ஒரு இளைஞனாய் எவ்வித பதவிகளுமற்று நேர்மையான வழியில் 4,500க்கு மேற்பட்ட வேலைவாய்ப்பினை வழங்கியுள்ளேன். இளைஞர்கள் யுவதிகளின் வளமான வாழ்விற்காய் 100,000 வேலைவாய்ப்புக்களை வட மாகாணத்திற்கு கொண்டு வருவோம் என உறுதி மொழி அளிக்கின்றேன்.

- மூன்றாம் நிலைக்கல்வியினை ஏற்படுத்துவோம்.
- வெளிநாட்டு தொழிற்கல்வியை உருவாக்குவோம்.
- 8ஆம் ஆண்டு மற்றும் க.பொ.த சாதரணதரம் மற்றும் உயர்தரம் மற்றும் பட்டதாரிகளுக்கு உரிய வேலை வாய்ப்பை வழங்குவோம்.
- தனியார் தொழில் வாய்ப்பினை ஏற்படுத்தி கொடுத்தல்
- தகுதியானவர்களிற்கு மேலைத்தேய நாடுகளில் வேலைவாய்ப்பினை ஏற்படுத்திக்கொடுப்போம்.
- கற்றுலாத்துறை, ஹோட்டல் முகாமைத்துவ கற்கைநெறி துறைகளில் வேலை வாய்ப்பை வழங்குதல்.
- கிராமந்தோறும் சிறு கைத்தொழில்களை ஊக்குவிப்போம்.

1X

அங்கஜன் இராமநாதன்
MBA (International) B.Eng (Hons)
(ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய குழு உறுப்பினர்
மற்றும் வடமாகாண சபை உறுப்பினர்)

புதியநாடு – புதிய தலைவர் – புதியதலைமுறை – புதிய எதிர்பார்ப்பு

சந்நிதி முருகன் வருடாந்த மஹோற்சவம்

கரணவாய், ஜூலை 24
வரலாற்றுப் பிரசித்தி பெற்ற செல்வச் சந்நிதி ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 14ஆம் திகதி இரவு 8மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.
தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறும் இந்த மகோற்சவத் திருவிழாவில் 23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பூங்காவனத் திருவிழாவும், 24ஆம் திகதி கைலாசவாகனத் திருவிழாவும், 27ஆம் திகதி சப்பறத்திருவிழாவும் 28ஆம் திகதி தேர்த் திருவிழாவும் இடம்பெறவுள்ளதுடன் மறுநாள் சனிக்கிழமை காலை 8மணிக்குத் தீர்த்தத்திரு விழாவும் இடம்பெறவுள்ளன. தினமும் காலைத் திருவிழா காலை 8மணிக்கும் இரவுத் திருவிழா மாலை 5மணிக்கும் ஆரம்பமாகி நடைபெறும்.
உற்சவ காலங்களில் ஆலயச் சூழலில் அமைந்துள்ள மடங்களில் அன்னதானம் வழங்குவதற்கு உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதுடன், திருவிழாக் காலங்களில் நேர்த்திக்கடன்களை நிறைவேற்ற விரும்புபவர்கள் ஆலய நிர்வாகத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ற–108)

அராலி-வேலணை வீதியை புனரமைக்கக் கோரிக்கை

மானிப்பாய், ஜூலை 24
தீவகத்தையும் வலிகாமத்தை இணைக்கும் அராலி –வேலணை ஊடான வீதியை (கடற்பாதை) புனரமைக்க யாழ்.மாவட்டத்தின் புதிய அரச அதிபர் நாகலிங்கம் வேதநாயகன் முன்வர வேண்டும் – இவ்வாறு வலி.மேற்கு பிரதேச சபை உறுப்பினர் சண்முகலிங்கம் சபேசன் தெரிவித்தார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–
தீவகத்தையும் வலிகாமத்தையும் இணைக்கும் ஒரு வீதி ஊடான கடற்பாதை புனரமைப்புக் குறித்து கடந்த 5 வருடங்களாகக் கோரிக்கை விடுத்து வருகின்றோம். முன்னாள் அரச அதிபர் இதற்கான திட்டத்தை முன்நகர்த்த முன்வரவில்லை. இதற்கு முன்னிருந்த அரச அதிபர் க.கணேஷ் பல நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்த வேளையில் இளைப்பாறியிருந்தார்.
தற்போது புதிய அரச அதிபராகப் பொறுப்பேற்றிருக்கும் நா.வேதநாயகன் அராலி வேலணை இணைக்கும் கடற்பாதைத் திட்டம் குறித்து மீள ஆராய வேண்டும். வீதி அபிவிருத்தி அதிகார சபையுடன் இணைந்த வகையில் ஜப்பான் நாடு ஜெய்காத் திட்டத்தில் இதற்கான சாத்தியவளகற்கை நெறிகளை பூர்த்தி செய்து மதிப்பீடு செய்துள்ளது.
முன்னாள் அரச அதிபர் க.கணேஷ் இதற்கு 50 மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கியிருந்தார். தற்போது வல்வை தெல்லிப்பழை காப்பெற் வீதி புனரமைப்புப் பணி முடிவடைந்து அராலி துறை முகத்துடன் முடிகின்றது. இந்தவீதி வலுப்பெற வேண்டுமாயின் அராலி வேலணை கடற்பாதை முழுமை பெறவேண்டும்.
எனவே அரச அதிபர் முதற்கட்டமாக மேற்படி வீதியை திட்டமிடல் பணிப்பாளர் ஊடாகப் பெற்று இதனை மீளச் செயற்படுத்தி இந்த ஆண்டில் இதற்கு வலுச்சேர்க்க வேண்டும்.– என்றார். (ற–

சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை

வலி.தென்மேற்கு, ஜூலை 24
ஆனைக்கோட்டை இந்து விருத்திச் சங்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை இன்று வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு மூத்த நயினார் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
சங்கத் தலைவரும் முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளருமான எஸ்.கணேகலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் ஆசிரியர் அ.முருகதாஸ் சிறப்புரை வழங்கவுள்ளார். (ற–115)

முகத்தை முடிய தலைக்கவசம் அணிந்தோருக்கு எச்சரிக்கை

கிளிநொச்சி, ஜூலை 24
முகத்தை முழுமையாக மூடிய தலைக்கவசம் அணிந்து மோட்டார் சைக்கிள் ஓட்டிய சாரதிகள் மூவர் நேற்று கிளிநொச்சி மாவட்ட நீதிவானால் எச்சரித்து விடுவிக்கப்பட்டனர்.
கிளிநொச்சி பகுதியில் முகத்தை முழுமையாக மூடி தலைக்கவசம் அணிந்து மோட்டார் சைக்கிளை செலுத்திய சாரதிகள் மூவருக்கு எதிராக கிளிநொச்சி போக்கு வரத்து பொலிஸாரால் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் நேற்று வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.
இதன்போது தனித்தனியே மூவரிடமும் விசாரணைகளை மேற்கொண்ட கிளிநொச்சி மாவட்ட நீதிபதி எம்.ஐ.வஹாப்தீன் முகத்தை முழுமையாக மூடிய தலைக்கவசம் அணிவது தடைசெய்யப்பட்டுள்ளது என்றும், இனிமேல் அவ்வாறு அணிந்து கைது செய்யப்பட்டால் கடுமையான தண்டனை வழங்கப்படும் என்றும் எச்சரித்து குறித்த நபர்களை விடுதலை செய்தார்.
அத்தோடு தலைக்கவசம் இன்றி மோட்டார் சைக்கிளை செலுத்திய நபர் ஒருவருக்கு ஆயிரம் ரூபா தண்டமும் நீதிமன்றத்தால் விதிக்கப்பட்டது. (ற–21)

நவநாள் வழிபாடு

கொழும்புத்துறை, ஜூலை 24
பாண்டியன்தாழ்வு புனித அன்னம்மாள் ஆலய வருடாந்த திருவிழா ஆரம்பமாகி நவநாள் வழிபாடுகள் தினமும் மாலை 5மணிக்கு நடைபெற்று வருகின்றன. நாளை சனிக்கிழமை மாலை 5மணிக்கு நற்கருணைப் பெருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 6.30மணிக்கு திருநாள் திருப்பலியும் திருச்சொரூப பவனியும் இடம்பெறவுள்ளன. (ற–135)

யாழ். ஆனைக்கோட்டையில்
புலமைச்சுடர்
நடத்தும்
தரம் 5 மாணவர்களுக்கான இலவசக் கருத்தரங்கு
காலம்: 26. 07. 2015 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம் : காலை 8.30 மணி
தொடக்கம் 2.00 மணி வரை
இடம் : துரைஐயா மண்டபம்,
ஆனைக்கோட்டைச் சந்தி

P. பத்மநேசன்,
யாழ்ப்பாணம்

N. கீதபொன்கலன்,
யாழ்ப்பாணம்

N. S. தீபன்,
வவுனியா

பிரதான அனுசரணை :
உதயன் தமிழ் தேசிய நாளிதழ்
ஏற்பாட்டாளர் மானிப்பாய் பரிஸ்
இணை அனுசரணை :
துரைஐயா மண்டபம்,
ஆனைக்கோட்டைச் சந்தி
சுடர் ஒளி THE SUDAR OLI
தமிழ் பேசும் மக்களின் தன்மான நாளிதழ்

* இடநெருக்கடியை தவிர்த்துக் கொள்வதற்காக 077 4228 102 / 077 2247419 / 077 6569617 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பாடசாலை ரீதியா கலந்துகொள்ள இருக்கும் மாணவர் தொகையினை முற்பதிவு செய்துகொள்ளுங்கள்.
* பங்குபற்றும் மாணவர்கள் குறிப்பேடு, சிற்றுண்டி உணவு, தண்ணீர் ஆகியவற்றை தம்முடன் எடுத்துவரவும்.
* பயணம் செய்யவேண்டிய பஸ் இலக்கங்கள் - 782, 786, 787, 766, 767

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

காணிகள் விற்பனைக்கு உண்டு
01 சரவணை கிழக்கு சூனகுண்டான் குளத்தடியில் உள்ள திருத்தப்படாத தோட்டக் காணி விற்பனைக்கு உண்டு.
02 மண்டைதீவில் முகப்பு வயல் கந்த சுவாமி கோயிலுக்கு அருகில் உள்ள தோட்டக்காணி (நில. பர. 5) விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 927 0049 (63276) (3.5.7)

KPMG cutting through complexity
Our client is a leader in the printing industry that delivers latest printing materials and services in the region is seeking a Business Development Manager to drive the Marketing Division

Head of Business Development Manager.
- Identify, design and implement strategic Marketing projects, as and when required;
- Responsible for source, develop, market company product and services.
- Proven track record in at least five years in marketing field managerial capacity.
- Age above 30 years.

Ideal Candidate:
- Minimum 5 years of experience as an Assistant sales Manager in the retail Sector;
- Degree in Marketing/Management and a professional qualification in Marketing would be an added advantage;
- High level of written and verbal communication skills;
- Strong interpersonal and leadership skills;
- High level of moral ethics, welcoming and approachable.

Manager,
KPMG Jaffna Branch, 756, Hospital Road,Jaffna.
E-mail: mmayuran@kpmg.com

The successful candidate would be provided with a competitive remuneration package on par With the industry standards and other fringe benefits.
Applications with detailed Curriculum Vitae and contact details of two non- related referees, Quoting the reference number and position on both the cover letter and subject of the e-mail, Should reach the following address / email, within seven days of this advert.

© 2014 KPMG Executive Search (Private) Limited is a subsidiary of a sub licensee of KPMG, a Sri Lankan Partnership and a member firm of the KPMG network of independent member firms affiliated with KPMG International Cooperative ("KPMG International"), a Swiss entity. All rights reserved.

Knowledge Universe Sri Lanka
English for Kids
Since 1997
ADMISSIONS OPEN
15% Discount T&C Applied
KU's methodology
Limited Seats | Starts on 27/07/2015

Kids Course	Age limit
KU's Kids L1- [Primary]	6-7 Years
KU's Kids L2-[Junior]	8-10 Years
KU's Kids L3-[Senior]	11-13 Years
KU's Teens L4-[S.Senior]	14-16 Years

வடமாகாணத்தின் முதல் தர நவீன ஆங்கிலக் கல்லூரியில், உங்கள் செல்வங்கள் ஆற்பழக்கவழக்கங்களுடன், விளையாட்டாகவும் மன மகிழ்வாகவும் ஆங்கிலத்தை சிறு வயதிலேயே கற்று ஆங்கிலத்தொடர்பாடல் திறனிலும் ஆளுமையிலும் சிறப்பதை காண விரும்பினால் இப்போதே அழையுங்கள் - 0767302882 /021-3208342
பெற்றோர்க்கான முக்கிய ஆலோசனை:
பயிற்சி நெறி பற்றியும்,நிறுவன வரலாறு, ஆசிரியர்களின் கல்வித்தகுதி அனுபவம் என்பவற்றை பற்றியும் நேரில் விசாரித்து அறிந்த பின்னர் மட்டுமே உங்கள் குழந்தைகளை எந்தக்கல்வி நிறுவனதிலும் சேருங்கள்.விளம்பரங்கள் ஏமாற்றலாம்.
Visit Web : http://edu.kugroup.info/ke
Knowledge Universe®
No 626,1/1, K.K.S Rd,Jaffna
குழந்தைகளுக்காக விசேட பட்டதாரி பெண் ஆசிரியைகள்
கே.யு வினுடைய சொந்த கற்பித்தல் முறை
இது மனனமாக்கும் பள்ளியல்ல மனிதனாக்கும் பள்ளி.
Copy cats ! Be original - don't copy this advertisement

பாராளுமன்றத் தேர்தல் - 2015

தமிழ்த் தேசியக் கட்டமைப்பு



5

உதயன்

சி.சிறவணைபவன்

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் - இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி

குழுமத் தலைவர் - உதயன் பத்திரிகை

1	2	3	4	5	6	7	8	9	10

மரண அறிவித்தல்கள்

பஞ்சலிங்கம் கமலேந்திரன் (றூபன்)

Msc Marine Engineering, Bulgaria
(Director N.S.K Oil Seals Company Pvt Ltd, Mabola, Wattala)



தோற்றம்	மறைவு
03.03.1966	16.07.2015

யாழ்ப்பாணம் சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், கொழும்பு வத்தளையை வதிவிடமாகவும் கொண்ட கமலேந்திரன் பஞ்சலிங்கம் (றூபன்) 16.07.2015 வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பஞ்சலிங்கம் - சிவகாம்பிகை தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், பொன்னையா - பரமேஸ்வரி தம்பதிகளின் மருமகனும் விஜிஜேந்திரா (Green Peace Rest), சுகந்தி(Canada), மாலதி (Norway),அம்பிகை (UK) ஆகியோரின் பாசமிகு பெரியண்ணாவும், லவாஞ்சலி, நிஷாஞ்சலி ஆகியோரின் அன்புத் தந்தையும் மயூரி(Norway), அருள்ராசா (Canada), சிவநேசன் (Norway) குமரன்(UK) ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஆரணி, ஆதவன் ஆகியோரின் பாசமிகு பெரியப் பாவும் கஜப்பிரியன், வத்சலாயினி, நிஷாந்தன், நிவேதா, கஜந்தன், நிகித்தா, மதிப்பிரதயன், துரன்யா ஆகியோரின் பாசமிகு பெரிய மாமாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் சுன்னாகம் முத்துக்கிருஷ்ணர் வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இன்று(24.07.2015) வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு இறுதிக் கிரியைகள் நடைபெற்று பூதவுடல் சுன்னாகம் கொத்தியாலடி இந்துமயானத்துக்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் சக ஊழியர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

முத்துக்கிருஷ்ணர் வீதி, சுன்னாகம்.
தொலை பேசி :
077 374 5832 , 077 311 1106

மனைவி, சகோதர சகோதரிகள்
குடும்பம் மற்றும்
உறவினர்கள்.

திருமதி சின்னப்பிள்ளை மாணிக்கம்

அன்னை மடியில்	15. 02. 1939
ஆண்டவன் அடியில்	22.07.2015

கைதடி மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மாணிக்கம் சின்னப்பிள்ளை 22.07 2015 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகன் - வள்ளி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கதிரன்- செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் மாணிக்கத்தின் அன்பு மனைவியும் சின்னத்தம்பி, நாகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் கந்தையா, சின்னத்தம்பி,அருந்தவம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் பாசமலர் (ஜேர்மனி), தவமலர், தர்மராசா (ரகு -லண்டன்), சசிமலர் ஆகியோரின் அன்புத் தாயும் சந்திரபாலு (ஜேர்மனி), லலிதராணி (லண்டன்), ஜெகதீஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் சதீஸ், றெஜினா(லண்டன்) ,திஷாந், சகன்யா, றோபிதா, சரண்யா, சுகன்யன், ரோகினி(ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் நேருஜா, கஸ்மியா, அனன்யா(லண்டன்) ஆகியோரின்அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.07.2015) வெள்ளிக் கிழமை பிற்பகல்4.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊரியான் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்பு :
தவமலர் - 021 7901702
றெஜினா - 004 41908394060
ரகு - 00447448635046
பாசமலர் - 00495517906319

தகவல்:
கண்ணன் அனுலா
(பெறாமகள், லண்டன்)

கைதடி மேற்கு,
கைதடி.

மட்டு. உணவகங்களில் திடீர் சுகாதார சோதனை

மட்டக்களப்பு, ஜூலை 24

மட்டக்களப்பு நகரின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள உணவகங்கள் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் திடீர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. உணவு விடுதிகளில் விற்பனை செய்யப்படும் உணவுகளின் தரம் தொடர்பில் பொதுமக்களால் தெரிவிக்கப்பட்டுவரும் முறைப்பாடுகளை தொடர்ந்தே இந்தச் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு நகரின் கோட்டைமுனை மற்றும் வெட்டுக்காடு பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளிலேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டன. மட்டக்களப்பு பொதுச் சுகாதாரப் பரிசோதகர் கா.ஜெயரஞ்சனின் வழிகாட்டலில் வெட்டுக்காடு பொதுச் சுகாதார பிரிவு, பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எஸ்.அமுதமாலன் மற்றும் கோட்டைமுனை பொதுச் சுகாதாரப்பிரிவு, பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ரி.சகாய தேவராஜா ஆகியோரின் தலைமையில் சென்ற பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் இந்தச் சோதனைகளை மேற்கொண்டனர்.

பழைய உணவுப்பொருள்களை குளிரூட்டியில் வைத்து பின்னர் சூடாக்கி மீண்டும் காலை வேளையில் சில உணவு விடுதிகள் விற்பனை செய்துவருவது இதன்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்று வெட்டுக்காடு பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எஸ்.அமுதமாலன் தெரிவித்தார்.

இதன்போது கோட்டைமுனை பகுதியில் இரண்டு உணவு விடுதிகளுக்கும் வெட்டுக்காடு பகுதியில் நான்கு உணவகங்களுக்கும் எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

(ற-10)

கஞ்சாவுடன் இருவர் கைது

மட்டக்களப்பு, ஜூலை 24

கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் இருவர் ஏறாவூர் பொலிஸ் பிரிவில் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

6 ஆயிரத்து 320 மில்லி கிராம் கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் 29 வயதுடைய ஒருவரும், 7,820 மில்லி கிராம் கஞ்சாவை விற்பனைக்கு வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் 23 வயதுடைய ஒருவரும், கைது செய்யப்பட் டுள்ளனர்.

இது குறித்துப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ற-10)

முத்துக்குமாரு மயில்வாகனம் சுவாமி குருபூசை

வடமராட்சி, ஜூலை 24

முத்துக்குமாரு மயில் வாகனம் சுவாமிகளின் 30 ஆவது குருபூசைத் தினம் இன்று வெள்ளிக் கிழமை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

காலை 9 மணிக்கு செல்வச்சந்நிதி ஆலயத்தில் இடம்பெறும் விசேட அபிஷேக ஆராதனைகளைத் தொடர்ந்து நினைவுப் பேருரைகளும், சிறப்புச் சொற்பொழிவுகளும் சந்நிதியான் ஆச்சிர மண்டபத்தில் நடைபெறும். தொடர்ந்து கவிஞர் அன்னை தாசன் குழுவினரின் கதம்பமாலை நிகழ்வும் மகேஸ்வர பூசையும் இடம்பெறும்.

(ற)

பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 24

நெல்லிடி மத்திய கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு நிகழ்வை எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை கல்லூரியின் கேட்போர் கூடத்தில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நெல்லியடி மத்திய கல்லூரியின் அதிபர் கிருஷ்ணகுமாரின் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கல்லூரியின் பழைய மாணவரும் இங்கிலாந்தின் ஹரோ நகரசபையின் முதல்வருமான கிருஷ்ணா சுரேஸ் கலந்து கொள்ளவுள்ளார்.

(ம்)

மரண அறிவித்தல்

பிறப்பு	இறப்பு
1947	2015
02	07
28	21

திருமதி விஜயலக்சுமி பூபாலசிங்கம்

யாழ் மாட்டின் வீதியைப் பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும், புங்குடுதீவை பூர்வீகமாகவும் கொண்ட திருமதி விஜயலக்சுமி பூபால சிங்கம் அவர்கள் 21.07.2015 செவ்வாய் அன்று சிவபதமடைந்தார். அன்னார் ஆறுமுகம் இராசம்மா தம்பதியரின் இளைய புதல்வியும், புளியங்கூடலைச் சேர்ந்த வேலுப்பிள்ளை பூபாலசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், வேலுப்பிள்ளை தெய்வானப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், தனலக்சுமி, கனகலிங்கம் ஆகியோரின் அன்புத் தங்கையும், தனேந்திரா (Australia), தர்மேந்திரா (Australia), Dr.அங்கனி (கொழும்பு போதன வைத்தியசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும் Dr. இராகுலன், ரமணா, வீமா, ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காவியா, ஆருத்திரா, தியன் ஆகியோரின் அன்பான பேத்தியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 25.07.2015 சனிக்கிழமை ஜெயரட்ண மலர்ச்சாலை பொரளையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 26.07.2015 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 11 மணியளவில் ஈமக்கிரியைகளைத் தொடர்ந்து பொரளை மயானத்தில் தகனம் செய்யப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: கணவர் வே. பூபாலசிங்கம் (Segar and Bros பங்குதாரர்)
ஆட்டுப்பட்டித் தெரு, தொடர்பு -0112503336

மரண அறிவித்தல்

குமாரசாமி சிவதாஸ்

(சிவமூர்த்தி தவில் வித்துவான்)

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி சிவதாஸ் 22.07.2015 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசாமி - வாலாம்பிகை தம்பதியரின் அன்பு மகனும் ஜெயமுலாவின் (ஜமுனா) அன்புக் கணவரும் ஹரிகரனின் பாசமிகு தந்தையும் சுலோசனா, ஜெயமூர்த்தி, கல்பனா, குபேரமூர்த்தி,ரஞ்சனா, காஞ்சனா,மோகனா ஆகியோரின் பாசமிகு சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 26.07.2015 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அளவெட்டி கேணிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கூத்தன் சீமா
அளவெட்டி வடக்கு.

தகவல்:
குடும்பத்தினர்.

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

ஐந்தாவது ஆண்டு நினைவஞ்சலி

சண்முகம் விஸ்வநாதர் முருகேசு

S.V.M

(விளானை, களபூமி, காரைநகர்)

தோற்றம்: 23.12.1923

மறைவு: 16.08.2010

ஈழத்து சிதம்பரத்தைத் தன்னகத்தே கொண்ட எழிலார்ந்த காரைநகர் களபூமியில் ஆயிரத்து தொழாயிரத்து இருபத்துமூன்றில் உயர் சைவ கௌரவ மரபினில் உத்தமர் விஸ்வநாதர் பார்வதி தம்பதியர்க்கு வியந்து போற்றும் வியாபாரம் விளங்கிடும் வண்ணம் வியாபார காரைத் திருநகரில் வந்துதித்தார். அன்னை வயிற்றினில் குடியிருந்தவர் அவனியில் மகத்துவ சிறப்புடன் வந்துதித்தார். கண்ணை விரித்து உலகை ரசித்தார். மெல்லச் சிரித்து மழலை மொழிந்தார். பள்ளி சென்று பாடம் பயின்றார். பாரெங்கும் போற்றும் வர்த்தக மாமேதையானார். ஆயிரத்து தொழாயிரத்து நாற்பதுகளில் ஆளுமை வளர வடமராட்சி நெல்லியடியில் கால்கோள் விழாப்போல் வியாபாரத்தை ஆரம்பித்தார். கனவுகள் நனவாக காலம் கனிந்தது. நினைவுகள் விரிய கிளிநொச்சி கரடிப்போக்கில் ஆயிரத்து தொழாயிரத்து ஐம்பதுகளில் ஆரம்பித்தார் முருகன் அரிசி ஆலையினை. வாயார போற்றிடும்

வர்த்தக திலகமாய்

வட மாகாணத்தில் யாழ்ப்பாண திருநாட்டில் ஆயிரத்து தொழாயிரத்து அறுபதுகளில் பாயிரம் எழுதும் வகையில் ச.வி. முருகேசு நாமத்தில் சரித்திரத்தில் இடம்பதித்து 'எஸ்.வி. எம்'மை வளர்த்தார் உரிய வகையில் வர்த்தக முதல்வரானார். உலகைபொங்க தலைநகர் கொழும்பில் உலகம் வியக்க S.V.M.(Pvt) Ltd நிறுவனத்தை ஆயிரத்து தொழாயிரத்து எண்பத்தியாறுகளில் ஆரம்பித்தார். டாம் வீதியில் டாம்பீகம் மலிந்தது. நேரிய உழைப்பினால் நிகரற்ற வெற்றிகள் சேர்த்தார். நீள நினைப்பதற் குரிய வர்த்தகத்துறை வள்ளலானார். பாரிய சேவையை பாரெங்கும் விதைத்தார் கோரிக்கை பெருக்க கொழும்பு வெள்ளவத்தையில் தகவில்லா சிறப்புகளுடன் "சுப்பர் மாக்கெட்" டை தமிழர் வாழும் பிரதேசத்தில் பிரியத்துடன் ஆரம்பித்தார். உவப்புடன் உலகம் வியந்திட உயர்வுகள் கண்டார். சமய சமூக நிறுவனங்கள் அன்னதான மடங்களுக்கு இமயமாய் விளங்கி இயன்ற உதவிகள் நல்கினார். அன்னாரின் ஐந்தாவது ஆண்டு நினைவஞ்சலியை எண்ணுவோம். ஈழத்துசிதம்பரேசனை வேண்டுவோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

வளமோங்க வாழ வழிசெய் தந்தையின்
ஐந்தாவது ஆண்டு நினைவுகளுடன்

குடும்பத்தினர்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பணியாளர்கள்.

154, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
122, டாம் வீதி, கொழும்பு.
4 ஆம் வாய்க்கால் மருதநகர், கிளிநொச்சி.



இறந்த குழந்தைகளின் உடல்கள் விற்பனை

லண்டன்,ஜூலை 24

பாங்கொங்கில் இறந்த குழந்தைகளின் உடல்களை வைத்திருந்த நபரை பொலிஸார் கைது செய்து விசாரணை நடத்தியதில் அதிர்ச்சித் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இங்கிலாந்தைச் சேர்ந்த சோவ் ஹோக் குவன் என்பவர் சில மாதங்களுக்கு முன்னர் சுமார் 6,400 பொலரைக் கொடுத்து இறந்த குழந்தைகளின் 6 உடல்களை வாங்கியுள்ளார்.

இந்த உடல்களைத் தாய்வானுக்கு கடத்தத் திட்டமிட்டிருந்தபோது ஹோட்டலில் தங்கியிருந்த அவரைப் பொலிஸார் கைது செய்தனர்.

மேலும், அவர் வைத்திருந்த குழந்தைகளின் உடல்கள் அனைத்தும் 2 முதல் 7 மாத கருவாக இருந்தன. அவை அனைத்தும் வறுக்கப்பட்டுத் தங்க இழைகளால் சுற்றப்பட்டிருந்தன. இது குறித்து பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறுகையில்; இந்த உடல்கள் வீட்டில் இருந்தால் அதிர்ஷ்டமெனவும், பணக்காரராக மாறலாம் எனவும் வாடிக்கையாளர்கள் நம்புகின்றனர். சூனியம் மற்றும் மந்திர தந்திர செயல்களுக்காக இணையதள விளம்பரம் மூலம் பணக்கார வாடிக்கையாளர்கள் இவற்றை வாங்கி வருகின்றனர்.

தற்போது, இந்த வியாபாரத்தில் ஈடுபட்ட சோவ்வுக்கு ஒருவருடமாவது சிறைத் தண்டனை கிடைக்க வாய்ப்புள்ளது எனக் கூறியுள்ளார். (ஐ)

நைஜீரியாவில் தாக்குதல் 50 பேர் சாவு!

கானோ, ஜூலை 24

நைஜீரியா மற்றும் கமரூனில் நடத்தப்பட்ட தொடர் வெடிகுண்டுத் தாக்குதல் சம்பவங்களில் 50 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். வடகிழக்கு நைஜீரியாவின் காம்பே நகரில் இரண்டு பஸ் நிலையங்களில் நேற்றுமுன்தினம் இரவு அடுத்தடுத்து வெடிகுண்டுகள் வெடித்துள்ளன. அந்தத் தாக்குதல் சம்பவங்களில் 40 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர் என்றும், பலர் காயம் அடைந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று கமரூனின் மரூவா நகரில் அடுத்தடுத்து நடந்த இரண்டு தற்கொலைப்படைத் தாக்குதல் சம்பவங்களில் 11 பேர் உயிரிழந்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

நைஜீரியாவில் ஒரு குறிப்பிட்ட அரசை உருவாக்க வலியுறுத்தி போகோஹராம் தீவிரவாதிகள் தொடர்ந்து நாசவேலைகளில் ஈடுபட்டு வருகிறார்கள். நைஜீரியாவின் ஜனாதிபதியாக முகம்மது புஹாரி பொறுப்பேற்ற பின்னர் அவர்கள் தங்கள் தாக்குதல்களைத் தீவிரப்படுத்தியுள்ளனர். முன்னைய தாக்குதல்கள் அனைத்துக்கும் போகோஹராம் தீவிர வாதிகள் பொறுப்புஏற்றுஇருந்தனர். எனவே, இந்தத் தாக்குதல்களையும் அவர்கள் தான் நடத்தியிருக்கலாம் எனக் கூறப்படுகிறது.

போகோ ஹராம் அமைப்புச் சார்பில் அண்மையில் ஒரு வீடியோக் காட்சி வெளியிடப்பட்டது. அதில் தாங்கள் தோற்கடிக்கப்படவில்லை என்றும், எதிர்பார்க்காத சமயத்தில் முன்பைவிட வலிமையுடன் வருவதாகவும் மிரட்டல் விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

சுற்றுலாப் படகு கவிழ்ந்து எகிப்தில் 19 பேர் சாவு!

கெய்ரோ,ஜூலை 24

எகிப்து நாட்டில் உள்ள நைல் நதியில் 30 பேருடன் சென்ற சுற்றுலாப் படகு கவிழ்ந்து 19 பேர் உயிரிழந் துள்ளனர். மேலும் 7 பேர் படு காயம் அடைந்துள்ளனர்.

காணாமற்போனவர்களை மீட்புக் குழுவினர் தேடி வருகின்றனர். இது தொடர்பாகப் படகின் உரிமையாளர் கைது செய்யப்பட்டுள்ளார். இந்தக் கோர விபத்து நைல் நதியில் உள்ள கிசா பகுதியில் நடைபெற்றுள்ளது. 25 பேர் படகு கொண்ட மீட்புக் குழுவினர் காணாமற்போனவர்களைத் தேடும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

படகில் சுற்றுலா சென்றவர்களில் பலரின் நிலைமை என்னவென்று தெரியாமல் உறவினர்கள் தவித்து வருகின்றனர். நைல் நதியில் ஏற்பட்டுள்ள இந்தச் சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (ஐ)

இருந்து எழும்பினால் இலவச பயணச் சிட்டை

மெக்ஸிக்கோ அரசு அசத்தல் திட்டம்

மெக்ஸிக்கோ,ஜூலை 24

மெக்ஸிக்கோ மக்களுக்கு இடையே அதிகரித்து வரும் அதிக உடல் பருமன் பிரச்சினையைக் கட்டுப்படுத்த வித்தியாசமான புதிய முயற்சி ஒன்றை அந்த நாட்டின் அரசு மேற் கொண்டுள்ளது. சுரங்கங்களில் பயணிக்கும் மெட்ரோ ரயில் பய ணிகளுக்கு இலவச பயணச்சிட்டைகளை அந்த நாட்டு அரசு வழங்கு கிறது. ஆனால் அதற்கு ஒரு கட்டுப்பாடும் விதித்துள்ளது.

மெட்ரோ ரயில் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ள ஒரு இயந்திரத் தின் மீது ஏறி நின்று கைகளை நீட்டியபடி 10 முறைகள் அமர்ந்து, எழ வேண்டும் என்பதே அந்த விதி.

இவ்வாறு 10 முறை செய்தால் பயணச்சிட்டையை அந்த இயந்திரம் இலவசமாக வழங்குகிறது. அதிகரிக்கும் உடல் பருமன், நோயாக மாறும் என்பதை மக்களுக்கு நினை வூட்டும் வகையிலும், ஆரோக்கியமான உணவும், உடற்பயிற்சியும் அவசியம் என்பதை வலியுறுத்தும் வகையிலும், இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பை மக்கள் வரவேற்றுள் ளனர்.

இந்தத் திட்டம் அந்த நாட்டில் உள்ள மக்கள் அதிகம் கூடும் 21 ரயில் நிலையங்களில் பயன்பாட்டுக்கு வந்துள்ளது.

அந்த நாட்டின் தேசிய சுகாதார ஆய்வின்படி 60 சதவீத மான இளைஞர்கள் உடல்பருமனால் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

தெற்கு சூடானில் மனித உரிமை மீறல்கள்

ஆபிரிக்க நாடான தெற்குச் சூடானில் சல்வாக்கீர் என்பவர் ஜனாதிபதியாகவுள்ளார். இவர் முன்னாள் துணை ஜனாதிபதி ரீக் மக்கேர் இராணுவப் புரட்சி நடத்தி ஆட்சியைப் பிடிக்க முயற்சிப்பதாக குற்றஞ் சாட்டினார். அதன் காரணமாக தெற்கு சூடானில் ஜனாதிபதி ஆதரவாளர்களும், ரீக் மக்கேர் ஆதரவாளர்களும் மோதலில் ஈடுபட்டனர். ரீக் மக்கேர் ஆதரவாளர்களை ஒடுக்க ஜனாதிபதி சல்வாக்கீர் இராணுவத்தை ஏவிவிட்டார். இராணுவத்துக்கும், எதிர்ப்பாளர்களுக்கும் இடைய தொடர்ந்து சண்டை நடந்து வருகிறது. 13 மாதங்களாக அங்கு உள்நாட்டு போர் நடந்து வருகின்றது. எதிர்ப்பாளர்கள் மீது இராணுவம் கொடூரத் தாக்குதல்களை நடத்தி வருவதாகத் தற்போது தகவல்கள் வெளியாகியுள்ளன. மனித உரிமை அமைப்பு ஒன்று தெற்குச் சூடானில் இது சம்பந்தமாக ஆய்வு ஒன்றை நடத்தியுள்ளது. அதன்மூலம் இந்தத் தகவல்கள் தெரியவந்துள்ளன. இராணுவத்தினர் பெண்களைக் கற்பழித்து அவர்களை உயிரோடு எரித்துக் கொன்ற சம்பவங்களும் பல இடங்களில் நடந்துள்ளன. எதிர்ப்பாளர்கள் மீது யுத்த டாங்கியை ஏற்றிப் பலரை கொன்றுள் ளனர். ஏராளமான பெண்கள் குழந்தைகளையும் அவர்கள் கொன்றதாகத் தெரியவந்துள்ளது. (ஐ)

இன மோதல்கள் லிபியாவில் வெடிப்பு

இதுவரை 40 பேர் சாவு

பெங்காசி, ஜூலை 24

லிபியாவின் தெற்குப் பகுதியில் இரண்டு இனக்குழுக்களுக்கு இடையே நடந்த மோதல்களில் இதுவரை 40 பேருக்கு மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

சகாராப் பாலைவனப் பகுதியில் அமைந்துள்ள பெரிய நகரமான சாபாவில் டொபொயு மற்றும் துவாரெக் இன மக்களிடையே கடுமையான மோதல்கள் இடம்பெற்று வருகின்றன. அதனால் நூற்றுக் கணக்கான குடும்பங்கள் தங்கள் வசிப்பிடத்தை விட்டு அகதிகளாகச் செல்ல வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

கடந்த பெப்ரவரி மாதம் முதல், இந்த இரண்டு இனக்குழுக்களுக்கும் இடையே மோதல்கள் இடம் பெற்று வருகின்றன. கடந்த ஒரு வாரத்தில் மட்டும் இடம்பெற்ற மோதல்களில் 40 க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதாக அரச வட்டாரங்கள் தகவல் தெரிவித்துள்ளன. மேலும், அந்த மாகாண அரசு மோதலை நிறுத்திவிட்டு பேச்சு மூலம் பிரச்சினைக்குத் தீர்வுகாணும்படி கோரிக்கை விடுத்துள்ளது.

(ஐ)

ஈராக்கில் வெடிகுண்டுத் தாக்குதல்

பாக்தாத், ஜூலை 24

ஈராக்கில் தீவிரவாதிகள் நடத்திய கார்க் குண்டுத் தாக்குதல்களில் 20 பேர் உயிரிழந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தலைநகர் பாக்தாதிலுள்ள, ஷியா பிரிவினர் பெரும்பான்மையாக வசிக்கும் பகுதியில் நடத்தப்பட்ட கார்க் குண்டுத் தாக்குதலில் 20 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் 43 பேர் காயமடைந்துள்ளனர்.

அதே போன்று பாக்தாத்துக்கு தென் பகுதியில் அமைந்துள்ள ஜாபரனியா நகரில் நிகழ்த்தப்பட்ட மற்றொரு கார்க் குண்டுத் தாக்குதலில் 48 பேர் காயமடைந்தனர்.

இந்தத் தாக்குதல்களுக்கு இதுவரை எவரும் பொறுப்பேற்காத நிலையில், தாக்குதல்களுக்கு ஐ.எஸ். பயங்கரவாதிகளே காரணமாக இருக்கலாம் எனக் கூறப்படுகிறது.

(ஐ)

துருக்கியில் டுவிட்டருக்கு தற்காலிகத் தடை

இஸ்தான்புல், ஜூலை 24

துருக்கி நாட்டின் தென்கிழக்கு எல்லைப் பகுதியில் உள்ள நகரம் சுரக். இது சிரிய நாட்டின் எல்லைப் பகுதியில் அமைந்துள்ள குர்தீஸ் மக்கள் அதிகம் வசிக்கும் நகரமாகும். இந்த நகரில் கடந்த வாரம் மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள பகுதியில் திடீரென குண்டொன்று வெடித்தது. அந்தச் சம்பவ இடத்திலேயே 32 பேர் கொல்லப்பட்டனர். 100 இற்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர். ஐ.எஸ். தீவிரவாதிகள் இந்தக் குண்டு வெடிப்பை நிகழ்த்தியமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில் குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டவர்கள் மற்றும் படுகாயம் அடைந்தவர்களின் படங்கள் சமூக வலைதளமான டுவிட்டரில் வேகமாகப் பரவ ஆரம்பித்தன. அந்தப் படங்களைப் பார்த்த அந்த நாட்டின் மக்கள் ஐ.எஸ். தீவிரவாதிகள் மீது நடவடிக்கை எடுக்கும்படி போராட்டத்தில் ஈடுபட ஆரம்பித்தனர். பெரிய அளவிலான போராட்டங்களுக்கும் அழைப்பு விடுத்தனர்.

அதனால் கலக்கம் அடைந்துள்ள துருக்கி அரசு, டுவிட்டர் தளத்தைத் தற்காலிகமாகத் தடை செய்துள்ளது.

(ஐ)

அடிப்படை வசதிகளற்று கிறீஸ் தீவுகளில் அகதிகள்



ஏதென்ஸ்,ஜூலை 24

கிறீஸ் நாட்டின் தீவுகளில் அடிப்படை வசதிகள் கூட இன்றி ஆயிரக்கணக்கான அகதிகள் தவித்து வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

உள்நாட்டுப் போர் காரணமாக சிரியா, ஈராக், ஆப்கானிஸ்தான் உள்ளிட்ட நாடுகளில் இருந்து 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் அகதிகளாக கிறீஸ் நாட்டின் லெஸ்பொஸ் தீவில் தஞ்சமடைந்துள்ளனர்.

எனினும் அவர்கள் அடிப்படை வசதிகளின்றித் தவித்து வருவதாகக் கூறப்படுகிறது. கழிவறைகள் சுத்தமின்றி இருப்பதாகவும், இடமில்லாததால் மக்கள் வீதிகளிலேயே கூடாரம் அமைத்துத் தங்க வைக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், அகதிகள் முகாமில் புதிதாகப் பிறந்த குழந்தைகள் பால் கூட கிடைக்காமல் தவிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே அவர்களுக்கு தகுந்த ஏற்பாடுகள் செய்துதர ஐரோப்பிய ஒன்றியம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பல தரப்பினரும் கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

(ஐ)

சீன இணையத்தில் விந்தணு விற்பனை

பீஜிங், ஜூலை 24

சீனாவில் ஆயிரக்கணக்கான ஆண்கள்தங்களதுவிந்தணுக்களை இணைய மூலமாக விற்பனை செய்வதில் தீவிரமாகவுள்ளனர். அதனால் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு அங்கு இணைய விந்தணு விற்பனை அதிகரித்துள்ளது.

அலிபாபா நிறுவனத்துக்குச் சொந்தமான ஒரு இணையத்தளம், தாய்ப்பாலில் செய்யப்பட்ட சவர்க்காரம் உட்பட, சமூகத்தால் விலக்கப்பட்ட பல வித்தியாசமான பொருள்களை விற்பனை செய்து வருகிறது. இந்த இணையத்தளம் அண்மையில் புதிய முயற்சியாக, ஆண்களின் விந்தணுவைக் கோரி தனது வலைத்தளத்தில் விளம்பரம் செய்தது.

அந்த விளம்பரம் வெளியான 72 மணி நேரத்திலேயே 22 ஆயிரத்து 17 பேர் தங்களது பெயர், அடையாள அட்டை போன்ற விவரங்கள் உட்பட முழு விவரங்களையும் வழங்கி, விந்தணு தானத்துக்கு தன்னார்வலர்களாக பதிவு செய்துள்ளனர். அதில் 69 சதவீதத்தினர் பீஜிங், ஷாங்காய், குவாங்சு ஆகிய மாகாணங்களைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

குடும்பங்களை வெளிநாட்டவர் அழைக்கப் புதிய கட்டுப்பாடு

சிங்கப்பூர் அரசு போடுகிறது

சிங்கப்பூர், ஜூலை 24

சிங்கப்பூரில் உள்ள முன்னணி நிறுவனங்களில் வெளிநாட்டைச் சேர்ந்த பலர் பணியாற்றி வருகின்றனர். அவ்வாறு பணிபுரியும் நபர்கள் தங்கள் குடும்பத்தினரை சிங்கப்பூருக்கு அழைத்து வருவதற்கான சம்பள வரம்பை உயர்த்த அரசு முடிவு செய்துள்ளது.

அதன்படி, இனி குறைந்தபட்சம் 5000 சிங்கப்பூர் டொலர்கள் சம்பாதிப்பவர்கள் மட்டுமே குடும்பத் துணை மற்றும் குழந்தைகளை நீண்ட கால நுழைவிசைவில் வர வழைக்க முடியும். அதற்கு முன் இந்த வரம்பு 4 ஆயிரம் சிங்கப்பூர் டொலராக இருந்தது. இதேபோன்று பெற்றோர்களை நீண்ட கால நுழைவு விசைவில் வரவழைக்க விரும்புவோருக்கான சம்பள வரம்பு 8 ஆயிரம் சிங்கப்பூர் டொலரில் இருந்து 10 ஆயிரம் டொலராக உயர்த்தப்படுகிறது. இந்த நடைமுறை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் முதல் நடைமுறைப்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நடவடிக்கையானது, குறைந்த சம்பளம் வாங்கும் சாதாரண பணியாளர்கள் மத்தியில் கடும் அதிர்ச்சியையும், வேதனையையும் ஏற்படுத்தியுள்ளது.

(ஐ)

18 மாதங்களில் ஒபாமாவின் பதவிக்காலம் முடிவடைகிறது



நியூயோர்க், ஜூலை 24

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவின் பதவிக் காலம் முடிவடைவதற்கு இன்னும் 18 மாதங்களே உள்ளன. அந்த நாட்டின் சட்டப்படி ஒருவர் இரண்டு முறைக்கு மேல் ஜனாதிபதியாக இருக்க முடியாது என்பதால் அவர் மீண்டும் தேர்தலில் போட்டியிட முடியாது.

இந்த நிலையில் இன்னும் மீதமிருக்கும் 18 மாதங்களில் இந்தியா மற்றும் சீனா ஆகிய இரு நாடுகளையும் பருவ நிலை மாற்றம் தொடர்பான அமெரிக்காவின் பரிந்துரைகளை ஏற்கச் செய்வது தான் தமது முக்கிய நோக்கம் என்று ஒபாமா தெரிவித்துள்ளார்.

(ஐ)

அமெரிக்காவின் டெக்சாஸ் மாநிலத்தில் உள்ள வாலர் கவுண்டி சிறைச்சாலையில் கறுப்பினப் பெண் ஒருவர் மர்மமான முறையில் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவத்தைக் கண்டித்து பலர் போராட்டங்களில் ஈடுபட்டுள்ளனர்.

தவறாளர்களைச் சீர்திருத்தும் பணியில் சமுதாய சீர்திருத்தக் காரியாலயம்

எம்.ஏ.முகம்மது அனஸ்
சிரேஷ்ட சமுதாய சீர்திருத்த உத்தியோகத்தர்-வடமாகாணம்
நீதிவான் நீதிமன்றம், மன்னார்

மன்னார் நீதிமன்றத்தில் கடந்த நான்கு வருடமாக இயங்கிவரும் சமுதாயம் சார் சீர்திருத்தக் காரியாலயம் 2014ஆம் ஆண்டு 40 தவறாளர்களைச் சீர்திருத்தத்துக்கென நீதிமன்றத்திடம் பெற்று அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டது.

சமுதாய சீர்திருத்தக் காரியாலயம் வடமாகாணத்தில் முதன்முதலாக மன்னார் நீதிமன்றத்திலேயே ஆரம்பிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. இன்றுவரை பல தவறாளர்களை சீர்திருத்துவதற்காக சிறந்த முறையில் நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. அதிகமானவர்கள் சிறு குற்றத்துக்காக நீதிமன்றத்துக்கு மீண்டும் மீண்டும் வருவதை தவிர்த்துக் கொண்டுள்ளனர் என்பதை இத்தால் குறிப்பிட முடியும்.

நீதிமன்றமானது தண்டனை கொடுக்கும் இடம் மட்டுமே எனப் பொதுமக்கள் நினைக்கின்றனர். எனினும் கருணை மனிதாபிமானம், சந்தர்ப்ப சூழ்நிலை, சீர்திருத்தம் என்பவற்றையும் கருத்தில் கொண்டு நீதிமன்றம் தனது நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது.

இதன் அடிப்படையிலேயே ஒருவர் செய்த குற்றத்துக்கான தண்டனை வழங்கப்படுகின்றது. எனினும் தண்டனையை சமுதாய சீர்திருத்தத் திணைக்களம் ஒரு சேவையாகப் பெற்று அதனுடன் சேர்த்து சீர்திருத்தத்துக் குரிய வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

ஒருவன் ஒரு குற்றத்தைச் செய்யும் போது அக்குற்றத்துக்கு சமூகமும், சூழலும், நண்பர்களுமே காரணமாகும். எனவே அந்த மனிதனுக்கு அவனுடைய நிலை பற்றி தெளிவாக எடுத்துக்கூறும் இடமாக சமுதாயச் சீர்திருத்தக் காரியாலயங்கள் அமைகின்றன. எனவே ஒருவர் செய்த சிறு குற்றத்துக்காக அவரைச் சிறைக்கு அனுப்புவதை விட சமூகத்தினுள் வைத்து சீர்திருத்துவது எமது கடமையாகும்.

உதாரணத்துக்காக மது அருந்து பவனை சமுதாய சேவைக்கென நீதிமன்றினால் பெற்றுக் கொண்டாலும் ஒரே முறையில் அவனைச் சீர்திருத்த முடியாது. மாறாக கட்டம் கட்டமாக அவனிடம் மதுவினுடைய தன்மை, அது ஏற்படுத்தும் விபரீதம், பண விரையம், குடும்பத்தில் ஏற்படும் பிரச்சினை, உளவியல் ரீதியாக மனைவியும் பிள்ளைகளும் பாதிக்கப்படுதல், பிள்ளைகளினுடைய எதிர்காலக் கல்வி நடவடிக்கைகள், ஆகிய வற்றை விளங்கப் படுத்தும் விதமாக காரியாலயம் அமைவதுடன் மதுப் பாவனையை ஒரேயடியாக நிற்பாட்டாமல் சிறிது சிறிதாகக் குறைப்பதற்கான நடவடிக்கைக்கு சமுதாய சீர்திருத்த உத்தி யோகத்தரால் முறையாக வழிகாட்ட முடியும் என்பதை குறிப்பிட முடி யும்.

> **நீதிமன்றமானது தண்டனை கொடுக்கும் இடம் மட்டுமே என பொதுமக்கள் நினைக்கின்றனர். எனினும் கருணை மனிதாபிமானம், சந்தர்ப்ப சூழ் நிலை, சீர்திருத் தம் என்பவற்றை யும் கருத்தில் கொண்டு தனது நடவடிக்கையை மேற்கொள் கின்றது.**

பொதுவாக குற்றவாளிகள் தண்டப்பணம் செலுத்த முடியாமல் சிறைக்குச் செல்வதால் சிறைச் சாலையில் அதிக இடநெருக்கடி ஏற்படுவதோடு பராமரிப்புச் செலவாக நாளொன்றுக்கு 450 ரூபா நபர் ஒருவருக்காகச் செலவிடப் படுகின்றது.

இதனால் ஒருபுறம் நாட்டுக்குக் கிடைக்கின்ற வருமானம் இல்லாமற் போகின்றது. மறுபுறம் நாட்டின் வருமானம் சிறைச்சாலைப் பராமரிப்புக்குப் பெருமளவு செலவாகின்றது.

மறுபுறம் அனேக குடும்பங்களில் வருமானத்தை ஈட்டுபவர்கள் சிறு குற்றங்களுக்காகச் சிறைக்குச் செல்வதால் குடும்பத்தில் பொருளாதாரப் பிரச்சினை ஏற்படுவதோடு, பிள்ளை களுக்கு பெற்றோர்களின் வழி காட்டல்களும் கிடைப்பதில்லை. மேலும், பாடசாலைகளில் பிள்ளைகளுக்குதவறானபெயரும் சூட்டப்படுகின்றது. சில குடும்பங்கள் தவறான வழிகளில் பொருளாதாரத்தை ஈட்டுவதற்கு முயற்சி செய்கின்றனர்.

1999ஆம் ஆண்டு 46ஆம் இலக்க சமுதாய சேவைகள் சீர்திருத்தச் சட்டத்துக்கு அமைய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுகின்றன. இரண்டு வருடங்களுக்கு மேற்பட்டதும், கட்டாய சிறை இவை இரண்டும் தவிரவுள்ள ஏனைய அனைத்துத் தண்டனைகளுக்காகவும் நீதிவான்நீதிமன்றத்தினால்வழங்கப்படும் சிறுகுற்றம் தொடர்பான தண்டனைக்கு சட்டத்தரணி ஊடாகவும், அல்லது சுயமாகவும் சமுதாய சேவையைப் பெற்றுக்கொள்ள முடியும். எனவே சமுதாய சீர்திருத்த கட்டளைச் சட்டத்தை சமுதாய சேவை, மேற்பார்வை, தொழிற் பயிற்சி, சிகிச்சை என்ற அடிப்படையில் தவறாளர்களுக்குத் தேவையான நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் வேலைத்திட்டங்களை சமுதாய சீர்திருத்தக் காரியாலயம் மேற் கொள்கின்றது.

இதனைவிட சமுதாய சீர்திருத்தத் திணைக்களத்தினால் பிரதேச செயலகங்களுக்கு ஓர் அபிவிருத்தி உத்தியோகத்தர் என்ற அடிப்படையில் நியமனம் வழங்கப்பட்டுள்ளது. இந்த உத்தியோகத்தர்கள் சமுதாயச் சீர்திருத்தக் காரியாலயங்களில் கிடைக்கின்ற தவறாளர்கள், சிறைச்சாலையிலிருந்து விடுதலையாகி வருகின்ற கைதிகள் என்பவர்களைப் பொருளாதார ரீதியாகவும், ஆன்மீக ரீதியாகவும் முன்னேற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுப்பதுடன் கைதிகள், தவறாளர்கள் மற்றும் அவர்களுடைய குடும்பத்தினர் மீண்டும் குற்றம் செய்யாத முறையில் அவர்களுக்குத் தேவையான உதவி நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். மேலும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், விடுதலையான கைதிகள், நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்ட தவறாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களின் பிரச்சினைகளை பிரதேச செயலகங்களின் கவனத்துக்குக் கொண்டு வந்து பிரதேச செயலாளர்கள் மற் றும் ஏனைய உத்தியோகத்தர் களின் உதவியுடன் இவ்வாறான பிரிவினர்களை மீண்டும் குற்றம் செய்யாத முறையில் அவர்களது பிரச்சினைகளை இனங்கண்டு சமூகத்துடன் இணைத்து பொருளாதார, ஆன்மிக ரீதியாக உயர்ந்தநிலைக்குகொண்டுவருவதே அபிவிருத்தி உத்தியோகத்தரின் கடமைகளாகும்.

இவர்களிடம் உரிய நபர்கள் தங்களது தேவைகளை முன்வைக்க முடியும். இவற்றை பிரதேச செயலகங்களின் மூலம் நிவர்த்திக்க முடியும். மேலும் வடமாகாணத்திலே உள்ள சகல பிரதேச செயலகங்களிலும் இவ்வாறான உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருப்பதை இங்கு விசேடமாகக் குறிப்பிட முடியும்.

தற்போது 20 ரூபாவுக்கு மஹாபொல லொட்டோ

ஒவ்வொரு இலங்கையரையும் உள்வாங்கும் வகையில், அதிர்ஷ்டலாப லொத்தர் சீட்டு விற்பனையில் முன்னோடியாக திகழும் மஹாபொல லொட்டோ அண்மையில் தனது எம் லொட்டோ டிக்கட்டுக்கான புதிய விலையை நிர்ணயித்திருந்தது. தற்போது ரூ. 20.00 க்கு மட்டுமே விற்பனை செய்யப்படும் எம் லொட்டோ டிக்கட்டுக்களை, தற்போது இலங்கையில் கஷ்டப்பட்டு உழைக்கும் பலரால் இலகுவில் கொள்வனவு செய்து கொள்ளக் கூடியதாக இருக்கும்.

முக்கியமாக, லொத்தர் சீட்டுக்கள் விற்பனையில் புத்தாக்கங்களை படைத்து வரும் மஹாபொல லொட்டோ, புதிய வாடிக்கையாளர்கள் பலரை உள்வாங்கும் வகையில், 'உங்கள் இலக்கங்களை நீங்களே தெரிவு செய்யுங்கள்' எனும் லொட்டோவின் கொள் கைக் கமைய, பல வாய்ப்புகளை வழங்கியுள் ளது. நான்கு இலக்கங்களையும் பொருந்தச் செய்வதன் மூலமாக மாபெரும் இறுதிப் பரிசை வாடிக்கையாளர்கள் வெல்ல முடியும்.

மேலும், இந்தப் புதிய குறைந்த விலையிலமைந்த எம் லொட்டோ டிக்கட், மூன்று இலக்கங்கள் பொருந்தும் சந்தர்ப்பத்தில் 2000 ரூபா பெறுமதியான பரிசை பெற்றுக் கொடுக்கும் வகையில் அமைந்துள்ளது. இரு இலக்கங்களுக்கு 200 ரூபாவும், ஒற்றை இலக்கத்துக்கு 20 ரூபாவும் வெல்லக்கூடிய வாய்ப்பை வழங்குகிறது.

வாடிக்கையாளர்களின் பெருமளவான வரவேற்புக் காரணமாக, மஹாபொல லொட்டோ, 20 ரூபாய்க்கு புதிய எம் லொட்டோ லொத்தர் சீட்டை அறிமுகம் செய்யும் தீர்மானத்தை மேற்கொண்டிருந்தது. மேலும், 'உங்கள் இலக்கங்களை நீங்களே தெரிவு செய்யுங்கள்' ஆர்வலர்களுக்கு மாபெரும் இறுதிப் பரிசை வெல்வதற்கு மேலும் வாய்ப்புகளைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் அமைந்துள்ளது என நிறுவனம் அறிவித்துள்ளது.

டிக்கட் விற்பனையாளர்கள் மற்றும் கொள்வனவாளர்கள் ஆகியோரின் கோரிக்கைக்கு செவிமடுக்கும் வகையில் மஹாபொல லொட்டோ, இலங்கையின் லொட்டோ கலாசாரத்தில் புதிய புரட்சியை ஏற்படுத்தியுள்ளது. இது வாடிக்கையாளர் மற்றும் தொழில்நுட்பம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டமைந்துள்ளது.

(த)

கழிவுகளைப் போடுவது நியாயமா?

சிவலிங்கப் புளியடியில் இருந்து ஓட்டுமடம் சந்திக்குச் செல்லும் வீதியில் சில வீட்டு உரிமையாளர்கள் கழிவுகள் நிறைந்த பைகளை வீசிவிட்டுச் செல்வதால் அருகில் வசிப்பவர்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

அதிகாலை வேளையில் பெரிய பொலித்தீன் பைகள், சொப்பிங் பைகள் என்பவற்றில் கழிவுப் பொருள்களைப் போட்டு அவற்றைப் பெரிய உரப் பைகளில் கட்டி இந்த வீதியில் உள்ள ஏனையவர்களின் வீடுகளுக்கு முன்பாகப் போட்டுவிட்டுச் செல்கின்றனர். காலை வேளையில் கண்விழித்ததும் இந்தப் பைகள் தான் கண்களில் தென்படுகின்றன.

இந்தச் செயலைச் செய்பவர்களும் மேற்படி வீதியில்தான் வசிக்கின்றனர். ஆனால் மனச்சாட்சியே இல்லாமல் நடந்து கொள்கின்றனர். இவர்கள் தமது வீடுகளில் சேருகின்ற கழிவுகளைத் தமது வீட்டு வளவின் ஒரு பகுதியில் வைத்து எரித்து விடலாம். அல்லது புதைத்து விடலாம். ஆனால் அப்படிச் செய்யாமல் ஏனையவர்களுக்குத் துன்பம் இழைப்பதையே தமது வாடிக்கையாகக் கொண்டுள்ளனர். வீதியில் வைக்கப்படும் இந்தக் கழிவுகள் நிறைந்த பைகளை மாநகர சபை ஊழியர்கள் சேகரித்து எடுத்துச் செல்வதில்லை. அவர்கள் வரும்போது இது தொடர்பாகக் கேட்டால் தம்மால் எதுவுமே செய்ய முடியாதெனக் கூறுகின்றனர். இந்த நிலையில் இந்தக் கழிவுகள் வைக்கப்படுகின்ற இடத்துக்கு அருகிலுள்ள வீடுகளின் உரிமையாளர்களே அவற்றை எரிக்கவோ அல்லது அப்புறப்படுத்தவோ வேண்டியுள்ளது. இது இவர்களுக்குத் தினமும் தலைவலி தருகின்ற ஒரு விடயமாகத் தற்போது மாறிவிட்டது. இதேவேளை மேற்படி வீதி ஏற்கனவே மோசமாகச் சேதமடைந்த நிலையில் காணப்படுவதுடன் அங்கே அமைந்துள்ள கழிவு வாய்க்காலும் சீர்கெட்ட நிலையில் இருந்து சுகாதாரச் சீர்கேடுகளுக்கும் வழி வகுத்துக் கொடுக்கின்றது. இது தொடர்பாக இங்கு வாழ்கின்ற மக்கள் பல தடவைகள் முறைப்பாடு தெரிவித்த போதிலும் யாழ்.மாநகரசபையினர் அதனைக் கண்டு கொண்டதாகத் தெரியவில்லை. எனவே மனிதாபிமான அடிப்படையில் இந்தப் பிரச்சினைகளுக்கு உரிய அதிகாரிகள் தீர்வு காண வேண்டும் என்பதே இந்தப் பகுதி மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

நா.ஸ்ரீகிருஷ்ணா

படம் காட்டிய திரையரங்கு

வாசகர் திருமுகம்



எனது நண்பனைப் போன்று பாதிக்கப்பட்ட பலரின் உள வேதனையை மையமாகக் கொண்டு இந்த விடயத்தைப் பகிர்ந்து கொள்கிறேன். எனது நண்பன் வேலை வாய்ப்பு விடயமாக மேற்படி திரையரங்குக்கும் அதற்கு அண்மையிலுள்ள கிளை அலுவலகத்துக்கும் ஐந்து வருடங்களாக அலைந்து வேலை வாய்ப்பு விடயமாகக் கதைத்திருந்தான். அவர்களும் வேலை தருவதாக ஒவ்வொரு விதமாக பதிலளித்துக்கொண்டிருந்தார்கள். கடைசிவரை எந்தவொரு வேலையையும் பெற்றுத்தரவில்லை. அவர்கள் தங்கள் கூட்டங்கள், தேர்தல் பரப்புரைகள், கட்சித் தேவைகள் போன்றவற்றுக்கு அழைத்தார்களே தவிர வேலை வாய்ப்புக்காக அழைக்கவில்லை. அவர்கள் தங்களுடைய கட்சிக் கூட்டங்களின் போது மக்களுக்கு அதிகளவு வேலைவாய்ப்பு வழங்கியதாகக் கூறுவார்கள். ஆனால் அவர்கள் தங்களுடைய உறவினர்களுக்கும் பெண் வர்க்கத்தினருக்குமே அதிகளவாக வழங்கியிருந்தார்களே தவிர ஆண்வர்க்கத்தினருக்கு மிகக் குறைவாகவே வழங்கியிருந்தார்கள். வேலை வாய்ப்பு விடயமாக சந்திக்கச் செல்லும் ஆண்களிடம் ஒரு சில நிமிடங்கள் பேசுவார்கள். அதேநேரம் பெண்களிடம் அதிகநேரம் கதைப்பார்கள். தேர்தல் காலங்களில் வாக்குறுதிகளை அள்ளி வழங்குவதும், தமிழர்களுக்கு ஆதரவாக இருக்கும் அவர்களுக்கு எதிரான கட்சியைத் தாழ்த்தியும் குறை கூறிப் பேசுவதையுமே அவர்கள் குறிக்கோளாகக் கொண்டிருந்தார்கள். அவர்கள் தமிழர்களுக்கு நன்மை செய்ய இணக்க அரசியல் எனும் கொள்கையைப் பின்பற்றுவதாகக் கூறுவார்கள். ஆனால் அவர்கள் பின்பற்றுவது ஏமாற்று அரசியலாகவே காணப்பட்டது.

எனது நண்பனின் வாழ்வானது இன்று திக்குத் தெரியாத திசையில் நிற்கும் ஒரு பிராணியைப் போல் காணப்படுகிறது. இவர்களின் ஏமாற்று வார்த்தையை நம்பியதால் இன்று இவனுடைய குடும்பத்தில் பல பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றான். இந்த விடயமானது எனது நண்பனை போன்று பாதிக்கப்பட்ட பலரின் உள்ளக்குமுறல்களாகும். தயவு செய்து இதனைப் பிரசுரிப்பதன் மூலம் ஏமாற்றப்பட்ட பலரின் உள்ளக்குமுறல்கள் ஓரளவேனும் தணிய வாய்ப்பாக இருக்கும் என எண்ணுகின்றேன்.

– ந.சகாயம்

கேலிச் சித்திரம்

நன்றி: மவ்பிம

மறக்க முடியாத கறுப்பு ஜூலை

இலங்கையின் வரலாற்றில் கறுப்பு ஜூலை எனப்படும் ஜூலைக் கலவரம் இடம்பெற்று இன்றுடன் 32 ஆண்டுகளாகின்றன. 1983 ஜூலை 23 தொடக்கம் இரண்டு வாரங்கள் வரை திட்டமிட்ட முறையில் தமிழர்கள் மீது மிகவும் மோசமான முறையில் தாக்குதல்கள் கட்டவிழ்த்து விடப்பட்டன. சுமார் மூவாயிரம் பேர்வரை கொலைசெய்யப்பட்டனர். அவர்களது சொத்துகள் அழிக்கப்பட்டன. வீடுகளை இழந்து இரவோடிரவாக ஆயிரக்கணக்கானோர் அகதிகளாகினர். தமிழீழ விடுதலைப் புலிகள் 13 இலங்கைச் சிப்பாய்களை யாழ்ப்பாணம், திருநெல்வேலியில் படுகொலை செய்ததன் தூண்டுதலின் விளைவு என்று இது குறித்துத் தெரிவிக்கப்பட்ட போதிலும், தமிழர்கள் மீதான தாக்குதல் தொடர்பான ஒருங்கிணைப்பு முறையை நோக்கும்போது அது ஒரு திட்டமிட்ட செயற்பாடாகவே நம்பப்படுகிறது. அப்பொழுது ஆட்சியில் இருந்த ஜே.ஆர். அரசின் ஆசியுடன் நிகழ்ந்தேறிய அரச பயங்கரவாதம் இது.

இதில் உள்ள துயரம் என்னவென்றால், அன்று மூட்டப்பட்ட தீ இன்னும் எரிவதுதான். தமிழர்களின் துயரம் தொடர்கிறது. இனப்பிரச்சினை தீரவில்லை. தமிழ் மக்கள் இன்னமும் அகதிகளாகவே வாழ்க்கையைத் தொடருகிறார்கள். உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் (இந்தியா) அகதிமுகாம்கள் தொடருகின்றன. சாத்வீகப் போராட்டம், ஆயுதப் போராட்டம், அரசியல் போராட்டம் எனப் பல்வேறு போராட்டங்கள் நடத்தப்பட்டபோதிலும் தமிழினப் பிரச்சினை தீரவில்லை. ஓகஸ்ட் 17 பொதுத் தேர்தலின் பின் பாவது ஏதாவது விடிவு கிடைக்குமா என்ற ஏக்கத்துடன் இன்று தமிழ் மக்கள் உள்ளனர்.

தமிழ் மக்களின் வரலாற்றுப் பக்கங்களிலே அழிக்க முடியாத ரணங்கள் மிகுந்த கணங்களை அடுக்கிக் கொண்டே போகலாம். இன்றுநேற்றல்ல, இலங்கை சுதந்திரமடைந்த காலம் தொட்டு சிறுபான்மை யினமான தமிழர்கள் அடக்கி ஒடுக்கப் பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதன் உச்சமே 2009 இறுதிக்கட்ட போரில் நடந்தேறிய இன அழிப்புச் சம்பவங்கள் எனப் பல்வேறு தரப்புகளாலும் கூறப்பட்டு வருகிறது. இறுதிக்கட்டப் போரின்போது 40 ஆயிரம் தமிழர்கள் கொலைசெய்யப்பட்டனர் என்று ஐ.நா. அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனாலும் இவ்வாறு காலத்துக்குக் காலம் திட்டமிட்டு நிகழ்ந்தேறிய பல சம்பவங்களில் தமிழர்கள் மட்டுமல்ல சிங்களவர்களும் மறக்க நினைத்தாலும் மறையாமல் அடி மனதில் கறையாகப் படிந்த சம்பவம்தான் 1983 ஜூலை மாதம் நடந்தேறிய இனக்கலவரம்.

ஜூலைக் கலவரம் நடந்தேறி பல வருடங்கள் உருண்டோடினாலும் இது தமிழ் மக்களின் மனங்களில் ஆழமாகப் பதிந்துவிட்டது. ஜூலை என்றதுமே தமிழரின் மனங்களில் 83 இன் கறைபடிந்த கறுப்பு ஜூலையே நினைவுக்கு வருகிறது. கொழும்பு நகரே இந்தக் கலவரத்தால் மோசமாகப் பாதிக்கப்பட்டது. கொழும்பு நகரின் அனைத்துத் தெருக்களிலும் இயங்கிய தமிழ் வர்த்தகர்களின் வியாபார நிலையங்கள், தமிழர்களின் வீடுகள் மற்றும் வாழ்விடங்கள், வாகனங்கள் என்பன அடித்து நொறுக்கப்பட்டு தீக்கிரையாக்கப்பட்டன. வீதியில் சென்றோர், வீடுகளில் இருந்தோர், வயோதிபர், பெண்கள், சிறுவர்கள், நடுத்தர வயதினர் எனப் பாகுபாடின்றி அனைவரும் தாக்கப்பட்டனர். நன்கு திட்டமிட்டு நடத்தப்பட்டன இந்தத் தாக்குதல்கள். தலைநகரில் இனக்கலவரம் இடம்பெற்ற அதே சமகாலப் பகுதியில் வெலிக்கடைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த குட்டிமணி, தங்கத்துரை உட்பட்ட 53 பேர் வரையான தமிழ் அரசியல் கைதிகள் கொடூரமான முறையில் கொல்லப்பட்டனர். கொலை செய்தவர்களில் ஒருவராவது கைதுசெய்யப்படவில்லை.

இலங்கையில் இனங்கள் அனைத்தும் ஒற்றுமையாக வாழவேண்டும் என்ற எண்ணம் ஆட்சி யாளர்களுக்கு இருக்குமானால் தமிழ் மக்களை அவர்களின் சொந்த நிலங்களில் சுதந்திரமாக வாழவிட வேண்டும். இல்லையேல் தமிழர்கள் மட்டுமல்ல சிங்களவர்களும் மறக்க நினைக்கின்ற கறை படிந்த கறுப்பு ஜூலை மீண்டும் மீண்டும் நினைவுகளில் தவழ்ந்து கொண்டுதான் இருக்கப் போகிறது.

பத்தி எழுத்து

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

விவசாயிகளை ஊக்குவித்தாலே பொருளாதாரத் தன்னிறைவு

எமது நாட்டில் பயிரிடக்கூடிய உணவுப் பொருள்களை வெளிநாடுகளில் இருந்து தரு விக்கும் நிலையை நிறுத்த வேண்டும். அதற் குப் பதிலாக அவற்றை முழு அளவில் இங்கே உற்பத்தி செய்து, நாட்டைத் தன்னிறை வுள்ள பொருளாதாரத்தை எய்தும் இலக்காகக் கொண்டு செயலாற்ற வேண் டும்--

எம்மைவிட்டு அரிதாகிச் செல்லும் எங்க ளுக்கே உரித்தான, உணவுக் கலாசாரத்தை, நாட்டில் மீண்டும் பிரபல்யப்படுத்த வேண்டும். உள்ளூர் உணவு உற்பத்திச் செயற்பாட்டுக்கு நாட்டை மீளக் கொண்டு செல்வது மிக அவ சியம். இதனை மூன்று ஆண்டுகளுக்கான கருத் திட்டமாக செயற்படுத்தலாம்--

வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய் யப்படும் உணவுப் பொருள்களுக்காக, ஆண் டொன்றுக்கு 154 பில்லியன் ரூபா செலவிடப் படுகிறது. வெளிநாடுகளில் இருந்து தருவிக்கப் படும் முப்பத்தெட்டு உணவுப் பொருள்களில், அப்பிள், பருப்பு, கடலை, ... உட்பட நான்கு பொருள்களை விட ஏனையவற்றை எங்கள் நாட்டிலேயே உற்பத்தி செய்ய இயலும் --

எமது விவசாயிகள் முகம் கொடுத்து வரும், சிக்கல்களை இனம் கண்டு அவற்றுக்குத் தீர்வு வழங்க வேண்டும். அத்தோடு அவர்களுக்கு, தமது உற்பத்திச் செயற்பாடுகளை ஊக்கத்துடன் மேற்கொள்ள அனைத்து வசதிகளையும் குறை யின்றி நல்க வேண்டும். அதற்கான நடவடிக்கை களை மேற்கொள்வதற்கு அரசு தயாராக உள்ளது--

மண்வளத்தைச் சிறந்த முறையில் புயன் படுத்தி, உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கான, நடைமுறைச் சாத்தியமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அரசு உதவும்--

எமது மக்கள், காலங்காலமாக விவசாயக் கலா சாரத்துடன் வாழ்கிறார்கள். அவர்களின் அத் துறைசார் அறிவை அடையாளம் கண்டு, தற்கால விஞ்ஞான அடிப்படைகளை இனங்கண்டு செய லாற்றி, அவர்களுக்கு உதவ வேண்டும்.--

ஜனாதிபதி அலுவலகத்தில் உள்ளூர் உணவு உற்பத்தி நிகழ்ச்சித்திட்டம் தொடர்பில், கடந்த செவ்வாய்க்கிழமை (20.07.2015 இல்) இடம் பெற்ற கலந்துரையாடலில், ஜனாதிபதி வெளியிட்ட கருத்துக்களின் சாராம்சமே மேற்கண்டவை.

இலங்கை ஒரு விவசாய நாடு. அத்தோடு விவ சாயம் சார்ந்த கலாசாரத்தையும் தன்னகத்தே கொண்டது.

ஆயினும் வேற்று நாடுகளின் பிடியில் இருந்த காலத்தில் இருந்து, உணவு உற்பத்தி உட்பட்ட சுய தேவைகளைப் பூர்த்தி செய்யாத, அபிவிருத்தி குன் றிய தேசமாகவே வறுமைப்பட்டுக் கிடக்கிறது.

அன்னியர் ஆட்சி யுகத்தின் பின்னரும், உணவு உற்பத்தியில் தன்னிறைவு காணாது, கடந்த அறு பத்தேழு ஆண்டுகளாக இந்த நாடு தள்ளாடுகிறது.

அரசியல் தலைவர்களோ, அபிவிருத்திகள் மூலம் நாட்டையும், மக்கள் நலன்களையும் மேலு யர்த்தப் போவதாக வேடம் போட்டு வாக்குகளை வாங்குவதும் --

கடந்த 67 ஆண்டுகளாக, ஆட்சிக் கட்டிலில் மாறி மாறி ஏறிய போதிலும் தத்தமது சொந்த நலன்களையும் அரசியல் அதிகாரத்தனத்தையும் கைகளில் எடுத்து, மக்களை மறந்து தரிகிணதோம் போடுவதுமே--

இந்த நாட்டு மக்களுக்குப் பெரும் பீடையா கப் புதைந்து கிடக்கிறது.

தேசத்தின் சகல இன மக்களையும் அரவ ணைத்து, உரிமைகளைப் பிசிறின்றி வழங்கி எல் லாத் துறைகளிலும் சமநிலையுடன் ஒன்றி ணைத்துச் செயற்படும் நல்ல மனம்--

தென்னிலங்கை அரசியல் தலைவர்களிடம் முகிழ்த்துப் பூத்தால் மட்டுமே, எதிர்காலத் திலாவது இந்த நாடு பொருளாதாரத் தன்னி றைவு குறித்துக் கனவேனும் காண இயலும்... !

வாய்ச் சொல்லில் வீரரடி என்ற பாரதியின் வார்த் தைக்கு உதாரணமாக, வெறும் வாய்ச் சவால் களால் ஆகாயத்தில் கோட்டை கட்டும் அரசியல் வாதிகளே இங்குள்ளோர். ஜனாதிபதி மைத்திரி யின் மேற்போந்த கருத்து நிலைப் பாட்டை மனதிருத்திச் செயற்பட, முன்வந்தால் மட்டுமே இந்த நாட்டில் விவசாயப் புரட்சியைத் தோற்று விக்கலாம். அது இயலாத காரியமும் அல்லவே.

உரிமைக்கு வலுச் சேர்த்த கறுப்பு ஜூலை

மு.தமிழ்மணி

1958 ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா சுதந் திரக்கட்சி ஆண்டபோது எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா ஆட்சியில் இனக்கலவரம் முதன் முதலில் இடம்பெற்றது. ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியின்போது 1977இல் இரண்டாவது இனக்கல வரம் ஜே.ஆர். ஜெயவர்த்தனா பிர தமராக இருந்தபோது நடந்தேறி யது. ஜே.ஆர். ஜெயவர்த்தனா நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியான பின்னர் ஆறு வரு டங்களின் பின்னர் மூன்றாவது இனக்கலவரம் கொடூரமான முறை யில் இடம்பெற்றது.

1983 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 24ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவுப் பொழுதினில் இனவாதிக ளால் தமிழர்களுக்கு எதிரான கலவரத்தை எப்படி ஆரம்பிப்பது என்ற முடிவு எடுக்கப்பட்ட நிலை யில் அரசினால், படையினரின் நல் லாசிகளோடும் பூரண ஆதரவோ டும் தமிழர்கள் மீதான பலமுனைத் தாக்குதல் தொடுக்கப்பட்டன.

1983 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 24 ஆம் திகதி தொடங்கிய இனக் கலவரமானது ஏதோ ஏதேச்சை யாக நடந்ததல்ல. அது திட்டமிடப் பட்டு நடத்தப்பட்ட இனக்கலவரம் ஆகும்.

தமிழ் மக்களின் அரசியல் உரிமை களைச் சிதைப்பது, தமிழர்களின் இருப்பை நெருக்கடிக்குள்ளாக்கு வது, தமிழர்களை ஏதிலிகளாக்கு வது இவ்வாறான நோக்கிலேயே தமிழர்களுக்கு எதிரான இனக்கல வரம் அமைந்திருந்தது.

கறுப்பு ஜூலை 83 நடைபெற்று 32 ஆண்டுகளாகிவிட்டன. அன்றைய ஜூலை மாதம் நடந்த கொடூரங் களை தமிழர்கள் இன்றும்கூட மறந்துவிட வில்லை. 300 ஆண்டு கள் சென்றாலும் மறக்கவும் மாட் டார்கள்.

ஈழத்தமிழர்களின் வரலாற்றில் 1983 ஜூலை 23 ஆம் திகதி ஒரு திருப் பத்தை ஏற்படுத்திய நாள். 1983 ஜூலை 22 ஆம் திகதி வெள்ளிக் கிழமை இரவு 11. 45 மணியளவில் யாழ்ப்பாணத்தையே அதிர வைத்த குண்டு வெடிப்புச் சத்தம் யாழ்ப் பாணத்தை ஒரு கணம் குலுங்க வைத்தது. குண்டு வெடிப்பு தொடர் பான செய்தி நாட்டையே உறைய வைத்தது.

யாழ். மாவட்டத்தில் படையினரின் கெடுபிடிகள் அதிகமாக இருந்த கால கட்டம் அது. படையினர் மீது அவ்வப் போது தாக்குதல்கள் நடத்தப்பட் டாலும் திருநெல்வேலியில் அன் றைய தினம் இரவு 11. 45 மணியள வில் பலாலியிலிருந்து யாழ். நோக்கி வந்த படையினரின் ட்ரக் வண்டி மீது இலக்கு வைத்து நடத்தப்பட்ட குண்டு வெடிப்பில் 13 படையினர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர். இருவர் தப்பினர்.

தப்பிய படையினரில் ஒருவர் தலை மையில் படையினர் வந்து வீடு வீடாகப் புகுந்து துப்பாக்கிப் பிர யோகம் மேற்கொண்டபோது கந் தர்மடம், நல்லூர் உட்பட்ட பகுதி களைச் சேர்ந்த 50 மக்கள் வரை யில் கொல்லப்பட்டனர்.

குண்டு வெடிப்பில் கொல்லப்பட்ட 13 படையினரின் சடலங்கள் கொழும்பு பொரளை கனத்தை மயானத்தில் அடக்கம் செய்யப்பட்டு ஒரு சில மணி நேரத்தில் அரச போக்கு வரத் துக்குச் சொந்தமான பஸ் வண்டி கள், வான்கள், போன்றவற்றில் அழைத்து வரப்பட்ட பெரும்பா லான குற்றவாளிகள் அவர்கள் வந்த வாகனங்களில் கத்திகள், பொல் லுகள், வாள்கள் என்பவற்றோடு எரிபொருள்களும் கொண்டு வந் திருந்தனர். அப்போதைய ஜனா திபதி ஜெயவர்த் தனாவின் அமைச் சரவையில் இருந்தவர்களின் சில ரது அடியாள்களே இவர்கள் என் பது குறிப்பிடத்தக்கது.

கனத்தையில் இறுதிக் கிரியைகள் முடிவடைவதற்குள் பொரளைப் பகுதியிலுள்ள வர்த்தக நிறுவனங் களை இனவாதிகள் எரித்தனர். அதனைத் தொடர்ந்து தமிழர்களது வீடுகள் யாவும் எரிக்கப்பட்டன. எங்கு பார்த்தாலும் தீச்சுவாலை யையும், கரும்புகையையுமே காணக்கூடியதாக இருந்தது. தமி ழர்கள் உயிரைக் கையில் பிடித்த படி எங்கு ஓடித்தப்புவது என்று தெரியாமல் ஓடிக்கொண்டிருந்த னர். வெறி பிடித்த இன வெறியர் கள் தென்பகுதியிலுள்ள தமிழர் கள் மீது தாக்குதல்களை ஆரம் பித்திருந்தனர்.

தமிழர்களுக்கு எதிரான இனவன் முறைகள் 1958, 1977 இலும் நடந்திருந்தாலும் 1983 ஜூலை இனவன்முறையானது கொடூரமா கவும் இரத்தத்தை உறைய வைப் பதாகவும் அமைந்திருந்தது. இரத்தம் ஆறாக ஓடியது. தமிழர்களை வீதிக்கு வீதி, வீட்டுக்கு வீடு பட்டியலிட்டுத் தேடிச்சென்ற சிங்கள இனவாதி கள் தொடர்ந்து வெட்டிச் சாய்த்தனர். கனத்தையில் பூரணை தினமான ஞாயிற்றுக்கிழமை தொடங்கிய இனக்கலவரம் அன்றிரவு கட்டுப் பாட்டுக்குள் வந்துவிடும் என நம் பிய கொழும்பு மாவட்டத் தமிழர் களுக்கு அந்தநாள் திங்கட்கிழமை மேலும் அதிர்ச்சியடையக் கூடிய செய்தியே காத்திருந்தது. காடை யர்கள் பல நூற்றுக்கணக்கானோர் வெறி பிடித்தவர்கள் போன்று மிரு கங்களை வேட்டையாடுவதுபோல் தமிழர்களினது உயிர்களைப் பறித் துக் கொண்டிருந்தனர். குழந்தை கள், சிறுவர்கள், பெண்கள், வயோ திபர்கள், கர்ப்பிணிகள் என்ற வித் தியாசம் பாராது தமிழ் மக்களைத் துவம்சம் செய்துகொண்டிருந் தனர்.

ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமான இனக்கலவரம் தொடர்ந்து ஐந்து நாள்கள் வரை தொடர்ந்தது. ஞாயிற் றுக்கிழமை போயா தினமாகை யால் பௌத்த விகாரைகளில் சில் அனுஷ்டித்த சிங்களவர்கள் திங்கட் கிழமை படுகொலைகளில் ஈடுபட் டதைக் குறிப்பிட்ட சௌமிய மூர்த்தி தொண்டமான் சண்டே சில்! மண்டே கில்!' என வர்ணித்திருந்தார்.

ஜூலைக் கலவரத்தில் வெலிக் கடைச் சிறைச்சாலையில் இடம் பெற்ற படுகொலைச் சம்பவங்கள் மிகவும் மோசமானதாக இருந்தன. சிறைச்சாலைப் படுகொலை இரண்டு தடவைகள் நடைபெற்றன. ஜூலை 25 ஆம் திகதி 35 தமிழ் அரசியல் கைதிகள் இனவெறியர்களால் கோர மாகப் படுகொலை செய்யப்பட்டி ருந்தனர். ஏனைய சிறைக் கைதி கள் உயிருக்குப் பாதுகாப்பு இல் லாத நிலையில் இரண்டாவது தடவையாக ஜூலை 27 ஆம் திகதி மற்றுமொரு படுகொலைகளுக்கு ஆளாகினர். இந்தப் படுகொலை கள் யாவும் சிறைச்சாலை அதிகாரி களின் முழு ஒத்துழைப்புடனேயே

> **"கறுப்பு ஜூலையின் விளைவு தமிழ் இளைஞர்களிடையே பெரும் எழுச் சியை உண்டாக்கியது. அந்த எழுச் சியே ஆயுதப் போராட்டமாக மாறி யது. தமிழ் மக்களை மிரட்டிப் பணிய வைக்கும் ஒரு போரியல் உபாய மாகவே இன வன்முறை, அரசா லும் சிங்களத் தரப்பாலும் திட்டமி டப்பட்டாலும் இது சிங்களத் தரப் புக்கும் ஸ்ரீலங்கா அரசுக்கும் எதிர் பாராத அதிர்ச்சியைக் கொடுத் திருந்ததுடன் பெரும் சவாலையும் உருவாக்கியது.**

நடந்தேறின. தாக்குதல்களுக்குத் தேவையான ஆயுதங்கள் சிறைக் காவலர்களால் கொண்டுவரப்ப டன. தமிழ் அரசியல் கைதிகள் அடைக்கப்பட்டிருந்த தனியான பகுதிக்கான திறப்புகளும் சிறையதி காரிகளாலேயே வழங்கப்பட்டி ருந்தன. சிறை அதிகாரிகள் பார்த் துக்கொண்டிருக்கத்தக்கதாகவே சிங்களக் கைதிகளால் தமிழ் அரசி யல் கைதிகள் படுகொலை செய் யப்பட்டிருந்தனர்.

சிங்கள ஆட்சியாளர்களுக்கு எதி ராக ஈழப்போராட்டம் தொடங்கிய அந்த நாள்களில் போராட்டத்தை முடக்கவே இன வன்முறையை அப்போதைய ஐக்கிய தேசியக் கட்சி அரசு திட்டமிட்டு மேற்கொண் டது.

ஈழத்தமிழரிடையே இன்று கறுப்பு ஜூலையை நினைவு கூர்வது குறைந்து போய்விட்டது. ஏறத்தாழ ஓர் இலட்சம் மக்கள் கொல்லப் பட்ட முள்ளிவாய்க்கால் படுகொலை யைப் பார்த்த பின்பு சில ஆயிரம் தமிழ் மக்கள் கொல்லப்பட்ட கறுப்பு ஜூலைப் படுகொலைகள் அவர்க ளுக்கு சிறியதொரு சம்பவமாகத் தோன்றியிருக்கலாம். ஆனாலும் அந்த வரலாற்றை இன்றைய தலை முறைக்கு எடுத்துக் கூற வேண்டி யது அவசியமாகும்.

கறுப்பு ஜூலையின் விளைவு தமிழ் இளைஞர்களிடையே பெரும் எழுச் சியை உண்டாக்கியது. அந்த எழுச் சியே ஆயுதப் போராட்டமாக மாறி யது. தமிழ் மக்களை மிரட்டிப் பணிய வைக்கும் ஒரு போரியல் உபாய மாகவே இன வன்முறை, அரசா லும் சிங்களத் தரப்பாலும் திட்டமி டப்பட்டாலும் இது சிங்களத் தரப் புக்கும் ஸ்ரீலங்கா அரசுக்கும் எதிர் பாராத அதிர்ச்சியைக் கொடுத் திருந்ததுடன் பெரும் சவாலையும் உருவாக்கியது. தமிழர்கள் உலக மெங்கும் பரந்து சென்று தங்களுக்கு இழைக்கப்படுகின்ற அநீதியை சொல்வதற்கான வாய்ப்பையும் 1983 கறுப்பு ஜூலை உருவாக்கியது. 83 கறுப்பு ஜூலை இன வன்முறை தமிழர்களைப் பலப்படுத்தியது. தமிழர் பிரச்சினையும் உலகுக்கு தெரியவந்தது. அதைத்தொடர்ந்து 32 ஆண்டுகள் சென்றாலும் கறுப்பு ஜூலை இன வன்முறைப் படுகொலை கள் தமிழினஉரிமைக்கு தொடர்ந் தும் வலுச்சேர்த்தபடியிருக்கும்.

செ.உமாசுதன்

> "கடந்த ஜனாதிபதித் தேர்தல் மூலம் அந்தச் சந்தர்ப்பம் பயனுள்ளதாக மாற்றப் பட்டிருக்கிறது. முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா, ரணில் விக்கிரம சிங்க ஆகியோர் பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவை முன்னிறுத்தி அதில் வெற்றியும் கண்டனர். இந்த வெற்றி தமிழர்களுக்கு ஓரளவு பலம் தந்தாலும் நீடித்து மீட்சி தருமா என்பதும் கேள்விக்குறியே."

நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் வாய்ப்பான வரமா? சாபமா?



காற்றுள்ள போதே தூற்றிக்கொள் என்ற பழமொழி எம்மத்தியில் பேசப்பட்டு வருவது சகலரும் அறிந்ததே. சந்தர்ப்பங்களைச் சாதகமாக்கிக் கொள்ளுவதும், அதனைச் சரியானதொரு முடிவை நோக்கி பயணிக்கச் செய்வதும் எமது கைகளில் இருக்கின்றபோதிலும் அதில் ஏற்படுகின்ற தடைகளை வெட்டிக்கொடுப்பதற்கும். வெற்றி இலக்கைத் தட்டிக் கொடுப்பதற்கும் நிச்சயமாக ஓர் உறுதுணை இருத்தல் வேண்டும்.

அந்த வகையில் இலங்கையிலே இடம்பெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தல் சர்வதேச அரங்கிலும், மேற்குலக நாடுகளிலும் ஒரு பர பரப்பை ஏற்படுத்தியிருக்கிறது. ஏனெனில் இலங்கையில் உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டுவருவதில் மறைமுகப் பங்காளிகளாக இருந்த இவர்கள் 30வருடங்களாகத் தமது உரிமை தொடர்பில் பேசிவரு கின்ற, நியாயமான கோரிக்கைகளை முன்வைத்து வருகின்ற தமிழர் தரப்புக்கு நிரந்தர தீர்வை பெற்றுத் தருவதில் இருந்து விலகி நிற்க முடியாது.இந்தநிலையில் கடந்த ஜனவரி மாதம் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தல் தமிழர்கள் மத்தியில் ஒரு புத்தொளியைத் தந்தது. இனி வரும் நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வை வழங்கும் வாய்ப்பான வரமா....? அல்லது சாபமா.....? 2010ஆம் ஆண்டு நடந்த ஜனாதிபதித் தேர்தலில் மேற்குலக நாடுகள் மறைமுக பங்காளிகளாக இருந்து இலங்கையில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த முயற்சித்தன. ஆட்சி மாற்றம் மூலம் இனங்களிடையேயான உறவுகளில் சிறந்த மாற்றத்தை ஏற்படுத்த எத்தனித்தன.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் மூலம் அந்தச் சந்தர்ப்பம் பயனுள்ளதாக மாற்றப்பட்டிருக்கிறது. முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா, ரணில் விக்கிரம சிங்க ஆகியோர் பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவை முன்னிறுத்தி அதில் வெற்றியும் கண்டனர். இந்த வெற்றி தமிழர்களுக்கு ஓரளவு பலம் தந்தாலும் நீடித்து மீட்சி தருமா என்பதும் கேள்விக் குறியே.

இந்த வருடம் மார்ச் மாதம் ஜெனிவாவில் இடம்பெற்ற மனித உரிமைகள் தொடர்பான மாநாட்டில் இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் தொடர்பான விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கப்படவிருந்தது. ஆனால் புதிய அரசு மேற்கொண்ட கடும் பிரயத்தனங்கள் காரணமாக ஐ.நாவின் விசாரணை அறிக்கை ஒத்திவைக்கப்பட்டது.

இந்த விடயங்கள்தொடர்பில்மஹிந்த அரசு ஐ.நாவுடன் இணைந்து செயற்பட மறுத்ததும். மைத்திரி அரசு இணைந்து செயற்படத் தயாராக இருந்ததும் தெளிவாகத் தெரிந்தன. அதனடிப்படையில் இலங்கை அரசு மனித உரிமைகள் தொடர்பான விடயங்களில் பற்றுறுதியோடு இருக்கிறது என்பதை எடுத்துக் காட்டுவதற்கான சந்தர்ப்பமாக இந்த வாய்ப்பு வழங்கத் தீர்மானிக்கப்பட்டது.

ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் சயிட்அல்ஹுசைனின் பரிந்துரைக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட இந்தத் தீர்மானம் ஒரு தடவை மாத்திரம்தான் இடம்பெறுமெனவும், எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் இடம்பெறவுள்ள அமர்வில் இந்த அறிக்கை கட்டாயமாகச் சமர்ப்பிக்கப்படும் என்றும் அதில் மாற்றம் இல்லை என்றும் சொல்லப்படுகிறது. இதேவேளை – கடந்த அரசில் உள்ளூர் விசாரணைப் பொறிமுறைகள் தோல்வியடைந்த வரலாறுகள் இருந்ததை நாம் அறிந்திருக்கிறோம். தமிழ் பேசும் மக்களின் அரசியல் பொருளாதார மற்றும் சமூகப் பிரச்சினைகளுக்குப் பிரிக்கப்படாத இலங்கைக்குள் சகல இனத் தவரும் ஏற்கக் கூடிய அதிகாரப் பகிர்வு முறைமை ஒன்றை ஏற்படுத்துவதே தமது திட்டம் என அப்போதைய ஜக்கிய தேசிய முன்னணியின் தலைவராக இருந்த ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார்.

சர்வாதிகார ஆட்சிபுரியும் மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியை அகற்றி விட்டு மேலும் சரத்பொன் சேகாவை ஜனாதிபதியாக்க நாம் முயற்சிப் பது ஜனநாயகம், நீதி, கருத்துச் சுதந்திரம் என்பவற்றை நாட்டில் மீண்டும் நிலைநாட்டுவதற்கே. இதற் காகத் தான் எதிரும் புதிருமான ஜக்கிய தேசியக் கட்சியும் ஜே.வி.பி யும் இணைந்து செயற்படுகின்றன. மீண்டும் ஒரு தடவை தமது உரிமைகளுக்காக தமிழ் மக்கள் போராடுவதற்கு அவசியமற்ற வகையில் இனப்பிரச்சினைக்கான தீர்வு அமைந் திருக்கும் என்றும் அவரால் சொல்லப்பட்டது.

2010ஆம் ஆண்டு இடம்பெற்ற தேர்தல் இந்த விடயங்கள் தொடர்பான உறுதிப்பாட்டை நிரூபிப்பதற் குச் சந்தர்ப்பம் வழங்கவில்லை. மாறாக மீண்டும் சர்வாதிகார குடும்ப ஆட்சியே நிலைபெற்றது. தமிழர் பிரச்சினை தொடர்பான குரல்கள் நிசப்தமாகின.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது பதவிக் காலத்தை நீடிப்பதற்கு மீண்டும் ஓர் ஆணையை வழங்கக்கூடாது எனவும், எதிர்க் கட்சி வேட்பாளர்களை ஆதரிப் பதே சிறந்தது என்று கருதிய தமிழ் பிரதிநிதித்துவங்களின் நம்பிக்கையும் அந்தத் தேர்தலின்போது சறுக்கியது.

இருந்தபோதும் தற்போதைய மைத்திரி தலைமையிலான தேசிய அரசில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை அகற்றப்பட்டிருக்கின்ற ஆரம்ப நிலை தமிழர்களின் இயங்குநிலையை பாதிக்காது என்பது ஓர் ஆரம்ப சமிக்ஞையே.

'தமிழ் மக்களுக்கு கௌரவமான, நியாயமான, அரசியல் தீர்வு ஒன்று வழங்கப்படும், மேல்சபை ஒன்று உருவாக்கப்படும். அதில் மாகாண சபை உறுப்பினர்கள் அங்கம் வகிப்பர். தென்பகுதி மக்களுக்கு தங்கம் என்றால் வடபகுதி மக்களுக்கு அது தகரமாக இருக்கமுடியாது' என்றெல்லாம் மஹிந்த ராஜபக்ஷ 2010ஆம் ஆண்டுத் தேர்தலின் போது சொல்லிவந்தார். ஆனால் ஒன்றும் வழங்கப்பட்டதாகத் தெரிய வில்லை. மாறாகத் தேர்தல் வெற்றியின் பின்னர் சர்வதேச நாடுகளின் அழுத்தத்துக்கு அடிபணியாது பயங்கர வாதத்தை முடிவுக்கு கொண்டு வந்தேன், பல நாடுகள் விதித்த கடுமையான நிபந்தனைகளை நான் தூக்கி வீசினேன் என்று சொல்லி வந்தார். ஆகவே இந்த வரலாற்றுப் படிப்பினையை பாடமாகக் கொள்ள வேண்டும். வார்த்தை ஜாலங்களையும், உறுதிமொழிகளையும் நம்பாது தீர்வைப் பெற்றுக் கொள்ளுவது தொடர்பான செயல் நிலைப்பாடுகள் தொடர்பிலும் தந்திரோபாயகாய் நகர்த்தல் தொடர்பிலும் தமிழ் மக்களும், தமிழர் பிரதிநிதித்துவங்களும் சிந்தித்துச் செயலாற்ற வேண்டும். 2010ஆம் ஆண்டு ஐ.நா. குறிப்பாக மனித உரிமைகள் ஆணையாளரின் அலுவலகம் இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றம், சர்வதேச சட்டமீறல் குறித்த நம்பகத் தன்மைமிக்க, சுயாதீன, பக்கச்சார்பற்ற விசாரணை இடம் பெறவேண்டியதன் அவசியத்தை வெளிப்படுத்தியது. குற்றம் இழைத்தவர்கள் நீதியின் முன் நிறுத்தப்படுவதற்கும், அவர்கள் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பிக்கும் கலாசாரத்தை தவிர்ப்பதற்கும் இவ்வாறான விசாரணைகள் அவசியம் என்று உறுதியாகக் கூறி வந்தனர்.

அதேபோன்று அயர்லாந்தின் தலைநகர் டப்ளினில் இடம்பெற்ற நிரந்தர மக்கள் நீதிமன்றம் விசாரணையின் பின்னர் இனப்படுகொலை குற்றச்சாட்டுக்கள் குறித்த மேலதிக விசாரணை இடம்பெறுதல் தொடர்பிலும், சர்வதேச சமூகம் குறிப்பாக அமெரிக்காவும், பிரிட்டனும் சமதான நடவடிக்கை முறிவடைந்த மைக்கான பொறுப்பையும் ஏற்க வேண்டும் எனவும் சுட்டிக் காட்டியிருந்ததும் தெரிந்ததே.

கடந்த 30 வருடங்களுக்கு மேலாக இலங்கையில் ஆட்சியில் இருக்கின்ற எந்தப் பேரினவாத அரசுகளும் தமிழர் நலன் தொடர்பிலும் அவர்களின் உரிமை தொடர்பிலும் பேச்சளவில் கூட முக்கியத்துவம் கொடுப்பதாகத் தெரியவில்லை. மாறாக தமிழர் தொடர்பான தீர்மானங்கள், செயற்பாடுகள் பின்னோக்கிச் செல்ல நேர்ந்துள்ளது. இன மத விகிதாசார நலன்களைப் பாதிப்பதாக உள்ளன. அதைவிட போர் வெற்றியின் பின்னர் தேசிய பிரச்சினைக்கு ஏற்றுக் கொள்ளக் கூடிய அரசியல் தீர்வை காணுவதில் பின்னடைவு கண்டு வருகின்றன. சர்வதேச சமூகங்களின் இடித்துரைப்புக்கள் செவிடன் காதில் ஊதிய சங்கு போலத் தொடர்கின்றன.

தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வை முன்வைக்க இவர்கள் ஒருபோதும் ஒத்துழைக்கமாட்டார்கள். அதிகாரத்தைத் தமது கைகளில் பெற தங்களுடைய கொள்கைகளில் இருந்து அடிக்கடி மாறுகின்றனர்.

ஆகவே எதிர்வரும் நாடாளு மன்றத் தேர்தல் தமிழர்களுக்கு நல்ல தொரு பதிலைச் சொல்ல வேண்டும்.

மீண்டும் விரோதசக்தி, சகிப்புத் தன்மையின்மை, சமத்துவமின்மை, பொய், ஊழல், குடும்ப ஆதிக்கம், தவறான ஆட்சி என்பன தலை தூக்குமா அல்லது இவைகள் அற்ற ஒரு புதிய மாற்றத்தை நோக்கிச் செல்லும் மிகப்பெரிய வாய்ப்பை தமிழர்களுக்குத் தருமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

சுடோக்கு எண் விளையாட்டு

	6				2	3		
1					7	8		
	7	2	3				5	
5		9					8	
	4					5		1
	2				3	7	4	
		8	7					3
		7	5				6	

நேற்றைய சுடோக்கின் விடை

7	5	3	4	6	8	1	2	9
9	4	8	1	3	2	6	5	7
6	1	2	7	9	5	4	8	3
1	7	5	8	4	9	3	6	2
8	2	9	3	5	6	7	1	4
4	3	6	2	1	7	8	9	5
3	9	7	6	2	1	5	4	8
2	6	4	5	8	3	9	7	1
5	8	1	9	7	4	2	3	6

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக் கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட் வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்காரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டி யதே வேலை. சுடோக்கு என் பது ஜப் பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....

பிறருக்கு உதவுவது எமது கடமை

நாம் மற்றவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமை, பிறருக்கு உதவிபுரிவதும் உலகுக்கு நன்மை செய் வதும்தான்.

அன்பு, நேர்மை, பொறுமை ஆகியவற்றைத் தவிர வேறு எதுவும் எமக்குத் தேவையில்லை. வளர்ச்சி அடைவதும் அன்பு செலுத்துவதுமே வாழ்க்கை. அதுவே வாழ்க்கை நியதி.

மேலைநாட்டு விஞ்ஞானத்தோடு இணைந்த வேதாந் தமும், பிரம்மச்சரியமும், வாழ்க்கையின் அடிப்படை இலட்சியங்களாக எமக்குத் தேவைப்படுகின்றன.

கட்லுணவுகளின் நேற்றைய விலை நிலவரம்

	யாழ்ப் பாணம்	மன்னார்	கிளிநொச்சி	முத்தித் தீவு	சாவகச்சேரி	மாதகல்
இறால்	700	600	800	600	500	600
நண்டு	250	500	400	300	250	400
கணவாய்	550	600	700	600	700	600
பாரை	600	600	600	700	600	400
சுறா	650	600	600	800	–	550
சீலா	300	500	500	450	300	–
வினை	700	450	400	500	650	400
மூரல்	200	400	400	350	300	–
கும்பிளா	400	400	400	400	500	–
கிழாக்கன்	650	800	–	500	400	600
ஓரா	400	400	400	350	400	–
திரளி	250	250	220	120	200	300
நகரை	200	300	200	300	200	300
கூளை	150	200	200	100	200	100
ஒட்டி	250	300	250	200	–	300
திருக்கை	150	350	250	300	300	150
பாலை	400	300	350	400	300	400
வாழை	100	200	–	300	–	–
கொய்	100	150	60	120	80	–
மதனம்	150	250	220	250	–	–



மரக்கறிகளின் நேற்றைய விலை நிலவரம்

	மருதனார் மடம்	சாவகச்சேரி	கன்னாகம்	நெல்லியடி	திருநெல் வேலி	கிளிநொச்சி	மன்னார்	வவுனியா
முள்ளங்கி	40	60	50	70	60–80	80	30	30
கத்தரி	70	60	90	80	60–80	80	30	30–25
கரட்	140	140	140–300	120	160–180	300	200	180
மரவள்ளி	60	50	40	40	50	80	45	40
பயிற்றை	80	60	90	100	80	80	100	80–90
பாகல்	120	140	140	120	120	160	120	120
கருணைக்கிழங்கு	100	100	100	120	80	120	120	80–90
பெ.வெங்காயம்	100	100	80	80	100	100	80	90
சி.வெங்காயம்	120	120–180	140	160	140	160	100–110	120–130
பூசணி	30	30	40	30	20–30	60	15 –20	20–25
தக்காளி	100	130	120	120	100–120	160	90	90–100
வாழைக்காய்	70	50	50	50	40–60	40	60	30
கீரை	20	20	30	10	15–20	20	35	20
பொன்னாங்காணி	25	40	30	30	20	40	10	10
பச்சை மிளகாய்	350	250	300–350	280	360	400	500	250
புடோல்	60	40	40	40	60	60	80	50
கோவா	80	100	70	100	80	80	100	60
வெண்டி	60	50	40	60	120	120	120	50
போஞ்சி	120	180	200	220	100–180	300	200	180
லீக்ஸ்	80	130	160	200	100–120	100	120	100
தேங்காய்	50	35–40	80	40–50	50–60	40	35–45	35–40
உருளைக்கிழங்கு	80	90	80	80	80–100	90	120	90–100
தேசிக்காய்	80	70	80	40	60–70	50	100	60
வல்லாரை	20	20	10	10	30– 40	20	20	08–10
கறிமிளகாய்	160	160	120	160	200–260	200	220	180
இராசவள்ளி	120	100	–	140	80–100	–	160	80–90
முருங்கைக்காய்	150	120	120	120	120–140	140	200	120

நாளை

ஆடி–09

சனிக்கிழமை

25.07.2015

திதி: நவமி

மு.இ. 08.51 வரை

நட்சத்திரம்: சுவாதி

மு.ப.09.27 வரை

சுபநேரம்:

03.02-04.32வரை

இராகுகாலம்:

09.02-10.32 வரை

அமிர்தசித்தம்

ஆலய வழிபாடு அவசியம்

இறைவன்-உலகங்களையும், உயிரினங்களையும் படைத்துள்ளான். உயிரினங்கள் வாழ்வதற்கு நிலம், நீர் தீ, காற்று, ஆகாயம், ஆகிய பஞ்ச பூதங்களையும் ஆக்கியுள்ளான். பூமி யில் உயிரினங்கள் வாழ்ந்து வினைகளை ஒழித்து, திரும்பவும் தனது அடியில் சேர வேண்டுமென்று எண்ணுகின் றான். படைக்கப்பட்ட உயிரினங் களில் சிறந்த பிறவியை எடுத்த வன் மனிதன். அந்த மனிதன் ஆசை வலையில் அகப்பட்டுக் கலங்கிக் கொண்டிருக்கின்றான். மனிதன் ஆல யம் சென்று வழி பட்டுவர ஆசைகள் கலைந்து ஓடிவிடும். ஒரு கணம் மனம் ஒடுங்கி இறைவனை நினைக்க ஆசைகள் பறந்து ஓடிவிடும்; கவலையும் நீங்கி விடும். அரிதிலும் அரிய பிறவியை எடுத்த மனிதர் அனு தினம் ஆலயம் சென்று வழிபட்டு கவலை நீங்கி பெருவாழ்வு வாழ அவன் அருள் கிட்டும் என்பது திண் ணம்.

காலை உணவின் அவசியம்

சிலர் காலை உணவு பற்றி கவலைப்படுவதில்லை. காலை உணவே சாப்பிடும் வழக்கம் இல்லாதவர்களும் இருக்கிறார் கள். ஆனால் காலை உணவு கட்டாயம் சாப்பிட வேண்டும்.

1. காலையில் உடலில் உள்ள சர்க்கரையின் அளவு குறைவாக இருக்கும்.அப்போது உலுக்குவேண்டிய சக்தியைக்காலைஉணவே தருகிறது. காலை முதல் இரவு வரை நன்கு வேலை செய்ய உடலுக்கு சக்தி தேவைப்படுகிறது. அதற்கு காலை உணவு அவசியம்.

2. சிலர் நிறையைக் குறைக்க காலை உணவை மட்டும் தவிர்த்து மற்ற நேரங்களில் கொஞ்சம் உண்பார்கள். ஆனால் உண்மை யில் காலையில் உண்ணாமல் இருந்து நண்பகலில் குறை வாக உண்ண முடியாது. அப்போதும் வயிறு நிறையச் சாப்பிடுவார்கள். ஆனால் அது அவர் களுக்குத் தெரியாது. மேலும் அந்த மாதிரியான நேரங் களில் ஆரோக்கியமான உணவையும் பார்த்து உண்ண மாட்டார்கள். எனவே நிறை கூடுமே தவிர, குறையாது.

3. மேலும் காலை உணவை உண்ணாமல் இருந்தால் முத லில் உடலில் சுரக்கும் இன்சுலின் அளவு அதிகரித்து, பின்னர் கலோரியின் அளவு அதிகரிக்கும்.

4. வேலைக்குச் செல்பவர்களும், பாடசாலைக்குச் செல்வோரும் காலை உணவை உண்ணாமல் சென்றால் அவர்களால் வேலையில், படிப்பில் கவனத்தைச் செலுத்த முடியாது. காலை உணவு அவர்களுக்கு ஒரு புத்துணர்ச் சியைத் தந்து கவனத்தை அதிகப்படுத்துகிறது.

5. காலை உணவை உண்டால் உடலில் இருக்கும் தேவை யில்லாத கலோரியானது விரைவில் கரைந்து விடும்.

6. வீட்டில் சிறுவர்கள் இருந்தால், அவர்கள் நீங்கள் நடந்து கொள்ளும் விதத்தையே பின்பற்றுவார்கள். நீங்கள் காலை யில் சாப்பிடாமல் இருந்தால் அவர்களும் அதில் கவனம் செலுத்த மாட்டார்கள். எனவே அவர்களின் ஆரோக்கியம் பாதிக்கப் படும். எனவே நீங்கள் முறை யாகக் காலை உணவை உண் பதன் மூலம் அவர்களுக்கு முன்மாதிரியாக இருங்கள்.

7. காலை உணவை உண்ணும் போது ஊட்டச்சத்து நிறைந்த உணவுகளான தானியங்கள், பழங்கள், பால் போன்ற வற்றை உண்டால் உடல் ஆரோக்கியமாக இருப்பதோடு, நிறை யும் கூடாமல் அளவோடு இருக்கும்.

8. வேலைக்குச் சென்று சிடுசிடுவென்று டென்ஷனாக இருக்கி றீர்களா? அதற்குக் காரணமும் காலை உணவைத் தவிர்த் தது தான். எனவே, காலை உணவைக் கைவிடாதீர்கள்!

திருமணப் பொருத்தங்கள்



ஒரு முறைத் திருமணமானது ஏறக் குறைய ஐம்பது நூற்றாண்டுகளுக்கு முன் பிருந்தே தொன்றுதொட்டு நிகழ்ந்து வந்ததால்தான், தொன்மையான "தொல் காப்பியம்" என்ற இலக்கியம், திரு மணப் பொருத்தங்கள் எப்படி அமைய வேண்டும் எனக் குறிப்பிட முடிந்திருக்கின்றது.

எனவே, திருமணம் செய்வதற்கு முன்ன தாகவே பொருத்தம் பார்க்கும் வழக்கம் தாகவும் தொன்மையானது என்பதும், மிகப்பல நூற்றாண்டுகளுக்கு முன் பிருந்தே இந்த வழக்கம் நிலை பெற்றிருந்த நல்லதொரு வழக்கம் என்பது தெளிவாகத் தெரிகிறது. இந்தத் திருமணப் பொருத் தங்கள் சமுதாயத்தின் நன்மையைக் கருதியும், இல்லறமாகிய நல்லறத்தைப் பேணிக் காக்கவேண்டிய தம்பதிகளின் நல்வாழ்வையும் கருத்தில் கொண்டும் தோந்தெடுக்கப் பெற்றுள்ளன.

நட்சத்திரப் பொருத்தம்:
இதனை தினப்பொருத்தம் என்று சொல்வார் கள். இந்தப் பொருத்தம் ஆண், பெண் இரு பாலாருடைய ஆயுளையும் ஆரோக்கியத் தையும் பற்றித் தெரிந்து கொள்ள உதவுகிறது.

கணப் பொருத்தம்:
இந்தப் பொருத்தம் சரியாக இருந்தால் தம்பதியினர் சுப பலன்களை அடைந்து சுகமாக வாழ்வார்கள். தம்பதி யின் வாழ்க்கையில் நிலை யான மகிழ்ச்சி ஏற்படுத்துவது இந்தப் பொருத்தமேயாகும்.

மகேந்திரப் பொருத்தம்:
இந்தப்பொருத்தம் இருந்தால் புத்திரவிருத்தி உண்டாகும். பிள்ளைச் செல்வங்களை உண் டாக்கி, அவர்கள் மேன்மை யாக வாழ்கின்ற யோகத்தை உண்டாக்குவதே, இந்த மகேந் திரப் பொருத்தமாகும்.

ஸ்திரீதீர்க்கப் பொருத்தம்:
இதன் மூலம் திருமகள் கடாட்சமும், சுபீட்சமும் நீடிக்கும். ஸ்திரீதீர்க்கப் பொருத்தமிருந்தால் சகலவிதமான செல்வங்களும் விருத்தியாகும்.

யோனிப் பொருத்தம்:
இது, ஆண் பெண் ஆகிய இருவருடைய உடல மைப்புகளும் ஒன்றுக் கொன்று பொருத்தமாக வும், உடல் உறவு கொள்வதற்கு ஏற்றவையாக வும் அமைவதற்கு ஆதாரமாகும்.

இராசிப் பொருத்தம்:
இந்த இராசிப் பொருத்தம் இருந்தால் தான் வம்சம் விருத்தியாகும்.

இராசியாதிபதிப் பொருத்தம்:
இராசியாதிபதிப் பொருத்தம் இருந்தால் தான் குடும்பம் சுபீட்சமாக வாழமுடியும். புத்திரர் கள் யோகமாக வாழ்வார்கள்.

வசியப் பொருத்தம்:
கணவன்,மனைவி இருவரும் ஒருவரை ஒருவர் சமமாக விரும்பி, அன்பின் பிணைப் பிலும் அணைப்பிலும் இணைந்து இரண்டறக் கலக்கும் தன்மையை அடைவதற்கு இந்த வசியப் பொருத்தம் சிறப்பாக அமைந்திருக்க வேண்டும்.

இரச்சுப் பொருத்தம்:
கணவனாக நிச்சயம் செய்பவரின் ஆயுள் நிலையை உறுதிப்படுத்துவதற்கு இந்தப் பொருத்தம் பார்ப்பது மிகவும் அவசியமான தாகும். ஏனென்றால், பெண்ணின் மாங்கல்ய பாக்கியத்தை இந்தப் பொருத்தத்தை ஆராய்ந்து பார்த்துத்தான் நிச்சயிக்க வேண்டியுள்ளது.

வேதைப் பொருத்தம்:
தம்பதியினரின் வாழ்க்கையில் ஏற்படக்கூடிய துன்பங்களையும் துக்கங்களையும் முன்ன தாகவே அறிந்து அவற்றை விலகச் செய்து, அவர்களை இன்பமாக வாழவைக்கும் சக்தி யுடையது இந்த வேதைப் பொருத்தமாகும்.

குடும்பத்துக்காக தன்னையே அர்ப்பணிக்கும் இல்லத்தரசிகள்

இந்த அவசர உலகில், தங்களுக்கான பொறுப்புக்களைச் சரிவர நிவர்த்தி செய்யும் அனைத்துப் பெண்களுமே சாதனையாளர்கள்தான். தற்போதைய காலகட்டத்தில் அனைத்துத் துறைகளிலும் பெண்களின் தாக்கம் அதிகரித்துள்ளது. மிகப்பெரிய நிறுவனங்களின் தலைமைப் பொறுப் புக்களில் பெண்கள் இடம்பெற்றிருப்பதும், பல நாடுகள் மற்றும் மாவட் டங்களில் தலைமைகளைப் பெண்கள் ஏற்றிருப்பதும் இதற்குச் சான்றுகள். அரசியல், சினிமா, கலை, விளையாட்டு என்று பெண்கள் தடம்பதிக்காத துறைகளே இல்லை. வீட்டை விட்டு வெளியே வந்து தங்களது திறமையை வெளிப்படுத்தும் பெண்கள் மட்டுமே சாதனையாளர்கள் அல்ல. ஒரு வீட்டில், குடும்பத் தலைவியாக இருந்து குடும்ப உறுப்பினர்களின் அச்சாணியாக செயற்படும் ஒவ்வொரு பெண்ணுமே சாதனையாளர் தான். சிலர் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள் என்ற கேள்விக்கு வீட்டில் சும்மா தான் இருக்கிறேன் என்று பதில் சொல்வார்கள். அது அவர்களைப் பற்றி அவர்களே குறைவான மதிப்பிட்டிருப்பதன் அடையாளம். ஆனால், வீட்டில் இருக்கும் பெண்களின் வேலைகள் சொல்லி மாளாதவை. எனவே, வீட்டில் இருப்போர்.. நிச்சயமாக பெருமையோடு இல்லத்தரசியாக உள்ளேன் என்று சொல்லுங்கள். அதன் கஷ்டம் என்ன என்பது அனைவரும் அறிந்திருக்கும் விடயம் தான். வீட்டை இல்லமாக மாற்றும் திறனும் ஒரு பெண்ணுக்கே உரித்தானது. இதற்கெல்லாம் விதி விலக்காக சில பெண் களும் குடும்பங்களில் இருக் கத்தான் செய்கிறார்கள். ஆனால், குடும்பத்துக்காக தங்களையே அர்ப்பணித்து வாழும் ஏராள மான பெண்கள் இருக்கும் வரை, இந்த உலகம் எனும் வண்டி எந்தச் சறுக்கலும் இல் லாமல் வேகமாக இயங்கிக் கொண்டுதான் இருக்கும்.

திருமண வாழ்வில் ஏற்படும் மாற்றங்கள்

திருமணம் என்பது ஒன்றும் அவ் வளவு பயத்தை ஏற்படுத்தக்கூடிய விடயம் இல்லை. வாழ்க்கையில் ஏற்படுத்தக் கூடிய ஒரு மாற்றம் மட்டுமே. கண்டிப்பாக தங்களது வாழ்க்கையில் ஒவ்வொருவரும் கடந்து வரும் பாதையே இது. உங்கள் திருமணம் காதல் திரும ணமோ அல்லது வீட்டில் பெரிய வர்களால் பார்த்து நிச்சயம் செய்யப் படும் திருமணமோ, வரப்போகும் மாற் றங்கள் உறுதியே.

திருமணம் பற்றிய கடுமையான உண்மை என்னவென்றால், மூன்று முடிச்சுகள் போட்ட பின்னர் உங்கள் வாழ்க்கையில் பெரிய மாற்றமே உண்டாகும். உங்கள் வாழ்க்கை எப்படி மாறப்போகிறது என்பது உங்கள் கையில் தான் உள்ளது.

திருமணம் பற்றிய சில கடுமையான உண்மைகளைப் பற்றியும் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

உங்கள் அருகில் உங்கள் வாழ்க்கைத் துணை வந்து விட்டால், உங்களது சில பழைய பழக்கவழக்கங்களை நீங்கள் புதிதாக வந்துள்ள வாழ்க் கைத் துணைக்காக கைவிடவே வேண்டும். உங்கள் வாழ்க்கைகளில் அந்த விசேட நபருக்காகச் சில தியாகங்களைச் செய்தாக வேண் டும் தானே? குடும்பம் பெரிதாகும் போது பொறுப்புகளும் அதிகரிக் கும். வீட்டு வேலைகளிலும், வெளிப் பொறுப்புகளிலும் கண்டிப்பாக நீங்கள் மாற்றத்தைக் காண்பீர்கள். இந்தப் பொறுப்புகளை நீங்கள் பகிர்ந்து கொள்ளும் நிலை ஏற்படும். அனைத்தையும் உங்கள் வாழ்க் கைத் துணையே செய்ய நீங்கள் எதிர்ப்பார்க்க முடியாது. நீங்களும் களத்தில் இறங்கி உங்கள் பங்களிப் பையும் அளிக்க வேண்டியிருக்கும். குடும்பம் பெரிதாகும் போது பொறுப்பு களும் அதிகரிக்கும். வீட்டு வேலை களிலும், வெளிப் பொறுப்புக்களி லும் கண்டிப்பாக நீங்கள் மாற்றத் தைக் காண்பீர்கள். அனைத்தையும் உங் கள் வாழ்க்கைத் துணையே செய்ய வேண்டுமென நீங்கள் எதிர்ப்பார்க்க முடியாது. திரு மணம் என்றாலே ஒரு அர்ப்பணிப்பு உறவுக்குள் அடியெடுத்து வைப்பது தானே. வாழ்க்கையில் நிலைத்தன் மையைப்பெற்றிட உங்களது பழைய கேளிக்கை நிறைந்த வாழ்க்கை யைக் கைவிட வேண்டி வரும். இது போக உங்கள் வாழ்க்கைத்துணையை ஏமாற்றவும் முடியாது. ஆரோக்கிய மான மற்றும் சந்தோஷமான வாழ்க் கையைத் தான் நீங்கள் எதிர்ப்பார்ப் பீர்கள்.

திருமணம் என்றாலே பகிர்தல் உணர் வையும் கொண்டதுதான். சில வற்றை நீங்கள் பகிர்வீர்கள், சில வற்றை உங்கள் வாழ்க்கைத்துணை பகிர்வார். இருவருமே ஒருவருக் கொருவர் வெளிப்படையாக இருக்க வேண்டும். அப்போதுதான் உங்கள் திருமணம் வெற்றியடையும். நீங் கள் வெளியில் சென்றிருக்கும் போது எங்கே இருக்கறீர்கள் என உங்கள் வாழ்க்கைத் துண்ண உங்களிடம் கேட்டால், உங்கள் விடயத்தில் அவர் மூக்கை நுழைக்கிறார் அல்லது தலை யிடுகிறார் எனக் கருதக்கூடாது. அது உங்கள் மீதுள்ள அக்கறையால் கேட்கப்படும் கேள்வி. உங்கள் மீது யாராவது அக்கறையுடன் இருக்கும் போது அவ்வாறான கேள்வி கேட் பது இயல்பே. எப்படி உங்கள் வாழ்க் கைத் துணை உங்களிடம் கேள்வி கேட்பாரோ, அதே போன்று நீங்கள் எங்கே செல்கிறீர்கள், எப்போது வருவீர்கள் என்ற விவரங்களை வீட்டில் தெரிவிக்க வேண்டியதும் உங்கள் பொறுப்பாகும். ஒரு வேளை நீங்கள் வீட்டுக்கு வரத் தாமதமா னால், அதனை உங்கள் வாழ்க்கைத் துணையிடம் தெரிவிக்க வேண்டும். வீட்டில் தெரிவிக்காமல் உங்கள் விருப்பத்துக்கு வருவதோ போவதோ நியாயமாக ஆகாது.

அம்மாவின் சொல் கேள்!

செழிப்பான ஒரு புல்வெளியில் ஆடுகள் மேய்ந்துகொண்டிருந்தன. அவற்றை மேய்ப்பவன். மரத்தடியில் உட்கார்ந்து கண்மூடி, புல்லாங்குழல் வாசித்துக் கொண்டிருந்தான். புல்வெளியைச் சுற்றி வேலி போடப்பட்டிருந்தது. அதன் அருகே, ஓர் ஆட்டுக்குட்டி மேய்ந்து கொண்டிருந்தது. வேலிக்கு வெளிப்பக்கம் இருந்த ஓநாய் ஒன்று ஆட்டுக் குட்டியைப் பார்த்தது. வேலிக்குள் முகத்தை நுழைத்துக் கொண்டு, ஓநாய் எதையோ பார்ப்பது போல பாசாங்கு செய்தது. அதைப் பார்த்த ஆட்டுக்குட்டி, "உனக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டது.

ஓநாயும் "நண்பா, நண்பா...இங்கே இளசான புல் கிடைக்குமா என்று பார்க்கிறேன். இளம் புல் என்றால் எனக்கு ரொம்பப் பிரியம். அதைத்தின்று, ஜில்லென்று தண்ணீர் குடித்தால் எவ்வளவு நன்றாக இருக்கும். உங்களுக்கெல்லாம் அந்த யோகம் கிடைத்திருக்கிறது! எனக்கு அது கிடைக்கவில்லை..." என்று வருத்தத்துடன் கூறியது. "அப்படியா! நீ புல்லா சாப்பிடுவாய்? நீ மாமிசத்தைத்தான் சாப்பிடுவாய் என்று எனது அம்மாவும் அப்பாவும் சொன்னார்களே? என்று ஆச்சரியத்துடன் கேட்டது ஆட்டுக் குட்டி. சே! சே! அதெல்லாம் சுத்தப் பொய்!" என்றது ஓநாய். "அப்படியென்றால் இரு. நான் வெளியே வந்து, மலையின் அந்தப் பக்கம் இளம்புல் இருக்குமிடத்தைக் காட்டுகிறேன். நாம் இரண்டு பேரும் போய், அதைச் சாப் பிட்டுவிட்டு, நண்பர்களாக ஜாலியாகச் சுற்றலாம்!" என்று சொல்லிவிட்டு ஆட்டுக் குட்டி வேலி இடுக்கின் வழியாக நுழைந்து, ஓநாயின் பக்கம் போனது.

உடனே ஓநாய் அதன்மீது பாய்ந்து அதைக் கொன்று தின்றது. அந்த ஆட்டுக் குட்டி அனுபவம் நிறைந்த தனது அம்மா, அப்பா பேச்சை கேட்டிருந்தால், மதிப்பு வாய்ந்த தனது உயிரை இழந்திருக்காது அல்லவா?



நுவரெலியா

இலங்கையின் 25 மாவட்டங்களில் நுவரெலியா மாவட்டமும் ஒன்றாகும். இந்த மாவட்டம் மத்திய மாகாணத்தில் அமைந்துள்ளது. வடக்கே மாத்தளை மாவட்டமும், கிழக்கே பதுளை மாவட்டமும், தெற்கே இரத்தினபுரி மாவட்டமும், மேற்கே கேகாலை மாவட்டமும் எல்லைகளாக அமைந்துள்ளன. நுவரெலியா நகரம் இந்த மாவட்டத்தின் தலைநகரமும் அதில் அமைந்துள்ள பெரிய நகரமுமாகும். இலங்கையில் உல்லாசப்பிரயாணத்துக்குப் பிரசித்தமான பகுதிகளில் ஒன்றாகும். கடல் மட்டத்திலிருந்து 1,500 அடி தொடக்கம் 8,000 வரை உயரத்தில் அமைந்துள்ள இந்த மாவட்டத்திலேயே இலங்கையின் உயரமான மலை யான பீதுருதாலகால மலையும் அமைந்துள்ளது. சிவ னொளிபாத மலை அமைந்துள்ள சமனல மலைத் தொடரின் பெரும்பகுதியும் நுவரெலியா மாவட்டத்திலேயே அமைந்துள்ளது. 19 ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேயர்கள் நுவரெலியாவைச் சிறிய இங்கிலாந்து என அழைத்தனர். அவர்களின் ஆட்சியின் போது நுவரெலியா உல்லாசப்பிரயாண, வர்த்தக மையமாக வளர்த்தெடுக்கப்பட்டது. துட்டகைமுனு தனது இளமைக் காலத்தில் கொத்மலையில் வசித்ததாக மகாவம்சம் குறிப்பிடுகிறது. சிங்கள மொழியில் நுவர என்பது நகரம் என்பதையும், எலிய என்பது வெட்ட வெளி அல்லது ஒளியைக் குறிக்கும். எனவே நுவரெலியா (நுவர- எலிய) என்பது ஒளிபொருந்திய நகரம் என்னும் பொருளை உடையது. தமிழில் இந்த நகரம் நூரலை எனவும் அழைக்கப்படுவதாகும்.

எதையும் எதிர்பார்க்காதே

ஒரு முறை துறவி ஒருவர், தனது சீடர்களிடம் பேசிக் கொண்டிருந்தார். அப்போது அவரது சீடர்கள் துறவியிடம், கதை கூறுமாறு கேட்டனர். அதற்கு அந்தத் துறவியும், அவர்களுக்கு ஒரு வாழ்க்கைப் பாடம் புகட்டும் வகையில் கதை சொல்ல ஆரம்பித்தார். "ஒரு வியாபாரி ஒருவன் வீதியில் நடந்து கொண்டு சென் றான். அப்போது அந்த வியாபாரி க்கு எதிரே வந்தவன், அவனை நிறுத்தி, என்னை ஞாபகம் உள்ளதா? என்று கேட்டான். பின்னர் உங் களுக்கு என்னை நினைவு இருக்கிறதா? ஐந்து வருடங்களுக்கு முன்பு நான் இந்த நகரத்துக்கு வந்தபோது, நான் என்னிடம் பணம் இல்லை என்று உங்களிடம் பணம் கேட்டேன். அதற்கு நீங்களும் என்னிடம் கொஞ்சம் பணத்தைக் கொடுத்து, ஒருவன் வெற்றிப் பாதையில் செல்ல இது உதவட்டும் என்று வாழ்த்திக் கொடுத்து உதவி புரிந்தீர்கள் என்று அவருக்கு ஞாபகப்படுத்தினான். அந்த வியாபாரியும் யோசித்து விட்டு, பின்னர் ஆம்! நினைவுக்கு வந்து விட்டது என்று சொல்லி, வேறு என்ன சொல் லுங்கள் என்று ஆவலுடன் கேட்டான். அதற்கு அவன் இல்லை எப்படி அப்போது எனக்கு பணம் கொடுத்து உதவி புரிந்தீர்களோ? அதே போன்று இப்போதும் ஒரு சந்தர்ப்பம் கொடுக்கமுடியுமா? என்று கேட்டான். அப்படி அவன் கேட்டதும் அந்த வியாபாரி வியந்து போனான். இந்தக் கதையை சொல்லி முடித்த துறவி, பின்னர் தனது சீடர்களிடம், ஒருவர் தமக்கு ஒரு முறை எதிர்பாராமல் உதவி செய்தால், மீண்டும் மீண்டும் அவர்களிடம் எதையும் எதிர் பார்க்கக்கூடாது. நமக்கு எந்த நேரத்தில் எது கிடைக்க வேண்டுமோ, அந்த நேரத்தில்அது நமக்கு கிடைக்க வேண்டும் என்று இருந்தால், நிச்சயம் அது நமக்கு கிடைக்கும் என்று கூறினார்.

விடுகதைகள்

1.எத்தனை தரம் சுற்றினாலும் தலை சுற்றாது, அது என்ன?
–மின்விசிறி

2.வீட்டிலிருப்பான் காவலாளி, வெளியில் சுற்றுவான் அவன் கூட்டாளி, அவர்கள் யார்?
–பூட்டும் திறப்பும்

3.காய்க்கும் பூக்கும் கலகலக்கும் காகம் இருக்கக் கொப்பில்லை.
–நெல்

4.கத்தி போல் இலை இருக்கும், கவ்ரிமான் பூ பூக்கும், தின்னப் பழம் கொடுக்கும், தின்னாத காய் கொடுக்கும்.
–வேம்பு

ராஜபக்ஷாக்களைக்

கள் அமைப்பு 4 தடவைகள் தலை தூக்க முயற்சி செய்ததுடன், இந்த 160 நாள்களுக்குள் ளும் தலை தூக்க முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன என்றும், எனினும், அது எமது பாதுகாப்புப் படையினரால் முறியடிக்கப்பட்டது என்றும் அவர் தெரிவித்தார்.

கொழும்பு விகாரமகாதேவி பூங் காவில் நேற்று இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் (நல்லாட்சிக் கான ஐக்கிய தேசிய முன்னணி) தேர்தல் விஞ்ஞாபன வெளியீட்டு நிகழ்வில் உரையாற்றியபோதே மேற்கண்டவாறு தெரிவித்த அவர், மேலும் தெரிவித்தவை வருமாறு:– மஹிந்தவுக்கும்–மைத்திரிக்கும், மைத்திரிக்கும்–மஹிந்தவுக்கும் ஒன்றாக இணைந்து செயற்பட முடியாது என்பது மிகத் தெளிவாக நிரூபிக்கப்பட்டுள்ளது. அதனால், அரசமைப்பு ரீதியாகவும், மக்கள் கருத்தினூடாகவும், தார்மீகத்தினூ டாகவும்பார்த்தால்மைத்திரி–ரணில் கூட்டணியே முன்னோக்கிச் செல் லும் அடுத்த 5 வருடங்களுக்கு ஆட்சி அமைக்கும்.

இன்று தேசிய பாதுகாப்புக்கு அச் சுறுத்தல், புலிகள் அமைப்பு தலை தூக்கி வருகிறது, நாட்டைப் பிரிக்கப் போகிறார்கள் என மாபெரும் பிரசாரம் செய்கின்றனர். இந்த நாட்டில் பயங்கரவாதம் உயிர்த்துடிப் புடன் இருந்த சந்தர்ப்பத்தில், அதற்கு எதிராகச் செயற்பட்டவர் கள் என்ற வகையில், பயங்கர வாதம் இந்த நாட்டில் தலைதூக்க நாம் இடமளிக்கமாட்டோம் எமது அரசு இடமளிக்காது.

நந்திக்கடலில் தோற்கடிக்கப்பட்ட தன் பின்னர் புலிகள் அமைப்பு 4 தடவைகள் தலைதூக்க முயற்சிசெய் தது. எமது ஆட்சியில் இந்த 160 நாள்களுக்குள்ளும் அதுபோன்ற முயற்சிகள் இடம்பெற்றன. அது எமது பாதுகாப்புப் படையினரால் முறியடிக்கப்பட்டது.

மஹிந்தவின் தேசப்பற்று என்ன என்பது அனைவருக்கும் தெரிய வரும். 2005இல் பிரபாகரனைத் தோற்கடிப்பதற்காக அவர் அரசிய லுக்கு வரவில்லை. பிரபாகரனுடன் நேரடியாகப் பேச்சு நடத்துவதாகக் கூறித்தான் வந்தார். கூறியதுபோல ஜெனிவா சென்று ஆரம்பித்தார். அதுபோல மஹிந்த ராஜபக்ஷ செயற்பாட்டு ரீதியான தலைவர் என பிரபாகரன் கூறினார். தன்னு டன் இருந்த எந்த ஜனாதிபதிக்கும் வழங்காத கௌரவத்தை பிரபா கரன் அன்று ராஜபக்ஷவுக்கு வழங் கினார். ஏன்?

ராடா என்ற நிறுவனத்தை அமைத்து, சுனாமி வீடுகள் அமைத்துக்கொடுப் பதாகக் கூறி, தமது செயலாளரை கிளிநொச்சிக்கு அனுப்பி புவண்ண னைச் சந்தித்து, திறைசேரியின் 800 மில்லியன் ரூபாவை மஹிந்த ராஜ பக்ஷ புலிகளுக்கு வழங்கினார். மாவிலாறில் எமது இராணுவத்தி னர் போராடியபோது–சரத் பொன் சேகாவுக்கு குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டிருந்தபோது, திறைசேரி யிலிருந்து புலிகளுக்கு மஹிந்த பணம் வழங்கினார்.

இன்று அந்த 3 புலிப் பயங்கர வாதிகளும் கைதுசெய்யப்பட்டுள் ளனர். திறைசேரியின் பணத்தை ராஜபக்ஷ தமக்கு வழங்கினார் என அவர்கள் மிகத் தெளிவாகக் கூறு கின்றனர். எதற்காக இந்தப் பணத் தைக் கொடுத்தார் என்பதே முக்கி யம். ராஜபக்ஷ குடும்பத்துக்கு குண்டுத் தாக்குதல் நடத்தவேண் டாம். ஏனைய எவரையும் தாக் குங்கள். இதுதான் அவரது அரசி யல். இதுதான் அவரது தேசப்பற்று. கோத்தபாய ராஜபக்ஷவுக்கு குண் டுத் தாக்குதல் நடத்தப்பட்டதன் பின் னர்தான், தான் ஏமாற்றப்பட்டார் என மஹிந்த நினைத்தார். பயங் கரவாதத்துக்கு எதிராக போரிட் டார். இவ்வாறு இரட்டைவேடம் போட்டவரை அரசியலில் சிறந்த வர் எனப் பெயரிடுவது பாவமாகும்.

இன்று என்ன நடந்துள்ளது? மைத் திரி–ரணில் அரசு வந்துவிட்டது என்று புலிகள் அமைப்பு வலுப் பெற்றுள்ளதா? அவர்களது ஆதரவு தரப்பு வலுப்பெற்றுள்ளதா? இல்லை. அன்று வடமாகாண சபைத் தேர்த லின்போது தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு ஊடாக வந்து பெரியள விலான வாக்குகளை அவர்கள் பெற்றனர். ஆனால், இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் கள், கையில் இரத்தம் படிந்த புலி கள் அமைப்பின் உறுப்பினர்க ளுக்கு வேட்புமனு வழங்குவதை நிராகரித்துள்ளனர். அவர்கள் வெளி யேற்றப்பட்டுள்ளனர்; முடக்கப்பட் டுள்ளனர். ஜனவரி 8 ஆம் திகதி இந்த நாட்டில் ஏற்பட்ட ஜனநாயக மாற்றத்தால்தான் இது நடந்தது. மஹிந்த இருந்திருந்தால், தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற் பட்டிருக்கும்.

மஹிந்த இங்கிலாந்தின் ஒக்ஸ் போர்ட் பல்கலைக்கழகத்தில் உரை யாற்றுவதற்காகச் சென்றார். ஆயி ரக்கணக்கான புலி ஆதரவாளர்கள் விமான நிலையத்துக்கும், ஒக்ஸ் போர்ட் பல்கலைக்கழகத்துக்கும் சென்று எதிர்ப்புத் தெரிவித்தனர். மஹிந்தவுக்கு உரையாற்றக்கூட முடியாமல் போனது.

எமது மைத்திரிபால சிறிசேனவும் இங்கிலாந்து சென்றார். இலங்கை ஜனாதிபதிக்கு எதிர்ப்புத் தெரிவியுங் கள் என்று புலி ஆதரவாளர்கள் யோசனையை முன்வைத்தனர். எத்தனைபேர் வந்தனர்? விமான நிலையத்துக்கு 16 பேர், எதிர்ப்புப் போராட்டத்துக்கு 356 பேர். புலி கள் அமைப்பு சர்வதேச மட்டத்தில் வலுப்பெற்றுள்ளதா? செயலிழந் துள்ளதா?

இந்த ஜனநாயக நல்லாட்சியை சீர்குலைத்து மஹிந்த குழுவுக்கு மீண்டும் இடமளிக்கக் கூடாது. நாடு பிரிக்கப்படவில்லை. நாடு பிரிக்கப் படாது. ஒற்றை ஆட்சிக்குள் செயற் படுவோம் என கடந்த டிசம்பர் 10 ஆம் திகதி கூறினார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க. ஜூலை 12ஆம் திகதி நாடு பிரிக்கப்படாது, ஒற்றை ஆட் சிக்குள் செயற்படுவோம் என்று கூறினார். எமது தேர்தல் விஞ்ஞா பனத்திலும் இது கூறப்பட்டுள்ளது. ஜனாதிபதி, தற்போதைய பிரதமர், எதிர்காலத்தில் உருவாக இருக்கும் பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் நாடு பிரிக்கப்படாது என்று கூறுகின்றனர். அப்போது எப்படி நாடு பிரிக்கப்படும்? அத னால், அச்சமின்றி உங்கள் வாக்கு களைப் பயன்படுத்துங்கள்– என் றார். (த–சி)

மஹிந்த 25,000,

மஹிந்த தெரிவித்த நிலையில், 31 ஆயிரம் ரூபா வழங்கப்படும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அண்மையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாள ராகப் போட்டியிடும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, தாம் பதவிக்கு வந்ததும் அரச பணியா ளர்களின் ஆகக்குறைந்த சம்ப ளத்தை 25 ஆயிரம் ரூபாவாக அதி கரிக்கப் போவதாக வாக்குறுதி அளித்திருந்தார்.

இந்த நிலையில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் புதன்கிழமை எல்பிட்டியவில் நடந்த கூட்டம் ஒன்றில் உரையாற்றிய போது, அரச பணியாளர்களின் ஆகக்குறைந்த சம்பளத்தை 31 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப் போவதாக உறுதியளித்துள்ளார்.

அத்துடன் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் தொடக்கம் அரச பணியா ளர்களுக்கு அடிப்படைச் சம்பளத் துடன், 10 ஆயிரம் ரூபா சலுகைக் கொடுப்பனவும் வழங்கப்படும் என் றும் அவர் வாக்குறுதி அளித்துள் ளார். ஆகக் குறைந்த அடிப்படைச் சம்பளம் தொடர்பாக மஹிந்த அளித்துள்ள வாக்குறுதியை விட வும், 6 ஆயிரம் ரூபா அதிகமாகதமது ஆட்சி வழங்கும் என்றும் ரணில் விக் கிரமசிங்க தெரிவித்துள்ளார்.(த–5)

விலைபோகாத

ணணியின் யாழ். மாவட்ட அலு வலகத்தில் நேற்று வியாழக்கிழமை நடை பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரி வித்தார். அதற்கு முன்னதாக அவர் யாழ். ஆயரைச் சந்தித்து இங்குள்ள நிலவரங்கள் தொடர்பில் உரை யாற்றினார்.

ஜே.வி.பி. தலைவர் மேலும் தெரி வித்ததாவது:

மனச்சாட்சியின் நடவடிக்கை என்ற தொனிப் பொருளில் தேர்தல் வேலை களை முன்னெடுத்து வருகின் றோம். வடக்கு, கிழக்கு, தெற்கு என்று நாட்டினை பிரிக்காது, பொதுவாக நாட்டு மக்களுக்கான வேலைத் திட்டமாக அதனை முன்னெடுத்து வருகின்றோம்.

அது குறித்த விளக்கங்களையும் பிரச்சினைகளை எப்படித் தீர்த்துக் கொள்வது என்பதையும் எமது தேர்தல் அறிக்கையில் முன்வைத் துள்ளோம். நாட்டில் மொழி ரீதி யான பாகுபாட்டினை நீக்குவதற்கா கவும், மொழி ரீதியாக சமத்துவத் தினை ஏற்படுத்துவதற்கும் ஒன்றி ணைந்துள்ளோம்.

மஹிந்தவின் அரசியல் மீள் பிரவேசம்

முதலில் நாடாளுமன்ற உறுப்பி னராக இருந்து, பிரதமராக இருந்து ஜனாதிபதியாகவும்வந்தவர்மஹிந்த ராஜபக்ஷ. தற்போது மீண்டும் நாடாளுமன்ற உறுப்பினராகுவதற் கான நடவடிக்கையில் இறங்கியி ருக்கின்றார். அவர் இந்த நடவடிக் கையினை மேற்கொள்வதற்கு முக் கிய காரணம், அவரது குடும்பத்தின் மீது தொடுக்கப்பட்டுள்ள ஊழல் மோசடி சம்பந்தமான குற்றச்சாட் டுக்கள் மீதான நடவடிக்கைகளை தடுப்பதும், அவற்றை வேறு திசைக் குத் திருப்புவதுமேயாகும். அதற் காகவே அவர் இந்தத் தேர்தல் களத்திற்கு மீண்டும் வந்துள்ளார்.

அவரது குடும்பத்தைச் சேர்ந்தவர் கள் அம்பாந்தோட்டை மாவட்டத் தில் தேர்தலில் போட்டியிடுகின்றார் கள். அவர்கள் மூவரும் விருப்பு வாக்குகளில் தெரிவு செய்யப்பட் டால் இவருக்கு விருப்பு வாக்குக் கிடைக்காமல் போய்விடக்கூடும். அதனால்தான் அவர் குருநாகல் மாவட்டத்தை நோக்கி நகர்ந்துள் ளார்.

மஹிந்த ராஜபக்ஷவின் மீள் வருகை என்பது, இலங்கையில் வாழும் மக்களின் நன்மை கருதியது அல்ல. இந்த நாட்டில் தனது குடும்பம் தனது குடும்பத்தினைச் சூழ்ந்துள்ள கும்ப லின் இருப்பையும் பாதுகாப்பதற் கானதே அது.

தேசிய அரசு அமையாது

தேர்தலுக்குப் பின்னர் தேசிய அரசு உருவாகுவதற்கு எந்தவித சாத்தி யப்பாடுகளும் இல்லை என நினைக் கின்றோம். இந்தத் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ கூடுதலான ஆசனங்க ளைப் பெற்றுக்கொண்டால், ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களை விலைக்கு வாங்கிக்கொண்டு, ஆட்சி அமைப்பதற்கான வாய்ப்பு இருக்கின்றது.

மறுபுறத்தில் ரணில் விக்கிரமசிங்க பெரும்பான்மையினைப் பெற்றால் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப் பினர்களைப் பெற்றுக் கொண்டு ஆட்சி அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் இருக்கின்றன.

இந்த இரண்டு கட்சிகளின் போக் குகளும் மாறப்போவதில்லை. இத னால்தான் இலங்கையில் வாழும் மக்களிடம் விலை போகாத நாடா ளுமன்ற உறுப்பினர்களை உரு வாக்குமாறு கோரிக்கை விடுக் கின்றோம்.

விலை போகாத நிலையான அரசை உருவாக்கி கொள்வதற்கு, நடைபெறவுள்ள இந்தத் தேர்தலில் மக்களின் பங்களிப்பு மிக முக்கியம். இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணி யின் தலைவர் தெரிவித்தார்.(உ–106)

இளைஞர்

வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

நேற்றைப் பிற்பகல் 3 மணியளவில் இந்தச் சம்பவம் இடம் பெற்றது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:–

வவுனியா, ஏ–9 வீதியில் பிராந் திய சுகாதார நிலையத்துக்கு முன்னால் உள்ள பஸ் தரிப்பிடத்தில் தனது மனைவியை மோட்டார் சைக்கிளில் அழைத்து வந்து இறக்கினார் இளை ஞர் ஒருவர். அதன் பின்னர் அவர் அங்கு நின்றவேளை, ஓட்டோ ஒன் றில் வந்த இனந்தெரியா தோர் பலர் முன்னிலையில் அந்த இளைஞ ரைக் கத்தியால் மோசமாகக் குத்தி யுள்ளனர். இதனால் படுகாயம டைந்த இளைஞன் அங்கு நின்ற மக்களால் வவுனியா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டார்.

திருமணம் ஆகி ஒரு மாதமேயான வவுனியா, பூந்தோட்டம் பகுதியைச் சேர்ந்த ராசாசுரேந்திரன்(வயது–29) என்பவரே படுகாயமடைந்து வவு னியா வைத்தியசாலையில் சேர்க் கப்பட்டு மேலதிக சிகிச்சைகாக அனுராதபுரம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் வவு னியா பொலிஸார் விசாரணை களை மேற்கொண்டு வருகின்றனர்.(த–402)

முன்றாம் ஆண்டு நினைவலையும்
62 ஆவது பிறந்த நாளும்

அமரர்
தர்மலிங்கம் இரத்தினேஸ்வரன்
(முன்னாள் கிராம சேவையாளர் J/127)

மலர்வு
24.07.1953

உதிர்வு
26.07.2012

அன்பிலே சிறந்தவராய் மண்ணிலே உதித்து அமைவற்ற வாழ்வினில்
நறுமணம் பரப்பி இல்லத்தின் விருட்சமாய் பாசநிழல் தந்தையாய்
உறவுகள் பேணிடும் கருணை வடிவமாய் உரிமையாய் உணர்வை அன்பாய்
பகிர்ந்தே விண்ணக வாழ்வை நாடியே சென்றீர்கள் மூன்று ஆண்டுகள்
பறந்தோடிச் சென்றதனால் என்றென்றும்
அவர் பாதம் போற்றியே பணிந்திடுவோம்.

நாகலிங்கம் வீதி,
கொக்குவில் மேற்கு.

குடும்பத்தினர்.

மணிவிழா வாழ்த்தும் சேவை நயப்பும்

திருமதி பாலஜெயந்தி விஜயகாந்தன்
B.A Dip.in Edu,M.phil - S.L.T.S -I
பிரதி அதிபர்,
யா/ ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம்

சேவை விவரம்:
களு/ஜிலான் மத்திய கல்லூரி
12.03.1984 - 29.03.1990
யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி
30.03.1990 - 31.12.2011
யா/ ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம்
01.01.2012 - 23.07.2015

எமது பாடசாலையில் 6 மாதம் பதில் அதிபராகவும் 3 வருடம் பிரதி அதிபராகவும் சேவையாற்றி 24.07.2015 அன்று தனது 31 வருட சேவையை பூர்த்திசெய்து ஓய்வு பெறும் மணிவிழா நாயகியை பாராட்டுவதுடன் அவர்தம் குடும்பத்துடன் பல்லாண்டு காலம் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

Best Wishes
வாழ்த்துபவர்
Best Wishes

பாடசாலைச் சமூகம்
யா/ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம்.

மரண அறிவித்தல்

வைரமுத்து கிருஸ்ணபிள்ளை

(வேலுப்பிள்ளை - நல்லெண்ணெய் வர்த்தகர்)



இல-23 காரைக்காட்டு லேன் வண்ணார் பண்ணையைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட வைரமுத்து கிருஸ்ணபிள்ளை நேற்று 23.07.2015 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரமுத்து நாகரத்தினம் தம்பதியரின் மகனும் இந்திராணியின் (திரவியம்) அன்புக்கணவரும், காலஞ்சென்ற கலைச்செல்வன் மற்றும் கலைச்செல்வி, கலையழகன்(அபிவிருத்தி உத்தியோ கத்தர் மாவட்டச் செயலகம் யாழ்ப்பாணம்), கலையழகி, கலையமுதா (கலாசார உத்தியோ கத்தர் யாழ் பிரதேச செயலகம்) ஆகியோரின் அன்புத்தந்தையும், பத்மஸ்ரீ(பிரபா), மாலினி, விஜயகுமார்(வீதி அபிவிருத்தி அதிகார சபை யாழ்ப்பாணம்), நரேந்திரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், தர்ணிகா, தர்மிலா, ரூபலக்ஸ்மிதா, திவிஷன், யதீஷன், அபிசாளினி, தர்ணிகன், நிலக்ஷா, தஸ்மிதன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.07.2015) வெள்ளிக்கிழமை பி.ப 3.00 மணிக்கு அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல 23, காரைக்காட்டு லேன்
வண்ணார்பண்ணை
யாழ்ப்பாணம். (63317)

தகவல் :-
மனைவி, பிள்ளைகள்

மரண அறிவித்தல்

நிக்கிளாஸ்பிள்ளை அல்பிறேட்

(தபாலக ஊழியர் நெடுந்தீவு)



நெடுந்தீவு கிழக்கு 15 ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் தற்காலிக வதிவிடமாக சபாவதி வீதி பூனாறி மரத்தடியில் வசிப்பவருமாகிய நிக்கிளாஸ்பிள்ளை அல்பிறேட் 22.07.2015 புதன்கிழமை காலமானார்.

அன்னார் மரிய பாக்கியத்தின் அன்புக்கணவரும் மரியதாஸ், மரியநாயகம், சகாயமலர், ஜெயக்குமார் (லண்டன்), நவக்குமார்(ஜேர்மனி) ஆகியோரின் தகப்பனாரும் லீலிமலர்(ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர்) காலஞ்சென்ற சின்னமலர், நவமலர் (யோசேபா அருட்சகோதரி) ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற சுந்தரலிங்கம் (பெரியதம்பனை) மற்றும் தருமலிங்கம்(செட்டிகுளம்), சிவசுப்பிரமணியம், காலஞ்சென்ற நாகரத்தினம்(வேவி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதி நிகழ்வுகள் 27.07.2015 திங்கட்கிழமை சபாவதி வீதியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10.00 மணியளவில் நெடுந்தீவு சவேரியார் தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நெடுந்தீவு கட்டுறான் சல்லி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

15 ஆம் வட்டாரம்,
நெடுந்தீவு. (63313)

தகவல் :-
குடும்பத்தினர்.

மரண அறிவித்தல்

அப்புத்துரை பூபதியம்மா



வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகவும் சுழிபுரம் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட அப்புத்துரையின் மனைவி பூபதியம்மா அவர்கள் 22.07.2015 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான முத்துக்குமார் - செல்லமுத்து தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கதிரவேலு- அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற வர்களான அம்பிகைராசா, வில்வராசா மற்றும் தேவானந்தராஜா(சுவிஸ்), நோதனராசா(லண்டன்), உருத்திரா தேவி(சுவிஸ்), திருதேவி, சரோஜினிதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும் கிருஸ்ண மூர்த்தி(சுவிஸ்), கமலாதேவி, வீரலட்சுமி (கனடா), சாந்தினி (சுவிஸ்), காலஞ்சென்ற ஸ்ரீகந்த ராஜா மற்றும் பரமநாதன், அனுசா(கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமியாரும் சுதர்ஜன், திவ்யா, விஜிதா(கனடா), வினோசா (கனடா), அர்ச்சனா(சுவிஸ்), நிஷாந்தி(சுவிஸ்) ,நிஷாந்தன் (சுவிஸ்), ஸ்ரீராம், நிக்ஷன் (லண்டன்) ஆகியோரின் பேர்த்தியும் ரைசானின் (கனடா) பூட்டியும் காலஞ்சென்றவர்களான குலசேகரம், மனோன்மணி, ராசம்மா, வீரப்பமோறாசேனாதி மற்றும் யோகவதி, சாரதா ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான பாக்கியம், செல்லாச்சி, இளையாச்சி, பரஞ்சோதி, துரையப்பா, சண்முகநாதன் ஆகியோரின் மைத்துனியு மாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(24.07.2015) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுழிபுரம் திருவடிநிலை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: மருமகன்
(ந.பரமநாதன்)
தொடர்பு : 021 7902571
0776050477

சுழிபுரம் கிழக்கு,
சுழிபுரம்.

சுவரொட்டி அடிப்பதை விடுத்து ஏழைகளுக்கே உதவுகின்றோம்

சுயேச்சை வேட்பாளர் பரப்புரை

தேர்தல் விதிகளை மதித்து, எங்கள் சுயேச்சைக் குழுவிற்காக சுவரொட்டிகள் அச்சிடாமல் அந்தப் பணத்தை ஏழை மக்களுக்கு உதவுவதற்கே செலவிடவுள்ளோம்.

இவ்வாறு தெரிவித்தார் சுயேச்சை இலக்கம் ஆறில் முதன்மை வேட்பாளராகப் போட்டியிடும் சிவன் அறக்கட்டளையின் நிறுவுநர் வேலாயுதம் கணேஸ்வரன்.

"சுவரொட்டிகளை அச்சிட்டு எந்த வொரு வீதிச் சுவர்களில் ஒட்டாது அந்தப் பணத்தைக் கொண்டு ஏழ்மையில் வாடும் மக்களுக்கு உதவி செய்வது ஆறாம் இலக்க சுயேச்சைக் குழுவாகப் போட்டியிடும் நாம் மட்டுமே. ஆனால் தேர்தல் விதிகளையும் மீறி, சில கட்சிகள் சுவரொட்டிகளை வீதிச் சுவர்களில் ஒட்டித் தங்கள் பரப்புரைகளை மேற்கொண்டு வருவது தொடர்பாக சட்டம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை" என்றார் அவர்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் பேசிய அவர் மேலும் தெரிவித்ததாவது:

சட்டமும் விதிகளும் எல்லோருக்கும் பொதுவானவை. அவற்றுக்கு எல்லோரும் மதிப்பளிக்க வேண்டும். நாங்கள் எப்பொழுதும் சட்டத்தை மதிப்பவர்கள். சட்டத்தை மிதிப்பவர்கள் அல்லர்.

எத்தனையோ மக்கள் முகாம்களில் அன்றாடம் ஒரு நேரச் சாப்பாட்டுக்கு வழியின்றி தவித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய தேவையை எண்ணும்போது பெரும் தொகைப் பணத்தைச் செலவிட்டு சுவரொட்டிகள் அச்சிட்டு அவற்றைச் சுவர்களில் ஒட்ட மனம் இடந்தரவில்லை. ஏழைகளின் தேவையை உணர்ந்த எவரும் அப்படிச் செய்ய முன்வரமாட்டார்கள். போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் படும் அல்லல்களை நேரில் சென்று அவர்களுடன் நெருங்கிப் பழகினால் மட்டுமே புரிந்துகொள்ள முடியும். ஆனால் இங்கோ நிலமை தலை கீழாக இருக்கிறது. சட்டத்தை மீறுவதுதான் அரசியலாகிக் கொண்டிருக்கிறது. சட்டத்தை மீறுபவர்களுக்கு எதிராக என்ன சட்ட நடவடிக்கைகள் இங்கு எடுக்கப்படுகின்றன? எதுவுமில்லை.

வறுமையில் வாடும் மக்களைக் காக்கவேண்டும். இது தேர்தல் களத்தில் இறங்கியிருப்போர் புரிந்து கொள்ளவேண்டிய முக்கிய செய்தி. இந்தப் பிரச்சினையை எல்லோரும் கவனத்தில் கொள்ள வேண்டும். சுவரொட்டிகளுக்கு வாரி இறைப்பதை விட்டு அந்தப் பணத்தை இவர்கள் ஏழைகளுக்குச் செலவிட வேண்டும்.

இது ஒரு தனி மனிதனால் மட்டும் செய்ய முடியாத விடயம். முடிந்தளவு என்னுடைய சொந்த நிதியினால் இந்த மக்களுக்கு உதவி புரிந்து வருகின்றேன். இந்த மக்கள் துன்பப்படுவதைப் பார்த்துவிட்டு வெறுமனே ஒரு பார்வையாளனாக இருக்க முடியாது. இந்த நிலையில் கணிசமான மாற்றத்தைச் செய்ய வேண்டிய தார்மிகப் பொறுப்பு இந்த தேர்தல் களத்தில் இறங்கியுள்ள அனைவரது தோள்களின் மேலும் உள்ளது- என்று கணேஸ்வரன் தெரிவித்தார். (உ-300)

முதியோர் சங்க பேரவை உறுப்பினர் கூட்டம்

வரணி, ஜூலை 24

சாவகச்சேரி பிரதேச செயலக நிர்வாகப்பரப்பில் இயங்கும் முதியோர் சங்கங்களின் பேரவை உறுப்பினர்களுக்கான கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை தென்மராட்சி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் காலை 9 மணிக்கு இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. கூட்டத்தில் முதியோர் சங்கங்களின் தலைவர், செயலாளர் உட்பட்ட பிரதிநிதிகளையும் கலந்து கொள்ளுமாறு பிரதேச செயலர் கடித மூலம் கேட்டுள்ளார்.(ற-122)

கொதிநீர் கொட்டி குழந்தைகள் காயம்

தென்மராட்சி, ஜூலை 24

பாதுகாப்பின்றி நிலத்தில் வைக்கப்பட்டிருந்த கறி, கஞ்சி மற்றும் கொதிநீர் கொட்டி ஒரு வயதுக்கு உட்பட்ட மூன்று குழந்தைகள் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளன.

சமையலறைகளில் உறிகட்டி அவற்றில் கறி கஞ்சி போன்றவற்றை வைத்துப் பாதுகாக்கும் முறை எமது மக்கள் மத்தியில் இல்லாது அவற்றை நிலத்தில் வைப்பதால் சிறுகுழந்தைகள் அவற்றை தட்டி வீழ்த்திப் பாதிப்புகளுக்கு உள்ளாவதுடன் மலவாசல் மற்றும் அதனையண்டிய உறுப்புகள் கொதிநீரால் பாதிக்கப் படக்கூடிய அபாயம் உள்ளதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன. சிறுகுழந்தைகள் உள்ள இடங்களில் கறி, கஞ்சி, சுடுநீர் போன்றவற்றைப் பாதுகாப்பின்றி வைக்க வேண்டாமெனவும் அறிவுறுத்தியுள்ளனர். (ற-9)

மகளின் காலை பிடித்து தரையில் அடித்த தந்தை

தென்மராட்சி, ஜூலை 24

குடும்பச் சண்டையால் உறங்கிக் கொண்டிருந்த எட்டு வயது மகளின் காலில் பிடித்து நிலத்தில் தூக்கி அடித்துள்ளார் தந்தை ஒருவர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு தனங்களப்பில் நடந்துள்ளது.

சசிக்குமார் கீர்த்தனா(வயது-8) என்ற சிறுமி, அவரது தாயான சசிக்குமார் தமிழ் லக்ஸ்மி (வயது 30) ஆகியோர் இதில் காயமடைந்துள்ளனர்.

அதிகாலையில் இடம்பெற்ற குடும்பச் சண்டையில் நித்திரையாக படுக்கையில் இருந்த மகளை காலில் பிடித்து நிலத்தில் அடித்துக் காயப்படுத்தியதாகக் கூறப்படுகின்றது. (ற-9)

மரண அறிவித்தல்

இராஜதுரை கனகேந்திரம்

(ஓய்வு பெற்ற ஆசிரியர் - முளாய் சைவப்பிரகாச வித்தியாலயம், சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்)



வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் கனடா, கல்கரியை (Calgary) வதிவிடமாகவும் கொண்ட இராஜதுரை கனகேந்திரம் 21.07.2015 செவ்வாய்க் கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வர்களான இராஜதுரை - தங்கம்மா தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும் தொல்புரம், பச்சந்தையை சேர்ந்த காலஞ் சென்றவர்களான செல்லத்துரை - சிவகாமன் தம்பதியரின் மருமகனும் தனலட்சுமியின் பாசமிகு கணவரும் அம்பிகாதேவி (அவுஸ்திரேலியா), மகேஸ்வரிதேவி (சுழிபுரம்) காலஞ்சென்ற தெய்வேந்திரம் ஆகியோரின் அன்புச்சகோதரனும், ரகுராமன் (கனடா), ரகுபரன் (கனடா), ராதை (லண்டன்), நிருமாலினி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் ராஜனி(கனடா), விநோதினி(கனடா), சுகுமார்(அவுஸ்திரேலியா), சாந்தகுமார் (அவுஸ்திரேலியா), காலஞ்சென்ற உமையாள் மற்றும் திருக்குமரன் (சுழிபுரம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் எழிலன், மதுராஜினி, சேரன், அயாழினி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (25.07.2015) சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கனடா, கல்கரியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் - திருமதி மகேஸ்வரிதேவி கதிர்காமராஜா (சகோதரி)
க.திருக்குமரன் (மருமகன், ஆசிரியர் யா/ விக்ரோறியாக் கல்லூரி)
சுழிபுரம். 077 950 9797

சென்.ஆன்ஸ் ஆலயத்தின் திருவிழா நாளைமறுதினம்

யாழ்ப்பாணம், ஜூலை 24

யாழ். மாவட்டத்திலுள்ள பழைமையான கத்தோலிக்க ஆலயங்களில் ஒன்றான வலித்தூண்டல் புனித அன்னம்மாள் ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

ஒவ்வொரு வருடமும் ஜூலை மாதம் இறுதி ஞாயிற்றுக்கிழமைகளில் வலித்தூண்டல் பதியின் பாது காவலரான புனித அன்னம்மாளுக்கு (சென்.ஆன்ஸ்) குறித்த பங்கு மக்களால் விழா முன்னெடுக் கப்பட்டுவரும் நிலையில் இந்த வருடத்துக்கான விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை முன்னெடுக் கப்படவுள்ளது.

கத்தோலிக்க மக்களின் பாரம்பரியத்தின்படி திருவிழாவுக்கு முன்னையநாள் கொண்டாடப்படும் நற்கருணைவிழாத் திருப்பலி நாளை சனிக்கிழமை மாலை 5.15 மணிக்கு திருச்செபமாலையுடன் ஆரம்பமாகும். திருவிழாத் திருப்பலி ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு திருச்செபமாலையுடன் ஆரம்பமாகும் என்று குறித்த பகுதியின்பங்குத்தந்தையான அருட்திரு அருள்தாசன் அடிகளார் அறிவித்துள்ளார். குறித்த திருவிழாவுக்கான ஆயத்த வழிபாடுகளும் திருப்பலிகளும் கடந்த செவ்வாய்க் கிழமை முதல் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(ம)

கலந்துரையாடல்

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழாவுக்கான முன்னாயத்த ஏற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் 27 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.மாநகர சபையின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 19 ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 14 ஆம் திகதி வரை திருவிழாக்கள் இடம்பெறவுள்ளன.

(ஐ)

டெங்குக் கட்டுப்பாட்டு செயற்றிட்டம் சரசாலையில்

தென்மராட்சி, ஜூலை 24

சுகாதார அமைச்சின் வீசேட டெங்கு கட்டுப்பாட்டு வருடாந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தென்மராட்சிப் பிரதேசத்தில் இன்று டெங்குக் கட்டுப்பாட்டுச் செயற்றிட்டம் சரசாலைப் பகுதியில் இடம்பெறவுள்ளது.

ஒவ்வொரு சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனைப் பிரிவுகளில் மாதத்தில் இரு தடவைகள் டெங்கு கட்டுப்பாட்டு செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்ற சுகாதார அமைச்சின் அறிவிப்பின் பிரகாரம் இந்த செயற்றிட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்த செயற்றிட்டத்தில் சுகாதாரப் பகுதியினர் பொலிஸார் உட்பட பொது அமைப்புகளின் பிரதிநிதிகளும் கலந்து கொள்வர் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-9)

பனம் உற்பத்திக் கண்காட்சியை பார்வையிட்டுப் பயன் பெறுக

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அழைப்பு

நல்லூர் கிட்டுப் பூங்காவில் நடை பெற்று வரும் பனம் உற்பத்திக் கண் காட்சியை சகல கூட்டுறவுப் பணியாளர்களும் பார்வையிட்டு பயன்பெற வேண்டும். கூட்டுறவுப் பணியாளர்கள் கண் காட்சியைப் பார்வையிடுவதற்கு வசதியாக சங்கங்கள் அரை நாள் விடுமுறை வழங்கி அவர்களுக்கு ஒத்துழைக்க வேண்டும் – இவ்வாறு கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ். கணேஸ் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஐந்து மாவட்டங்களின் பனை, தென்னை வள கூட்டுறவு அமைப்புக்களினால் கண்காட் சியும், கலை நிகழ்ச்சிகளும் முன்னெடுக்கப் பட்டு வருகின்றன. தமிழரின் பாரம்பரியத்தை எடுத்துக்காட்டும் வகையில் இந்தக்கண் காட்சி அமைந்திருப்பதோடு, பாரம் பரியத்தை எடுத்துக் காட்டும் கலை நிகழ்வுகளும் தினமும் மாலையில் இடம் பெற்று வருகின்றன.

இந்தக் கண்காட்சியை கூட்டுறவு சங்கங்களின் பணிப்பாளர்கள், பணியாளர்கள் கட்டாயம் பார்வையிட்டு பயன்பெற வேண்டும். கண்காட்சியைப் பார்வையிடுவதற்கு வசதியாக பணியாளர்களுக்கு அரைநாள் விடுமுறை வழங்கலாம்.– என்றார். (ற-17)

மிற்சுபிசி ஜீப் விற்பனைக்கு

தேர்தல் பரப்புரைகளுக்கு மிகவும் உகந்த திறந்த மிற்சுபிசி ஜீப் (31 ஸ்ரீ) வவுனியாவில் குறைந்த விலைக்கு விற்பனைக் குண்டு.

தொடர்பு:- 077 732 2720

(61134)

பணியாளர் தேவை

கரடிப்போக்கு, கிளிநொச்சியில் அமைந்துள்ள தர்ணிகா மோட்டோர்ஸ் நிறுவனத்திற்கு, கணினியில் நன்கு தேர்ச்சி பெற்ற கணக்காளர் தேவை. விண்ணப்பிப் பவர்கள் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் விரும் பத்தக்கது. ஆண்கள் மட்டும் ஏற்றுக் கொள்ளப் படுவர். வேதனம் நேரில் பேசித் தீர்மானிக் கப்படும். கணினி அனுபவம் அற்ற கணக்காளர் ஒருவரும் தேவை.

தொடர்பு : 077 772 2305

விரு வாடகைக்குண்டு

யாழ்ப்பாணம் அருளம்பலம் லேன் இல.05 அரியாலையில் உள்ள வீடு வாடகைக் குண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு 077 048 7422
077 934 4567

(63311)

பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பொருளியல் ஆசான் உயர்திரு. **வல்லிபுரம் நடராசா** அவர்கள் (B.A (Hons), M.Ed., SLPS I)

யா/கொடிகாமம் தீருநாவுக்கரசு மத்திய கல்லூரி அதிபராகக் கடமையாற்றி 30.06.2015 இல் சாகசுச்சேர் கோட்டக் கல்வி பணிப்பாளராக பதவி உயர்வு பெற்றுச் சென்றதையிட்டு நாம் மனம் மகிழ்வதுடன். இவர் மேலும் பல பதவியுயர்வுகளைப் பெற்று பல்லாண்டு காலம் வாழ உளமார வாழ்த்துக்கின்றோம்.

பாராட்டி வாழ்த்துவோர்
அன்புக்குரிய மாணவர்கள் (A/L 1989,1990)
மா/வரணி மத்திய கல்லூரி, வரணி.

நாடாளுமன்றத் தேர்தல் - 2015

நீதி மறுக்கப்பட்ட எம்மக்களின்
நீதிக்காய் குரல்கொடுத்த எங்கள்
வாதி என்றும் சோர்விலா மைந்தன்

தன்னம்பிக்கை!

தன்நிறைவு!

தன்னாட்சி!

எமது எதிர்காலம்
எமது கையில்...

M.A. சுமந்திரன்

(முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர், சிரேஷ்ட சட்டத்தரணி)

(இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி)

ஐ.நா.

விசாரணை ஆரம்பமாகும் என அரச தரப்பில் முன்னதாக அறிவிக்கப்பட்டிருந்தாலும் அவ்வாறானதொரு விசாரணைப் பொறிமுறை இன்னும் உருவாக்கப்படவில்லை.

எதிர்வரும் ஓகஸ்ட் இறுதியில் வெளியாகவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபையின் அறிக்கையை மையப்படுத்தியே அதன் சிபாரிசுகளையும் உள்ளடக்கும் வகையில் உள்ளகப் பொறிமுறையைத் தயாரிக்கவேண்டி உள்ளதாலேயே இது விடயத்தில் தாமதம் ஏற்பட்டுள்ளது எனக் கூறப்படுகிறது.

இதை உறுதிப்படுத்தும் வகையிலேயே போர்க்குற்ற விசாரணை பற்றி ஐக்கிய தேசிய முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் முன்மொழியப்பட்டுள்ள தீர்வு அமைந்துள்ளது என அரசியல் அவதானிகள் சுட்டிக் காட்டுகின்றனர்.

ஐ.நாவின் தலையீட்டுடன் இடம்பெறும் போர்க்குற்ற விசாரணைக்கு எதிர்ப்பை வெளியிட்டுவரும் ஜாதிக ஹெல உறுமயவும், ஐக்கிய தேசிய முன்னணியில் பங்காளிக் கட்சியாக இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனம் எதிர்வரும் 27ஆம் திகதி வெளியிடப்படவுள்ளது. இதில் போர்க்குற்ற விசாரணை பற்றி எத்தகைய உறுதிமொழிகள் வழங்கப்படும் எனப் பரவலாக எதிர்பார்க்கப்படுகிறது.

ஐக்கிய தேசிய முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபன வெளியீட்டு நிகழ்வு நேற்று கொழும்பு விகாரமாதேவி பூங்காவில் நடைபெற்றது. 60 மாதத்தில் புதிய நாட்டை உருவாக்கும் ஐவகைத் திட்டம்' என்னும் தொனிப்பொருளின்கீழ் அது வெளியிடப்பட்டுள்ளது.

இவ்வாறு வெளியிடப்பட்ட விஞ்ஞாபனத்தில், போர்க்குற்ற விசாரணை பற்றி போர் தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் சபையின் அறிக்கைக்கமைய, ஐ.நாவுடனும், அதன் அங்கத்துவ நாடுகளுடனும், இலங்கையின் அனைத்து சமய, இன குழுக்களுடனும் பேச்சு நடத்தி தேசிய சட்டக் கட்டமைப் புக்கமைய தீர்வு காணப்படும் என முன் மொழியப்பட்டுள்ளது.

அத்துடன், யாழ். வலி.வடக்குப் பகுதியிலுள்ள கோயில்களுக்குச் சென்று வழிபடுவதற்குத் விதிக்கப்பட்டுள்ள தடை நீக்கப்படுவதுடன், போரின் காரணமாகச் சேதமாக்கப்பட்ட அனைத்துக் கோவில்களும் புனர்நிர்மாணம் செய்வதற்காக நிதி உதவி வழங்கப்படும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், முஸ்லிம்களினதும், அவர்களின் வழிபாட்டுத் தலங்கள், வியாபார நிலையங்கள் மற்றும் சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுவதுடன், கிறிஸ்தவ அலுவல்கள் அமைச்சை மீள உருவாக்கி, வடக்கில் பாதிக்கப்பட்டுள்ள தேவாலயங்களைப் புனரமைக்கவும் நிதி உதவி வழங்கப்படும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐ.தே.கவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் வருமாறு,

1. பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யும் திட்டம்

10 லட்சம் வேலைவாய்ப்புகளை வழங்குதல், உலகச் சந்தைப் பிரவேசம், பொருளாதார அபிவிருத்தி வலயங்கள் 45, கைத்தொழில் மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்தி வலயம் 11, சுற்றுலாத்துறை அபிவிருத்தி வலயம், விவசாய மற்றும் மீன்பிடி வலயம்.

2. ஊழலை இல்லாதொழிக்கும் திட்டம்

களவு, பொய் அற்ற நாடு, சிறப்பான பொலிஸ் சேவை, மது அற்ற நாடு.

3. சுதந்திரத்தை உறுதிப்படுத்தும் திட்டம்

சுதந்திரமான நாட்டில் சுதந்திரமான மனித வாழ்க்கை, பௌத்த, இந்து, முஸ்லிம், கிறிஸ்தவ சமய சுதந்திரம்.

நல்லிணக்கம்

1983ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட போர் 2009இல் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. இருப்பினும், நாடு என்ற அடிப்படையில் உண்மையான நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியாமல் போயுள்ளது. பழைய அசௌகரியங்களைச் சரி செய்து, அனைத்து இனத்தவர்களினதும் துன்பங்களுக்குத் தீர்வு காண்பதற்காக புதிய அரசு செயற்படும். போர் தொடர்பான ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் அறிக்கைக்கமைய, அந்த அமைப்புடனும், அதன் அங்கத்துவ நாடுகளுடனும் இலங்கையின் அனைத்து சமய, இன குழுக்களுக்களுடனும் பேச்சு நடத்தி தேசிய சட்டக் கட்டமைப்புக்கமைய தீர்வு காணப்படும்.

4. உட்கட்டமைப்பு வசதிகளுக்கான முதலீட்டு நடவடிக்கைகள்

நிலையான அபிவிருத்தி, 5,00,000 வீடுகள், போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அபிவிருத்தி, சுகாதார மற்றும் நலன்புரி அபிவிருத்தி, சிரேஷ்ட பிரஜைகளைப் பாதுகாத்தல்.

5. கல்வித் தரத்தை உயர்த்தும் திட்டம்

பாலர் பாடசாலை அபிவிருத்தி, ஆங்கிலக் கல்வி அபிவிருத்தி, தொழில்நுட்பக் கல்வி அபிவிருத்திக் காக சர்வதேச மட்டத்தினாலான புதிய தொழில்நுட்ப ஆய்வுகூடம் 18, பல்கலைக்கழக கல்வி அபிவிருத்தி, சர்வதேச தொழில் வாய்ப்பு சந்தையை இலக்காகக் கொண்ட புதிய பாடத்திட்டங்கள் உருவாக்கப்படும்–எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (த–சி)

வாக்குச் சிதறும்

இந்தச் சந்திப்புத் தொடர்பில் 'உதயனுக்கு கருத்துத் தெரிவித்த, வடக்கு மாகாணசபை உறுப்பினர் இ.ஆனோல்ட், பல்வேறு கட்சிகள் தன்னைச் சந்திப்பதாக எம்மிடம் ஆரம்பத்தில் தெரிவித்தார். இன்றும் கூட (நேற்று) மக்கள் விடுதலை முன்னணியினர் தன்னைச் சந்தித்துப் பேசியதாகவும், அவர்களிடம் எமது மக்களின் பிரச்சினையைத் தீர்க்குமாறு அரசுகளிடம் கூறுமாறு தெரிவித்தாகவும், எங்களுடனான சந்திப்பில் ஆயர் குறிப்பிட்டார்.

தற்போதைய நிலையில் யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில், தமிழ் மக்களின் வாக்குகள் பிரிக்கப்பட்டு விடுமோ என்ற அச்சம் நிலவுவதாக குறிப்பிட்ட ஆயர், புதிது புதிதாக களமிறங்கியுள்ள கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் தமிழ் மக்களின் ஒற்றுமையை சிதைத்து விடும் நிலை காணப்படுவதைச் சுட்டிக்காட்டினார்.

கூட்டமைப்பின் தலைமைக்கு எதிராகச் சிலரால் முன்னெடுக்கப் படும் தவறான பரப்புரைகள் தொடர்பில் ஆயரிடம் சுட்டிக்காட்டப்பட்ட போது, அவ்வாறு அதனை முன்னெடுப்பவர்கள் பலமானவர்கள் இல்லை என்று ஆயர் பதிலளித்ததாக ஆனோல்ட் குறிப்பிட்டார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மக்களை விரைவாக அறிவூட்டவேண்டும் என்றும், கூட்டமைப்பின் ஸ்திரத்தன்மையைப் பேணுவதற்குக் கடுமையாக வேலை செய்ய வேண்டும் என்றும் ஆயர் தெரிவித்துள்ளார்.

தற்போதுள்ள ஆட்சிமாற்ற சூழ்நிலையைப் பயன்படுத்தி தமிழ் மக்களுக்கு விரைவில் தீர்வைப் பெற்றுக்கொடுக்க கூட்டமைப்பு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதையும் ஆயர் வலியுறுத்தினார் என்று ஆனோல்ட் தெரிவித்தார்.

இதேவேளை, கூட்டமைப்பில் கடந்த காலங்களில் போட்டியிட்டவர்களே மீண்டும் மீண்டும் தேர்தலில் போட்டியிடுகின்றனர் என்ற அபிப்பிராயம் மக்கள் மத்தியில் இருந்ததையும் ஆயர் இந்தச் சந்திப்பின்போது சுட்டிக்காட்டியமையும் குறிப்பிடத்தக்கது. (த–5)

டக்ளஸின்

முக்கிய நபராக கூடத்தில் கலந்து கொண்டிருந்தார்.

முன்னாள் போராளிகள், அரசியல் கைதிகளின் பெற்றோர் தமது ஆதங்கங்களைக் குறைகளைத் தெரிவிக்கலாம் என அங்கு கூறப்பட்டது. அப்போதே காணாமற்போனோர் பெற்றோர் பாதுகாவலர் சங்கத் தலைவி எழுந்து முன்னாள் அமைச்சர் டக்களஸ் தேவானந்தா மீது ஆவேசமாகக் குற்றஞ்சுமத்தினார். மேடையில் டக்ளஸ் தேவானந்தாவுடன் அவரும் அமர்ந்திருந்தார். எனினும் ஒலிவாங்கியின் முன்னால் வந்தபோது உணர்ச்சி வசப்பட்டு உரையாற்றினார். அவரது கண்கள் கலங்கின.

“காணாமல்போனவர்கள் பற்றிக் கண்டறிந்து கூறுமாறு டக்ளஸ் தேவானந்தாவைக் கோரினோம். அவர் அதற்கு ஏற்பாடு செய்வதாகக் கூறினார். ஆனால் இன்றுவரை அது நடக்கவில்லை.

எமது நாட்டை, கலாசாரத்தை அழிக்கத்தான் அரசுகள் விரும்பியிருந்தன. அவர்கள் அழிக்கலாம், சுட்டுக் கொல்லலாம், என்னவும் செய்யலாம். ஏனெனில் அவர்கள் அதனையே விரும்புகிறார்கள். எங்கட மக்கள் அழிய வேண்டும், எங்கட பிள்ளையள் இருந்து வளர்ந்து கலியாணம் செய்து பிள்ளைகள் குட்டிகளைப் பெறக்கூடாது, எமது இனம் வளரக்கூடாது என்றுதான் அவர்கள் விரும்புகிறார்கள். ஆனால், அவர்களுடன் சேர்ந்திருந்த எமது தமிழ் அரசியல்வாதிகள்கூட அதற்குத் துணைபோகிறார்கள். அரசியல் கைதிக்ளை விடுவிக்கக்கோரி நாம் செய்யாத போராட்டங்கள் இல்லை. தற்பொழுது நோயாளிகள் ஆகிவிட்டோம்" என்றார்.

காணாமற்போனோரது குடும்பங்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும் மாகாண சபை அமைச்சர்களும் குறிப்பாக அமைச்சர் டெனீஸ்வரனும் அழைத்துப் பேசவேண்டும் என்றும் அவர் அங்கு கோரிக்கை வைத்தார்.

கலந்துரையாடலில் ஜனநாயகப் போராளிகள் கட்சியைச் சேர்ந்தவர் எனத் தன்னை அறிமுகப்படுத்திய ஒருவரும் உரையாற்றினார். “எந்தவொரு ஜனாதிபதிக்கும் அரசியல் கைதிகளையோ தண்டனை பெறும் கைதிகளையோ விடுதலை செய்வதற்கான அதிகாரம் உண்டு. அவர் நினைத்தால் அதனைச் செய்யலாம். எனவே அரசுடன் சேர்ந்திருக்கின்ற அரசியல் கட்சிகள் எதுவாகினும் அதனைச் செய்விக்க வேண்டும். அது சின்ன விடயம். முன்னர் ஜனாதிபதியாக இருந்த பிரேமதாச அதனைச் செய்தார். எனவே அரசியல் வாதிகள் உறுதி பூண்டால் எமது மக்களது பிரச்சினைகளைத் தீர்க்க முடியும்" என்று தெரிவித்தார்.

கலந்துரையாடலின் இறுதியில் முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உரையாற்றினார். “எந்தச் சந்தர்ப்பத்திலும் நான் யாரையும் தேடிப்போனது கிடையாது. அவ்வாறான கொள்கையிலோ விடயங்களிலோ எவ்வித சம்மதமும் இல்லை. இணக்கப்பாடும் இல்லை. சிலர் சுயலாப அரசியல் காரணங்களுக்காக இலகுவாக எமது கட்சியின் மேல் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி விட்டுத் தப்பி விடுகிறார்கள்" என்றார். யாரையும் தாங்கள் கடத்தவில்லை கொல்லவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

காணாமல்போனோர் விடயத்தில் கடந்த காலங்களில் முயற்சி எடுத்திருந்தார் என்றும் அந்த முயற்சி கைகூடாமல் போய்விட்டது என்றும் எனினும் வருகின்ற காலத்தில் முயற்சி எடுப்பார் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

பிற்பகல் 3 மணிக்குக் கலந்துரையாடல் ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் 4 மணிக்குப் பின்னரே கலந்துரையாடல் ஆரம்பமாகியது. வடமாகாண அமைச்சர் டெனீஸ்வரன் அந்தக் கலந்துரையாடலில் கலந்துகொள்வார் என்றும் கூறப்பட்டதாகவும் தாம் கடன் பெறுவதற்கு விண்ணப்பித்திருந்தனர் எனவும் அது தொடர்பில் சாதகமான பயன் கிடைக்குமா என்றும் எதிர்பார்த்து வந்தனர் எனவும் சிலர் தெரிவித்தனர். ஆனால் தற்போது அமைச்சர் டெனீஸ்வரனுக்கு அழைப்பு ஏற்படுத்தியபோது அவரது கையடக்கத் தொலைபேசி செயலிழக்க வைக்கப்பட்டிருக்கிறது என்றும் நிகழ்வுக்குத் தலைமை வகித்த சகாதேவன் கூறினார்.

“குறித்த கலந்துரையாடல் தொடர்பிலோ அது யாரால் நடத்தப்படுகிறது என்பது தொடர்பிலோ தனக்கு எதுவும் தெரியாது. அது தொடர்பில் எந்த் அமைப்பும் எந்தவொரு கட்சியும் என்னுடன் கதைத்திருக்கவில்லை. முன்னாள் போராளிகள் மற்றும் அரசியல் கைதிகளின் பெற்றோருடனான என்னுடைய சந்திப்புக்கள் ஏற்கனவே திட்டமிட்டபடி கடந்த திங்கள்கிழமை மன்னாரிலும் இன்று (நேற்று) யாழ்ப்பாணத்திலும் நாளை (இன்று) முல்லைத்தீவிலும் நடக்கிறது. யாழ்ப்பாணத்தில் நாவலர் வீதியில் உள்ள அமைச்சின் அலுவலகத்தில் சந்திப்பு நடந்தது. முன்னாள் போராளிகளைச் சிலர் தமது சுயநலத்துக்காகப் பயன்படுத்துகிறார்கள். என்பது தெரிகிறது. அதற்காகப் பொய்யான தகவல்களைக்கூறி அவர்களைத் திசை திருப்ப முற்படுகின்றனர். முன்னாள் போராளிகளுக்கு உதவும் பொருட்டு செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. அது முன்னாள் போராளிகளுக்கும் தெரியும்'' என்று இந்தக் குற்றச்சாட்டுக்கு உதயன் பத்திரிகையிடம் பதிலளித்தார் அமைச்சர் டெனீஸ்வரன். (உ–4)

தேசிய

தாவது:–

இன்றைய நாள் (நேற்று) மிக முக்கியமான நாள். முதலில் தமிழ் மக்களுக்கு எனது அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள் கின்றேன். 1983 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியின் இனவாதிகள் தமிழர்களுக்கெதிராக இனக்கலவரத்தைக் கட்டவிழ்த்துவிட்டனர். இதில் 5 ஆயிரம் வரை யிலான தமிழர்களும், 8 ஆயிரம் வரையிலான தமிழர்களின் வீடுகளும் தீக்கிரையாக்கப்பட்டன. அவ்வாறான ஒரு யுகம் மீண்டும் வர ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவளிக்கக்கூடாது.

இந்த நாட்டின் தேசியப் பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. நேற்றைய தினம் (நேற்று முன்தினம்) தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு மிக நெருக்கமானவர்களில் மூன்று பேர் இராமநாதபுரத்தில் வைத்துப் புதிய ஆயுதங்களுடன் சட்டவிரோதமாக இலங்கைக்கு வரவிருந்த நிலையில் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டதாக இந்தியாவின் பி.டி.ஐ. ஊடக மையம் செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் இதுவரை இலங்கையின் அரசும், இரகசியப் பாதுகாப்பு அதிகாரிகளும் தேடிப் பார்க்கவில்லை. இதுதான் நிலைமை. அத்துடன், மற்றுமொரு பிரபாகரனின் நெருங்கிய விசுவாசி சிவாஜிலிங்கம். மஹிந்த ராஜபக்ஷவை எதிர்த்து குருநாகலில் போட்டியிடுகின்றார். அவர் அங்கு குறிப்பிடுவது என்னவெனில், தன்னுடைய தலைவரின் கடைசி ஆசையை நிறைவேற்றத்தான் தான் இங்கு போட்டியிடுவதாகத் தெரிவித்து வருகின்றார். பிரபாரகரனின் ஆசையை நிறைவேற்றவா அவர் அங்கு போட்டியிடுகின் றார்–என்றார். (த–சி)

மஹிந்தவுக்கு

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:–

வெள்ளைவான் கலாசாரம் மீண்டும் தலை தூக்கியுள்ளது. மிரிஹான சம்பவம் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு. மூன்று இராணுவ அதிகாரிகள் துப்பாக்கி சகிதம் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களை அனுப்பியது யார்?

மஹிந்த ராஜபக்ஷவின் உயிருக்கு ஏதும் ஆபத்து ஏற்படுமாயின், அதற்கு ரணில் விக்கிரமசிங்கதான் பொறுப்பு. இந்தச் சம்பவத்தின் உண்மைத்தன்மையை உடனடியாகக் கண்டறிந்து நாட்டு மக்களுக்குத் தெரிவிக்கவேண்டும். செப்ரெம்பர் மாதம் ஐ.நா. அறிக்கை வெளிவரவுள்ளது. அதில் 42 இராணுவச் சிப்பாய்களினதும் 2 சிவில் பிரஜைகளினதும் பெயர் விவரம் அடங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதில் குறிப்பிடப்பட்டுள்ள சிவில் பிரஜைகள் இரண்டு பேரும் மஹிந்த மற்றும் கோத்தபாய எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நாட்டை வெற்றிகொண்ட நாயகர்களுக்கு இவ்வாறானதொரு நிலையை ஏற்படுத்துவதா நல்லாட்சி? எனவே, வெள்ளைவான் விடயம் பகிரங்கப்படுத்தப்பட வேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி செய்த 6 மாதத்தில் நாட்டின் பொருளாதாரம் கேள்விக்குறியாகியுள்ளது. வெளிநாடுகளிடம் இலஞ்சம் பெற்றுக்கொண்டு அரசுடைமை களை வெளிநாடுகளுக்கு விற்பதற்குத் தீர்மானித்துள்ளனர்–என்றார்.(த–சி)

வடக்கு

வில்லை.

வடக்கு மாகாண சபையின் 32 ஆவது அமர்வு கைதடியிலுள்ள பேரவைச் செயலகத்தில் நேற்று இடம்பெற்றது. கடந்த 31 ஆவது அமர்வு, போராட்டம் காரணமாக ஒத்தி வைக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில், நேற்றைய அமர்வில் கடந்த அமர்வில் ஒத்தி வைக்கப்பட்ட நிகழ்ச்சி நிரலில் உள்ளடக் கப்பட்டிருந்த விடயங்களே, விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

இருப்பினும், தற்போது நாடாளுமன்றத் தேர்தல் காலம் என்பதால், சபை அமர்வில் தேவையற்ற விடயங்களைத் தவிர்ப்பது என்று தீர்மானிக்கப்பட்டது. அதற்கமைய அரசியல் விவாதத்துக்குரிய கேள்விகள் மற்றும் பிரேரணைகள் என்பன எடுத்துக் கொள்ளப்படவில்லை.

அதே போன்று, சபையின் அடுத்த அமர்வை தேர்தல் முடிவடைந்து ஒரு வாரத்தின் பின்னர் – அடுத்த மாதம் 25 ஆம் திகதி நடத்தத் தீர்மானிக்கப்பட்டது. (த–5)

கட்சிகளின்

யாளர் தீர்மானித்துள்ளார்.

கட்சிகளின் செயலாளர்கள் மற்றும் குழுக்களின் தலைவர்களைத் தவிர்த்து ஏனைய வேட்பாளர்களுக்குப் பொலிஸ் பாதுகாப்பு வழங்க இயலாதெனத் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய கட்சிகளின் செயலாளர்களுக்குத் தெரியப்படுத்தியுள்ளார்.

யாரேனும் வேட்பாளருக்குப் பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற் படுமானால் அது பற்றி தேர்தல் அலுவலகத்துக்குத் தெரியப்படுத்த வேண்டும் எனவும் தேர்தல் ஆணையாளர் கட்சிக ளின் செயலாளர்களுக்குத் தெரியப்படுத்தியுள்ளார்.

இதற்கமைய கட்சிச் செயலாளர் மற்றும் வேட்பாளர் ஒரு வருக்கு பாதுகாப்புக்கு இரு பொலிஸ் உத்தியோகத்தர்கள் வழங்கப்படுவர் எனவும் தேர்தல் செயலகம் தெரிவித்துள்ளது.

(த–22)

50th Anniversary 1965-2015

மட்டுவில் தெற்கு

வளர்மதி சனசமூக நிலையம்

பொன்விழா விளையாட்டரங்கு திறப்பு விழாவும்
பொன்விழா விளையாட்டுவிழா உதைபந்தாட்டத்தொடரின்
இறுதிப்போட்டியும் பொன்விழாவும்

24.07.2015 வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு மரம் நாட்டலுடன் நிகழ்வும் 12.00 மணிக்கு விளையாட்டரங்கு நிலைய ஸ்தாபகர் அமரர் பொன் நாகமணி அவர்களின் பாரியாரால் திறந்து வைக்கப்படும் அதனைத்தொடர்ந்து 03.00 மணியளவில் யாழ் மாவட்ட கழகங்களிற்கிடையில் நடாத்தப்பட்ட உதைபந்தாட்டச்சுற்றுத்தொடரின் இறுதிச்சுற்றுப்போட்டி இடம் பெறும். இறுதிப்போட்டியில் குருநகர் பாடுமீன் விளையாட்டுக்கழகம் எதிர் நாவாந்துறை செண்மேரிஸ் விளையாட்டுக்கழக அணிகள் மோதுகின்றன.

26.07.2015 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் பொன்விழா இறுதி நிகழ்வுகள் நடைபெறும்.

ரசிகர்கள், ஆதரவாளர்கள், அனுசரணையாளர்கள்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

பிரதான அனுசரணை

இதயன்
தமிழ் தேசிய நாளிதழ்

வளர்மதி சனசமூக நிலையமும்
அதன் துணை அமைப்புக்களும்

பாடும்மீன் எதிர் சென்.மேரிஸ்
அனல் பறக்கும் இறுதி இன்று

பாடும்மீன் அணி

சென்.மேரிஸ் அணி

யாழ்ப்பாணம், ஜூலை 24

வளர்மதி சனசமூக நிலையத்தின் 50ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வளர்மதி விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் 7பேர் பங்குபற்றும் வில கல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் குரு நகர் பாடும்மீன் அணியை எதிர்த்து நாவந்துறை சென்.மேரிஸ் அணி இன்று மோதவுள்ளது.

பிற்பகல் 3 மணிக்கு கழக மைதா னத்தில் நடைபெறவுள்ள இந்த ஆட்டத்துக்கு பிரதம விருத்தினராக வடமாகாண சபையின் அவைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் கலந்து கொள்ளவுள்ள அதேநேரம் சிறப்பு விருந்தினர்களாக உதயன் பத்திரிகை நிறுவனத்தின் நிர்வாக இயக்குனரும் முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினருமான ஈ.சரவண பவன், இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் உப தலைவரும் யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் தலை வருமான கிளிவேட் அன்ரனிப் பிள்ளை, வடமாகாண சபை உறுப் பினரும்விளையாட்டுத்துறைஇணைப் பாளருமான ஆனல்ட், வடமாகாண விளையாட்டுத் திணைக்கள மெய் வன்மை பயிற்றுனர் க.முகுந் தன், யாழ். மாவட்ட விளையாட்டுத் துறை அதிகாரி எம்.ஆர்.மோகன தாஸ், சாவகச்சேரி பொலிஸ் நிலைய பெறுப்பதிகாரி டபிள்யு.எ.கே.டி. வன்னியாராச்சி ஆகியோரும் கௌரவ விருத்தினர்களாக யாழ். உதைபந்தாட்ட லீக்கின் உபதலை வர் அ.சுரேந்திரன், சாவகச்சேரி பிரதேசசபை உறுப்பினர் தங்க ராசா, சாவகச்சேரி பிரதேசசபை உறுப்பினரும் முன்னாள் கிராம அலுவலருமான வே.கந்தையா ஆகியோரும் கலந்து கொள்ள வுள்ள னர். (ம-23)

நாவலர் வி.கழகத்தின் துடுப்பாட்டத்தொடர்

யாழ்ப்பாணம், ஜூலை 24

தும்பளை நாவலர் விளையாட்டுக் கழகம் தனது 42ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு விண்ணப் பிக்கும் கழகங்களுக்கிடையில் நடத்தத் திட்டமிட்ட 5 பந்துப் பரி மாற்றங்கள் கொண்ட துடுப்பாட் டத்தொடர் நாளை சனிக்கிழமை மற்றும் நாளை மறுதினம் ஞாயிற் றுக்கிழமை ஆகிய இருதினங்களி லும் நடைபெறவுள்ளது.

குறித்த தொடரில் பங்குபெற விரும்பும்கழகங்கள்இன்றுகாலை 9 மணிக்கு தமது பதிவுகளை குறித்த கழக மைதானத்துக்கு சமூகமளிப்பதன் மூலமும் உறுதிப் படுத்திக்கொள்ள முடியும் என்று ஏற்பாட்டாளர்கள் அறி வித்துள்ளனர். (ம)

வடக்கு, கிழக்கு மாகாண கரப்பந்தாட்டத் தொடர்

மாங்குளம், ஜூலை 24

வவுனியா கல்மடு சரஸ்வதி விளை யாட்டுக் கழகம் 5ஆவது தட வையாக நடத்தும் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் வீரர்கள் பங்கு பற் றும் கரப்பந்தாட்டத் தொடர் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை கழக மைதானத்தில் நடை பெறவுள்ளது. அணிக்கு 4 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான தொடராக குறித்த தொடர் அமையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. தவிர அணிக்கு 7 வீரர்கள் கொண்ட கயிறிழுத்தல் போட்டியும் 80 மைல் சைக்கிள் ஓட்டப் போட்டியும் மற்றும் கிரா மியவிளையாட்டுக்களும் குறித்த தினத்தில் நடைபெறவுள்ளமை மற்றொரு சிறப்பம்சம். (ம-422)

செம்மீன் வி.கழகத்தின் போட்டிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 24

பொலிகண்டி மேற்கு செம்மீன் விளையாட்டுக் கழகம் நாளை சனி மற்றும் நாளை மறுதினம் ஞாயிற் றுக்கிழமைகளில் விளையாட்டுப் போட்டியொன்றை நடத்தத் திட்ட மிட்டுள்ளது.

நாளை காலை 7 மணிக்கு குறித்த கழக மைதானத்தில் நடைபெற வுள்ள இந்த விளையாட்டுப்போட் டியில்

வாகனம் இழுத்தல், கடலில் படகு இழுத்தல், குத்துச்சண்டை, தலை யணைச்சண்டை, மல்யுத்தம், கயிறிழுத்தல் போன்ற பல நிகழ் வுகள் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

எவரெஸ்ட்டை தகர்த்தது கலைமதி

யாழ்ப்பாணம், ஜூலை 24

யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனு மதியுடன் புத்தூர் விக்னேஸ்வரா விளையாட்டுக்கழகம் நடத்தும் விலகல் முறையிலான உதைபந் தாட்டத்தொடரின் ஆட்டங்கள் கழக மைதானத்தில் இடம்பெற்று வரு கின்றது.

இந்தத்தொடரில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை மாலை 3.45 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் புத்தூர் எவரெஸ்ட் அணியை எதிர்த்து நவிண்டில் கலைமதி அணி மோதிக் கொண்டது. இதில் நவிண்டில் கலை மதி அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

பல்கலையை பந்தாடியது வயாவிளான் மத்திய கல்லூரி

யாழ்ப்பாணம், ஜூலை 24

சிநேகபூர்வ கரப்பந்தாட்டமொன் றில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக பெண்கள் அணியை வீழ்த்தியது வயாவிளான் மத்திய கல்லூரியின் பெண்கள் அணி.

வயாவிளான் மத்திய கல்லூரியின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் பிற்பகல் 2.30 மணிக்கு நடை பெற்ற 3 செற்களைக்கொண்ட இந்த ஆட் டத்தில் முதல் செற்றை 25:21 என்ற அடிப்படையில் கைப்பற்றிய வயா விளான் மத்திய கல்லூரி இரண்டா வது செற்றை 25:11 என்ற அடிப்ப டையில் கைப்பற்றி மூன்றாவது செற்றுக்கு வேலை வைக்காமல் யாழ். பல்கலை அணியை வீழ்த்தி அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தது. (ம)



நீலம் – பல்கலைக்கழகம் பச்சை– வயாவிளான் மத்திய கல்லூரி அணி

கொலின்ஸ், ஞானகலா போராடி வெற்றி

யாழ்ப்பாணம், ஜூலை 24

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங் கள் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.

இந்தத்தொடரில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை மாலை 3.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் கரணவாய் கொலின்ஸ் அணியை எதிர்த்து பெற்பதி சென்.பீற்றர்ஸ் அணி மோதிக் கொண்டது இதில் கரண வாய் கொலின்ஸ் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. தொடர்ந்து மாலை 4.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் நாவாந் துறை சென்.மேரிஸ் அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானகலா அணி மோதிக்கொண்டது. இதில் மயிலங்காடு ஞானகலா அணி 1:0 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற் றது. (ம-23)

பொம்மர்ஸ், யங்கம்பன்ஸ் அசத்தல்

யாழ்ப்பாணம், ஜூலை 24

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் கின் அனுமதியுடன் தொண்டமா னாறு கலைவாணி சனசமூக நிலை யத்தின் 25ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ். மாவட்ட ரீதியாக நடந்தும் உதைபந்தாட்டத் தொட ரின் லீக் ஆட்டங்கள் கழக மைதா னத்தில் இடம்பெற்று வருகின்றது.

இந்தத்தொடரில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை மாலை 3.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் பொம்மர்ஸ் அணியை எதிர்த்து நியூட்டன் அணி மோதிக் கொண் டது. இதில் பொம்மர்ஸ் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. தொடர்ந்து மாலை 4.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் நவஜீவன்ஸ் அணியை எதிர்த்து யங்கம்பன்ஸ் அணி மோதிக் கொண்டது. இதில் யங்கம்பன்ஸ் அணி 3:1என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

(ம-23)

இன்றைய மோதல்கள்

கலைமதி வி.க.தொடர்

யாழ்ப்பாணம், ஜூலை 24

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டத்தொடரின் ஆட்டங் கள் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.

இந்தத்தொடரில் இன்று வெள்ளிக் கிழமை மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பலாலி விண்மீன் அணியை எதிர்த்து சக்கோட்டை சென்.சேவியர் அணி மோதவுள்ளது.

கலைவாணி வி.க.தொடர்

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் கின் அனுமதியுடன் தொண்ட மானாறு கலைவாணி சனசமூக நிலையத்தின் 25ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ். மாவட்ட ரீதியாக நடந்தும் 9பேர் பங்குபற் றும் உதைபந்தாட்டத் தொடரின் லீக் ஆட்டங்கள் தற்பொழுது கழக மைதானத்தில் இடம்பெற்று வரு கின்றது. இந்தத்தொடரில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யங்கம்பன்ஸ் அணியை எதிர்த்து நியூட்டன் அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் நவஜீவன்ஸ் அணியை எதிர்த்து பொம்மர்ஸ் அணி மோதவுள்ளது.

விக்னேஸ்வரா வி.க.தொடர்

யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனு மதியுடன் புத்தூர் விக்னேஸ்வரா விளையாட்டுக்கழகம் நடத்தும் விலகல் முறையிலான உதைபந் தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.

இந்தத்தொடரில் இன்று வெள்ளிக் கிழமை பிற்பகல் 3.45மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பாசையூர் சென். அன்ரனிஸ் அணியை எதிர்த்து கல்வளை விநாயகர் அணி மோத வுள்ளது. தொடர்ந்து மாலை 4.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஞானகலா அணியை எதிர்த்து ஆனைக்கோட்டை யூனியன் அணி மோதவுள்ளது. (ம-23)

சென்.அன்ரனிஸ் வி.க.தொடர்

தாழ்வுபாடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் ரி-20 துடுப்பாட்டத் தொடரின் ஆட் டங்கள் மன்னார் பொது விளை யாட்டு மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இந்தத்தொடரில் இன்று வெள்ளிக் கிழமை காலை 9மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் சென்.நீக்கிளஸ் அணியை எதிர்த்து கிங்ஸ்ராஸ் அ மோதவுள்ளது. மதியம் 2மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஸ்ரார் ஈகில் அணியை எதிர்த்து அல் பாதா அணி மோதவுள்ளது. (ம-23)

பல்கலைக்கழக மட்டத்தொடர் நாளையும் நாளை மறுதினமும்

யாழ்ப்பாணம், ஜூலை 24

யாழ். பல்கலைக்கழக புதுமுக மாணவ பீடங்களுக்கிடையிலான வருடாந்த தடகளப் போட்டிகள் நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30 தொடக்கம் மாலை 5.30 மணி வரையும் நாளைமறுதினம் ஞாயிற் றுக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரையும் நடைபெறவுள் ளது.

பல்கலைக்கழக மைதானத்தில் நடை பெறவுள்ள இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்ப் பாணப் பல்கலைக்கழக மருத்து வபீட பீடாதிபதி எஸ்.பாலகுமார் கலந்துகொள்ளவுள்ள அதே நேரம் சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக் கழக முன்னாள் தடகள பெண்கள் அணி யின் தலைவியும், யாழ். போதனா வைத்தியசாலை பதில் கதிரியக்க வியல் துறை நிபுணருமான வைத் திய கலாநிதி கலைமகள் அறிவுச் செல்வனும் கலந்து சிறப்பிக்கவுள் ளனர். (மு-422)

பாகிஸ்தானிடம் முழுமையாகப் பணிந்தது இலங்கை

இலங்கை பாகிஸ்தான் அணிகளுக் கிடையிலான நான்காவது ஒரு நாள் ஆட்டத்தில் 7 இலக்குகள் வித்தி யாசத்தில் மிக இலகுவாக இலங் கையை வீழ்த்தி 3-1 என்ற அடிப் படையில் தொடரைக் கைப்பற்றி யது பாகிஸ்தான். இதனால் இறுதி யாட்டம் சம்பிரதாயபூர்வமான ஆட்டமாக நடைபெறவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை முதலில் துடுப்பெடுத் தாடத் தீர்மானிக்க, களத்தில் டில் சானுடன் குஷல் பெரேரா. ஓட்டங் கள் எதனையும் பெறாத நிலையில் ஓட்டம்பிடித்தார் குஷல் பெரேரா. இலக்குச்சரிவு என்னும் இக்கட்டை உணர்ந்து நிதானித்தார் டில்ஷான். டில்ஷானையும் விட அதிக நிதானம் காட்டினார் திரிமன்னே. இலக்குச் சரிவு ஏற்படாமல் தவிர்க்கப்பட்ட போதிலும் அணியின் ஓட்டங்கள் ஆமை வேகத்திலேயே பயணித்துக் கொண்டிருந்தன. மேலதிக இலக்கு கள் இழப்பில்லாமல் அணி நூறினை எட்டியது. அரைச்சதத்துடன் விடை பெற்றார் டில்ஷான். அதிகப்படி யான பந்துகள் வீணடிப்பு மத்திய வரிசை வீரர்களுக்கு பின்னடைவை யும் சுமையையும் அதிகரிக்க எவ ரும் 20 ஓட்டங்களை முழுமை யாக எட்டவில்லை. ஆனபோதிலும் ஒருமுனையில் சதத்தைநோக்கி நெருங்கிக்கொண்டிருந்தார் திரிமன்னே. ஏற்கனவே நிதானித்த அவர் சதத்தை நிறைவுசெய்யும் முனைப்பில் இன்னமும் நிதானிக்க ஆரம்பித்தார். அளவுக்கு அதிக நிதானம் ஆபத்தில் முடிய 90 ஓட் டங்களுடன் பவிலியனுக்கு சென் றார். பின்வரிசை வீரர்கள் தமது பங்களிப்புக்கு ஆளுக்கொரு சிக் சரை விளாச முடிவில் இலங்கை 256-9.

பந்துவீச்சில் பாகிஸ்தான் சார்பாக இர்பான் 3 இலக்குகளையும் அன் வர் அலி 2 இலக்குகளையும் ரஹற் அலி, சாஜ், இமட் வசிம் மூவரும் தலா ஓர் இலக்கினையும் கைப்பற் றினர்.

257 ஓட்டங்களைப்பெற்றால்வெற்றி என்ற எட்டக்கூடிய இலக்கினை நோக்கி பதிலுக்கு தமது இன் னிங்ஸை ஆரம்பித்த பாகிஸ்தா னுக்கு ஆரம்பவீரர்கள் இருவரும் சிறந்த அடித்தளம் அமைத்துக் கொடுத்தனர். இலக்குச்சரிவில்லா மல் இணைப்பாட்டம் அரைச்ச தத்தை எட்டியது. அணியின் ஓட்டம் 75ஆக இருந்த வேளையில் 33 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் அஷார் அலி. ஆரம்ப இணைப்பாட் டத்தை விடப்பலம் பெற்றது இரண் டாவது இணைப்பாட்டம். அதிரடி யில் பயணித்தார் செஷாட். சொல் லிக்கொள்ளும் படியான சராசரி யில் ஹபீஸ். ஆளுக்கொரு அரைச் சதத்தையும் பதிவுசெய்யத் தவற வில்லை. இணைப்பாட்டம் நீடிக்க பாகிஸ்தானின் வெற்றி படிப்படி யாக உறுதி யாகிக்கொண்டிருந்தது. பாகிஸ் தானின் ஓட்டங்கள் 190ஆக

இருந்த பொழுது 95ஓட்டங்களு டன் சதத்தைத் தவறவிட்டார் ஷெசாட். 70 ஓட்டங்களுடன் விடை பெற்றார் ஹபீஸ். தொடர்ச்சியாக 4 சிக்சர் களை வெளுத்துக்கட்டினார் மலிக். முடிவில் 40 பந்துப்பரி மாற்றங்க ளில் இலக்கை அடைந்து இலங்கையை அதன் சொந்த மண்ணில் ஊதித்தள்ளியது பாகிஸ் தான். (ம)

பங்களாதேஷின் ஆதிக்கத்தை தடுத்து நிறுத்தியது தென்னாபிரிக்கா

முடிவு எந்த அணிக்கும் சாதகமாக அமையலாம் என்ற நிலைமை

பங்களாதேஷ் – தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையிலான இரண்டு டெஸ்ட் ஆட்டங்களைக் கொண்ட தொடரின் முதலாவது ஆட்டத்தின் மூன்றாம் நாள் முடிவில் தென்னா பிரிக்கா 61-0என்றநிலையில்உள்ளது. நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்கா முதலில் துடுப் பெடுத்தாடத் தீர்மானித்து களமி றங்கி ரஹ்மானின் வேகத்தில் திடீர் புகண்டு 248 ஓட்டங்களில் சுருண்டது. பந்துவீச்சில் பங்களா தேஷ் சார்பாக ரஹ்மான் 4 இலக்கு களையும் ஹொசைன் 3 இலக்கு களையும் ஷகிப் அல் ஹசன், முகம துல்லா, இஸ்லாம் மூவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

249 ஓட்டங்களைப் பெற்றால் முன்னிலை பெற்றுவிடலாம் என்ற முனைப்பில் களமிறங்கிய பங்க ளாதேஷ் நேற்றுமுன்தினம் இரண் டாம் நாள் முடிவில் 179-4 என்ற நிலையில் இருந்தது. ரஹிம் 16 ஓட்டங்களுடனும் ஷகிப் அல் ஹசன் ஓர் ஓட்டத்துடனும் மூன்றா வது நாளுக்காக நேற்றுக் களமிறங் கினர். ரஹிமின் ஆட்டம் பெரியள வில் எடுபடவில்லை. மூன்றாம் நாளில் மேலதிகமாக 12 ஓட்டங் களைப்பெற்று 28 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார் ரஹிம். தொடர்ந்தும் நிலைத்துநின்றார் – கிப் அல்ஹசன். ஹசனுடன் இணைந் தார் லிரன் டாஸ். மீண்டுமொரு சிறப்பான இணைப்பாட்டம். 3 ஓட்டங்களால் அரைச்சதத்தைத் தவறவிட்டார் ஷகிப் அல் ஹசன். சஷிப் அல் ஹசன் செய்த தவறை தானும் செய்யாது அரைச்சதத்தை எட்டினார் டாஸ். அதற்கப்பால் அவ ரால் முடியவில்லை. பின்வரிசை வீரர்கள் ஒற்றையிலக்கங்களுடன் பவிலியன் திரும்ப முடிவில் பங் களாதேஷ் 326 ஓட்டங்களில் சுருண்டது. பந்துவீச்சில் தென்னா பிரிக்கா சார்பாக ஸ்ரெயின், ஹார் மர் இருவரும் தலா 3 இலக்குக ளையும் பிளன்டர் 2 இலக்குகளை யும் ஷில் மற்றும் எல்கர் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர். பங்களாதேஷ் முன்னிலைபெற்றி ருந்த 78 ஓட்டங்களைக் கடந்து கடினமான வெற்றியிலக்கொன்றை நிர்ணயிக்கவேண்டும் என்ற கட் டாயத்தில் களத்தில் ஷில் மற்றும் எல்கர். முதல் இன்னிங்ஸின் பின்ன டைவைக் கருத்தில் கொண்டு மிகவும் கவனமாக இருவரும் ஆடிக்கொண்டிருந்தனர். இணைப் பாட்டமாக அரைச்சதத்தையும் எட்டினர். மங்கலான வெளிச்சம் ஆட்டத்தில் தடங்கல் ஏற்படுத்த நேற்றைய மூன்றாம் நாள் முடிவில் தென்னாபிரிக்கா 61-0. முதல் இன் னிங்ஸில் பங்களாதேஷ் முன் னிலை பெற்றிருந்தாலும் தென்னா பிரிக்காவின் ஆரம்ப இணைப்பாட் டம் வலுப்பெற்ற காரணத்தி னால் ஆட்டத்தில் இரு அணிகளுக்கும் சம வாய்ப்புக்கள் ஏற்பட்டுள்ளன. (ம)

பாகிஸ்தானால் முடிகிறதென்றால் நிச்சயம் இந்தியாவால் முடியும்

இலங்கை அணியை பாகிஸ்தானா லேயே அதன் சொந்த மண்ணில் வைத்து வீழ்த்த முடிகிறதென்றால் நிச்சயம் இந்திய வீரர்களாலும் இலங்கையை வீழ்த்த முடியும்; இவ்வாறு தெரிவித்தார் இந்திய அணியின் முன்னாள் நட்சத்திரம் லக்ஸ்மன்.

இலங்கை – இந்தியா அணிகளுக் கிடையிலான 3 ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ள நிலையி லேயே லக்ஸ்மன் இவ்வாறு தெரி வித்துள்ளார். இந்திய அணியின் திறன் தொடர்பாக லக்ஸ்மன் தெரி வித்ததாவது தற்போதைய இந் திய அணி மிகுந்த திறமையான வீரர்களை கொண்டிருக்கிறது என்ற நம்பிக்கை எனக்கு எப்போதும் உண்டு. அத்துடன்தனிநபராகவெற்றி தேடித் தரக்கூடிய வீரர்களும் இருக் கிறார்கள். நமது வீரர்கள் தங்களது திறமைக்கு ஏற்ப விளையாடினால், நிச்சயம் இலங்கை அணியை அவர் களது சொந்த மண்ணிலேயே வீழ்த்த முடியும். அது மிகச்சிறந்த சாதனையாகவும் அமையும். இது இலங்கை அணிக்கு மிகப்பெரிய டெஸ்ட் தொடராக இருக்கப் போகி றது. ஏனெனில், இந்த தொடருடன் அந்த அணியின் முன்னணி வீரர் சங்கக்காரா ஓய்வு பெறுகிறார். எனவே அவரை வெற்றியுடன் வழியனுப்பிவைக்க இலங்கை வீரர் கள் விரும்புவார்கள். அதனால் இந்த தொடர் மிகவும் நெருக்க மான, சவாலான தொடராக இருக் கும். வெற்றிக்காக இலங்கை வகுக்கப்போகும் வியூகங்களை இந்திய வீரர்கள் ஒவ்வொருவரும் புரிந்துகொள்ள வேண்டும். பாகிஸ் தானால் முடிகிறதென்றால் நிச்சயம் இந்தியாவால் முடியும் என்றார்.

ஹொக் - இக்பால் மோதல்; ஹொக்கிற்கு அபராதம்

பங்களாதேஷ் – தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையிலான முதல் டெஸ்ட்டின் இரண்டாம் நாளான நேற்றுமுன்தினம் உணவு இடை வேளையின் பொழுது தென்னா பிரிக்க இலக்குக்காப்பாளர் குவின் டன் டி ஹொக்குக்கும் பங்களா தேஷ் துடுப்பாட்ட வீரர் இக்பாலுக் கும் இடையே மோதல் ஏற்பட்டு இருவரும் ஒருவரை ஒருவர்நேருக்கு நேராக முட்டிக்கொள்ளும் அள வுக்கு சென்றனர்.

இரண்டாம் நாளின் உணவு இடை வேளைக்கான இறுதிப்பந்தை எதிர் கொண்ட இக்பால் அதனை ஓட்ட மற்ற பந்தாக மாற்றிவிட்டு பவிலி யன்நோக்கி நடந்தார். அப்பொழுது எதிரே வந்த ஹொக் அவருக்கு எதையோ தெரிவிக்க வார்த்தைப் போர் ஆரம்பமாகி இருவரும் ஒரு வரையொருவர் முட்டிக்கொள் ளும் நிலைமைக்குச் சென்றனர். ஐ.சி.சி. ஹொக்கின் மீதுதான் தவறு கள் இருப்பதாகத்தெரிவித்து குறித்த ஆட்டத்துக்கான சம்பளத்தில் இருந்து 75சதவீதத்தை அபராதமாக விதித் துள்ளது. (ம)

பணிநிலை வெற்றிடம்
WALK IN INTERVIEW

யாழ் நகரில் இயங்கும் பிரபல திருமண மண்டபத்திற்கு பின் வரும் பணி நிலைகளுக்கு தகுதியானவர்கள் நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படுகிறார்கள்.

* அலுவலக உதவியாளர் (ஆண்/பெண்)
* Executive house keeper
* House keeping Supperviser
* வெயிற்றர்(ஆண்/பெண்)
* கிளீனிங் பணியாளர் (ஆண்/பெண்)

கீழ்வரும் முகவரியில் சனி/ஞாயிறு (25.07-26.07) நேர்முகத்தேர்வு 10.30-3.00 pm வரை நடைபெறும்.

No.132, பலாலி வீதி, கோண்டாவில். (63308) T.P-021 205 3999

காணவில்லை



கல்வியங்காட்டைச்சேர்ந்த 75 வயதான க.இராசரத்தினம் (பொன்னண்ணை) என்பவரை 22.07.2015 புதன்கிழமை மதியம் தொடக்கம் காணவில்லை. சாரமும் நீலநிறக் கோடன் சேட்டும் அணிதிருந்தார்.

இவர் பற்றிய விவரம் தெரிந்தவர்கள் தொடர்பு கொள்ளவும். 077 861 0280 077 223 3428

(63312)

வாக்காளர்களே !
சரியான முறையில் வாக்களிப்பதை அறிந்து கொள்வோம்.

உங்கள் தெரிவான கட்சி/சுயேட்சைக்குழு, தெரிவு செய்த சின்னத்திற்கு நேரே உள்ள பெட்டியில் புள்ளடி ☒

இட்டு சரியான வாக்களிப்பை உறுதிப்படுத்துங்கள்.

அவதானம்

* ஒன்றுக்கு மேற்பட்ட சின்னத்திற்கு புள்ளடி யிட்டால் உங்கள் வாக்கு நிராகரிக்கப்படும்.
* நீங்கள் தெரிவு செய்த சின்னத்தின் கீழ் உள்ள வேட்பாளர்களில் கூடியது மூவருக்கு உங்கள் விருப்பு வாக்கை செலுத்த முடியும்.

மூன்றுக்கு மேற்பட்ட வேட்பாளர் இலக்கங்கள் தெரிவு செய்யப்பட்டால் விருப்பு வாக்கு நிராகரிக்கப்பட்ட வாக்காகும்.

அனுசரணை- கரித்தாஸ்
யாழ்ப்பாணம் கியூடெக்

(C 18137)



இது எங்குபோய் முடியப்போகுதோ?

இலங்கை பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான இரண்டு ரி-20 ஆட்டங்களைக் கொண்ட தொடருக்கான இலங்கை அணி நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் எதிர்கால வீரர்களுக்கு வாய்ப்புக் கொடுக்கும் படியாக ஐந்து புதுமுக வீரர்கள் இந்த அணியில் சேர்க்கப்பட்டிருப்பினும் இலங்கையின் எதிர்கால நட்சத்திரங்கள் என்று வர்ணிக்கப்படும் திரிமன்னே, சந்திமால் இருவருக்கும் வாய்ப்பு புறக்கணிக்கப்பட்டுள்ளது. அதேநேரம் 3 ஆண்டுகளுக்குப் பின்னர் ஹப்புகெதர மீண்டும் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இலங்கை அணியின் விவரம்- மலிங்கா (தலைவர்), டில்ஷான், குஷல் பெரேரா, விதானகே, தனஞ்ஜய டி சில்வா, மத்தியூஸ், தசுன் ஷனாகே, ஹப்புகெதர, ஷேகன் ஜெயசூர்யா, திசாரா பெரேரா, ஜெப்ரே வந்தேர்சாய், நுவான் குலசேகரா, பினுரா பெர்னாண்டோ, சுதுரங்கா டி சில்வா, மலிந்தா சிறிசர்தேனே

இதில் பினுரா பெர்னாண்டோ (வேகப்பந்து வீச்சாளர்), தசுன் ஷனாகே (சகலதுறை வீரர்), ஜெப்ரே வந்தேர்சாய் (சுழற்பந்து), ஷேகன் ஜெயசூர்யா மற்றும் தனஞ்ஜயா டி சில்வா (துடுப்பாட்ட வீரர்கள்) ஆகியோர் புதுமுக வீரர்கள் ஆவார்கள். முதல் ரி-20 ஆட்டம் எதிர் வரும் 30ஆம் திகதியும் இரண்டாவது ரி-20 ஆட்டம் அடுத்த மாதம் 1ஆம் திகதியும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

இந்தியா - இலங்கை டெஸ்ட் தொடர் இந்திய அணி அறிவிப்பு

இந்தியா –இலங்கை அணிகளுக்கிடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடருக்கான கோஹ்லி தலைமையிலான இந்திய அணி நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது.

காயம் காரணமாக தொடர்ந்து அவதியுற்றுவரும் வேகப்பந்து வீச்சாளர் சமி இந்தத் தொடரிலும் பங்கேற்கவில்லை. அதேநேரம் சுழற்பந்து வீச்சாளரான ஹர்பஜன்சிங் இந்த தொடரிலும் இடம்பிடித்துள்ளார்.

இந்திய அணியின் விபரம் வருமாறு கோஹ்லி (தலைவர்), தவான், முரளி விஜய், ரஹானே, கே.எல். ராகுல், அஸ்வின், இஷாந்த் சர்மா, மிஷ்ரா, ஆரோன், ஹர்பஜன், புஜாரா, புவனேஷ்வர் குமார், ரோஹித், சாஹா. உமேஷ்யாதேவ்.

இந்தியா – இலங்கை அணிகளுக்கிடையிலான முதல் டெஸ்ட் ஆகஸ்ட் 12ஆம் திகதியும் இரண்டாவது டெஸ்ட் 20ஆம் திகதியும் மூன்றாவது டெஸ்ட் 28ஆம் திகதியும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

LOGIC - A/L 2015

விசேட கருத்தரங்கு
காலம்:- 25.07.2015 - சனி - 9 am-3pm
எதிர்பார்ப்பு வினாவிடைகள்
வளவாளர்கள், சிரேஸ்ட ஆசிரியர்கள்
S.சயந்தன்-MED, S.துரைரத்தினம்-MED
P.கமல்-MED
* வெளிமாணவரும் பங்குபற்றலாம்
* பதிவுகள் இடம்பெறுகிறது

நாவலர் கல்வி நிலையம்
(NEC) ஆனைப்பந்தி-யாழ்ப்பாணம்
(C 17966) தொடர்பு:- 077 552 6511

கூழ் KOOL

சனி மற்றும் ஞாயிறு தினங்களில்
முற்பகல் 10.30 தொடக்கம்
100/=
Virounthu @ Yarl Pardy
No.49,51, Amman Road
Nallur, Jaffna
T: P: 021 222 6868, 075 987 5800

BRITISH COLLEGE OF HIGHER STUDIES

BCHS

சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும் கற்கை நெறிகள்

Spoken English with Grammar - Quick Learning Course 1½ Months

ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. நீங்கள் ஆங்கிலத்தில் உரையாட 100% உத்தரவாதம் தரப்படும். மாணவர்களின் நலன் கருதி Dictionary, CD/DVD, Tutes போன்றவை இலவசமாக வழங்கப்படும்.

இக் கற்கை நெறிகள் பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.

Diploma In English 2 Months

ஒரு தொழில் தேடுவதாயினும் சரி, உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தேவையும், அதிலே உங்களின் புலமையும் இன்றியமையாதது. இவை யாவையும் கருத்திலே கொண்டு இக் கற்கைநெறி வடிவமைக்கப்பட்டுள்ளது. Spoken English course முடித்த அனைவரும் பயில வேண்டிய பாட நெறி.

* வகுப்புகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாக(Audio & Video visuals) கூடுதல் பயிற்சிகளுடன் நடாத்தப்படும்
* எமது கற்கை நெறிகள் Reading,Writing, Speaking, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச் சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது
* Excellent Teacher's Panel & Individual Attention
* கிழமை, வார இறுதி நாட்களில் காலை, மாலை நேர வகுப்புகள் உண்டு. குழுக்களாக அல்லது நிறுவனங்களைச் சேந்தோர் குழுவாக வரின் அவர்களுக்கு விசேட வகுப்புகள் ஆரம்பிக்கப்படும்.

உத்தியோகத்தர்கட்கு, மாணவர்கட்கு சனி, ஞாயிறு வகுப்புகள் 25.07.2015 காலை 10.00, மாலை 2.30 ஆரம்பமாகின்றது

25.07.2015@10.00am	Batches Starts On	05.08.2015@ 9.00am
01.08.2015@ 9.00am	03.08.2015@10.00am	08.08.2015@ 9.00am

British College of Higher Studies
No.15, Sirambiyady Lane (Off Stanley Road),
Above Sathosa SM, Jaffna. Tel :021-2224550
HotLine(S) 0777585913, 0777222422 0776555677

மரண அறிவித்தல்

திருமதி சிவபாக்கியம் (பேபி) R.K. இரத்தினம்

ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிவபாக்கியம் (பேபி) R.K. இரத்தினம் நேற்று (23.07.2015) வியாழக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் R.K. இரத்தினத்தின் (முன்னாள் பொறியியல் அதிகாரி, இ.போ.சபை, காரைநகர் சாலை) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை-பாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான K.D. இரத்தினம்-ஐராங்கனி தம்பதியரின் மருமகளும், இராஜரூபனின் (றூபன், பொறிவளர், இ.போ. சபை, கோண்டாவில் சாலை) அருமைத் தாயும், பபிதாவின் பாசமிகு மாமியும், நிகேதாவின் அன்புப் பேர்த்தியும், தவமணி (கனடா), காலஞ்சென்ற கனகரத்தினம் மற்றும் குணசிங்கம், நடராசா ஆகியோரின் ஆருயிர்ச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.07.2015) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் உசத்தியோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நாய்க்கண்ணி, ஏழாலை மேற்கு.
தொ.பே: 0776043162, 0213007185

தகவல்: குடும்பத்தினர்.

(63314) (10.6)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

கருத்தரங்கு

திறந்த பல்கலைக்கழக
கல்வி டிப்ளோமா
தெரிவுக்கு
சனி (நாளை)
காலை 8.00 - 2.30
மணிவரை
T.P: 076 688 3394
யாழ்ப்பாணக்கல்லூரி
பட்டப்படிப்புக்கள்
பிரிவு (யாழ் ஆஸ்பத்திரி வீதி கொமர்ஷல் வங்கி அருகில்)
(c 18134)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 24.07.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.